# பகுதி II

# பகுதி II

## மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித் தொழில் தொழிற்பாடுகளும் | i |
| நாணய வெளியீடு | ix |
| வங்கித்தொழில் அபிவிருத்தி | ix |
| பிரதேச அலுவலகங்கள் | x |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | xiii |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | xv |
| வங்கி மேற்பார்வை | xv |
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை | xix |
| நிதியியல் சந்தைகள் | xxiii |
| அபிவிருத்தி நிதி | xxv |
| கிராமியக் கொடுகடன் | xxxi |
| கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி | xLii |
| ஊழியர் சேம நிதியம் | xLiii |
| செலாவணிக் கட்டுப்பாடு | xLiv |
| பொதுப்படுகடன் | xLvi |
| செயலகம் | xLvi |
| தகவல் | Lv |
| ஆராய்ச்சி நடவடிக்கைகள் | Lvii |
| புள்ளி விபரங்களும் கள அளவீடுகளும் | Lviii |
| தரவு செய்முறைப்படுத்தல் | Lix |
| பயிற்சி | Lxi |
| முகாமைத்துவக் கணக்காய்வு | Lxii |
| பணி மனை | Lxiii |
| புதிய கட்டடங்கள் | Lxiii |
| நலன்புரி | Lxiii |
| பாதுகாப்புப் பணிகள் | Lxv |
| ஆளணி | Lxvi |

# கணக்குகளும் வங்கித் தொழில் தொழிற்பாடுகளும்

1997 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ.183,895 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டினை விட 1.3 சதவீதம்கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே, பன்னாட்டு ஒதுக்கின் மொத்த அளவு தனிப்பெரும் சொத்து வகையாக மாற்றமடைந்து மொத்தச் சொத்துக்களில் 1996 இறுதியின் 56.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இறுதியில் 64.7 சதவீதத்திற்கு வகைகூறியது. இது முந்திய ஆண்டினைவிட ஏறக்குறைய 15 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. இவ்வதிகரிப்புக்கு சிறிலங்கா ரெலிகொம் மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி என்பன தனியார் மயமாக்கப்பட்டமையின் பேரில் கிடைக்கப்பெற்ற பெறுகைகளே முக்கிய காரணிகளாகும். உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ.47,965 மில்லியனிலிருந்து ரூ.38,134 மில்லியனுக்கு குறைவடைந்து 20.5 சதவீத வீழ்ச்சியைக் காட்டியமைக்கு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூ.10,000 மில்லியன் பெறுமதியுள்ள திறைசேரி உண்டியல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டமையே காரணமாகும்.

உள்நாட்டுச் சொத்துக்களில், அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் 2.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அரச, அரச உத்தரவாதப் பிணைகள் 57.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய கொடுகடன் நிறுவனங்களுக்குமான நடுத்தர, நீண்டகால கொடுகடன் வசதிகள் 24.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தேறிய மீள் கொடுப்பனவுகளும் செயற்படாக் கடன்களின் பேரிலான ஒதுக்குகளுமே முக்கிய காரணமாகும். 1997இல் வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்களும் 32 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளன.

பொறுப்புக்கள் பக்கத்தில் சுற்றோட்டத்தில் உள்ள நாணயம் ரூ.49,480 மில்லியனிலிருந்து ரூ.53,135 மில்லியனுக்கு 7.4 சதவீதத்தினால் அதிகரித்தது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே, பொறுப்புக்களில் மிகப்பெரும் வகையை வைப்புக்கள் உள்ளடக்கியிருந்ததுடன் மொத்தப் பொறுப்புக்களில் 37.8 சதவீதத்திற்கும் வகைகூறின. வைப்புக்கள் வகையில் அரசின் வைப்புக்கள் 84.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் நியதி ஒதுக்குத் தேவைகளின்கீழ் வர்த்தக வங்கிகள் அவற்றின் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக மத்திய வங்கியுடன் பேணவேண்டிய வைப்பு 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசுகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களினது வைப்புக்கள் 8.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. வங்கியின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் முக்கிய கூறுகளின் ஒப்பீடொன்று அட்டவணை II.2 இல் காட்டப்பட்டுள்ளது.

1997ஆம் ஆண்டிற்கான வங்கியின் மொத்த வருவாய் 1996இன் ரூ.18,711 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.19,498 மில்லியனாக விளங்கிய வேளையில், 1997இன் மொத்தச் செலவினம் முன்னைய ஆண்டின் ரூ.17,211 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.16,848 மில்லியனாக விளங்கியது. வங்கியின் வருமானத்தில் ஏறத்தாழ 77 சதவீதமான வருமானம் வெளிநாட்டு ஒதுக்குகளின் முதலீடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட வேளையில் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி ஏறத்தாழ 23.0 சதவீதத்திற்கு வகைகூறியது. செலவினங்கள் ஒதுக்குகளுக்கு அவசியமான ஒதுக்கீடுகள், அறவிட முடியாக் கடன் தேய்மானங்களுக்கான ஒதுக்குகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் என்பனவற்றினை ஒதுக்கிய பின்னர் வங்கியின் தேறிய இலாபமான ரூ.2,650 மில்லியன் கொண்ட தொகை நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) யின் நியதிகளின் படி அரசின் திரட்டிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டுமெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

1997 திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளவாறான மத்திய வங்கியின் ஐந்தொகையும் 1997 திசெம்பர் 31ஆம் நாளன்று முடிவடைந்த ஆண்டில் வங்கியின் இலாபநட்டக் கணக்குகளும் அட்டவணை II.1 இல் காட்டப்பட்டுள்ளன.

இலங்கை

*1997 திசெம்பர் 31ஆம் நாளில்*

| 1996 திசெம்பர் 31 | | பொறுப்புக்கள் | 1997 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| | | மூலதனக் கணக்கு | | |
| 15,000,000 | | மூலதனம் | 15,000,000 | |
| 985,000,000 | 1,000,000,000 | மிகை | 985,000,000 | 1,000,000,000 |
| | | சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | |
| 47,566,904,953 | | தாள்கள் | 51,071,578,291 | |
| 1,913,084,940 | 49,479,989,893 | குத்திகள் | 2,063,145,589 | 53,134,723,880 |
| | | வைப்புக்கள் | | |
| 3,509,584,531 | | அரசு | 6,475,579,334 | |
| 12,661,615 | | அரச முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் | 63,721,050 | |
| 35,906,962,913 | | வர்த்தக வங்கிகள் | 30,537,080,462 | |
| 34,546,267,006 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்கள் | 31,708,112,019 | |
| 1,025,595 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 50,976,000/- நீங்கலாக கட்டாய சேமிப்பு நிதி | 767,052 | |
| 672,758,388 | 74,758,260,048 | ஏனையவை | 787,446,444 | 69,572,706,361 |
| | 4,925,000,000 | நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம் | | 4,925,000,000 |
| | 560,157,500 | மூலதன உதவுதொகைக் கணக்கு | | 560,125,000 |
| | 0 | மத்திய வங்கிப் பிணைகள் | | 10,000,000 |
| | 50,840,266,330 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் | | 54,692,899,756 |
| | 181,563,673,771 | | | 183,895,454,997 |

1997 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற

| 1996 | | 1997 |
|---|---|---|
| 17,211,291,355 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்கள், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும் காணியும் கட்டடங்களினதும் அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும் உள்ளடக்கும்) நாணயவிதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளும் | 16,848,361,963 |
| 1,500,000,000 | ஆண்டுக்கான தேறிய இலாபம் நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 39(இ) இன் நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்கு. | 2,650,000,000 |
| 18,711,291,355 | | 19,498,361,963 |

கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு :

*1997 திசெம்பர் 31 ஆம் நாள் முடிவுற்ற இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154 (1) இற்கு அமையவும் 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 (1) இற்கு ஏற்கவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.*

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42(2) இன் நியதிகளுக்கிணங்க நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்
கொழும்பு 7.
16 ஏப்பிறல் 1998

எஸ். எம். சப்றி
கணக்காய்வாளர் நாயகம்

## அட்டவணை II.1

மத்திய வங்கி

உள்ளவாறு ஐந்தொகை

(ரூபாய்கள்)

| 1996 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1997 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| | | பன்னாட்டு ஒதுக்கு | | |
| 35,078,617,381 | | வெளிநாட்டிலுள்ள பணங்களும் நிலுவைகளும் | 51,879,914,247 | |
| 67,896,066,443* | | வெளிநாட்டிலுள்ள பிணைகளும் திறைசேரி உண்டியல்களும் | 67,060,376,347* | |
| 105,585,513 | 103,080,269,337 | சிறப்பு எடுப்பனவு உரிமை உடைமைகள் | 24,839,227 | 118,965,129,821 |
| | | உள்நாட்டுச் சொத்துக்கள் | | |
| 28,045,799,947 | | அரசாங்கத்துக்கான முற்பணங்களும் கடன்களும் | 28,660,199,947 | |
| | | ஏனையவற்றிற்கு | | |
| 2,207,066,200 | | - நடுத்தர நீண்ட தவணை | 1,656,483,253** | |
| 52,162,093 | | - குறுந் தவணை | 35,429,989 | |
| 17,100,292,629 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் | 7,221,863,844 | |
| 560,157,500 | 47,965,478,369 | நிதி ஏனைய நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் | 560,125,000 | 38,134,102,033 |
| | 30,517,926,065 | ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் | | 26,796,223,143 |
| | 181,563,673,771 | | | 183,895,454,997 |

* அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1 இல் ரூ. 5,527,675/- முகப்புப் பெறுமானத்திலும் 1965 மே 24இல் ரூ. 57,450/- முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப் பட்ட சந்தைப் பெறுமானங்கள் மேற்குறித்த திகதிகளில் முறையே ரூ. 2,933,697/- ஆகவும், ரூ. 34,340/- ஆகவும் இருந்தன.

** ரூ. 1,000 இலட்சம் கொண்ட சிறப்புக் கடன்கள் மீதான வெளிநின்ற தொகையை உள்ளடக்கும் வெளிநின்ற தொகையானது கடன் இழப்புக்களின் ஏற்பாடுகளுக்கான ரூ. 1,597,040,917/- இருந்து தேறியதாகும்.

### ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1996 | | 1997 |
|---|---|---|
| 18,711,291,355 | பெறப்பட்ட வட்டி ஏனையவை | 19,498,361,963 |
| 18,711,291,355 | | 19,498,361,963 |

ஏ. எஸ். ஜயவர்த்தன
ஆளுநர்

எம். பீ. திசாநாயக்க
முதன்மைக் கணக்காளர்

## அட்டவணை II.2

### மத்திய வங்கியின் சொத்துக்கள் பொறுப்புக்களின் முக்கிய கூறுகளின் ஒப்பீடு

**பொறுப்புக்கள்**

| விடயம் | 1996 இறுதியில் ரூ. மில் | % | 1997 இறுதியில் ரூ. மில் | % |
|---|---|---|---|---|
| மூலதனமும் மிகையும் | 1,000 | 0.6 | 1,000 | 0.5 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 49,480 | 27.2 | 53,135 | 28.9 |
| வைப்புக்கள் | 74,758 | 41.2 | 69,572 | 37.8 |
| நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் | 4,925 | 2.7 | 4,925 | 2.7 |
| மூலதன உதவு தொகை க/கு | 560 | 0.3 | 560 | 0.3 |
| மத்திய வங்கிப் பிணைகள் | -- | -- | 10 | -- |
| ஏனைய பொறுப்புக்கள் * | 50,841 | 28.0 | 54.693 | 29.8 |
| கூறுகளின் பேரில் வழங்கப் பட்ட உத்தரவாதங்கள் | 14,152 | 7.8 | 13,050 | 7.1 |
| கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஒதுக்குகள் | 14,829 | 8.2 | 18,553 | 10)1 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | 5,572 | 3.1 | 5,680 | 3.1 |
| பன்னாட்டு ஒதுக்கு மீள் மதிப்பீட்டுக் கணக்கு | 3,957 | 2.2 | 723 | 0.4 |
| இலாப நட்டக் கணக்கு | 4,461 | 2.5 | 6,171 | 3.3 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியக் கணக்கு | 4,634 | 2.6 | 6.543 | 3.6 |
| ஏனைய | 3,236 | 1.6 | 3,973 | 2.2 |
| மொத்தம் | 181,564 | 100.0 | 183,895 | 100.0 |

**சொத்துக்கள்**

| விடயம் | 1996 இறுதியில் ரூ. மில் | % | 1997 இறுதியில் ரூ. மில் | % |
|---|---|---|---|---|
| பன்னாட்டு ஒதுக்கு | 103,080 | 56.8 | 118.965 | 64.7 |
| உள்நாட்டுச் சொத்துகள் | 47,966 | 26.4 | 38,134 | 20.7 |
| ஏனைய சொத்துக்கள் * | 30,518 | 16.8 | 26,796 | 14.8 |
| வழங்கப்பட்ட உத்தர வாதங்களுக்கான கூறுகளின் பொறுப்பு | 14,152 | 7.8 | 13,050 | 7.1 |
| வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக் கணக்குகள் | 3,669 | 2.0 | 2,471 | 1.3 |
| சீராக்கற் கணக்குகள் பெறத்தக்க தொகை | 3,022 | 1.7 | 2,027 | 1.1 |
| சேகரிப்பிலுள்ள காசு விடயங்கள் | 2,419 | 1.3 | 660 | 0.4 |
| ஏனைய | 7,256 | 4.0 | 8,588 | 4.7 |
| மொத்தம் | 181,564 | 100.0 | 183.895 | 100.0 |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

## கணக்கிடல் கொள்கைகள்

### பொது

இணைக்கப்பட்டுள்ள ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வழமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கிடல் தத்துவங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்திலும் அமைந்துள்ளன.

### வெளிநாட்டு நாணய மாற்றல்

வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப் பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் நிலவிய செலாவணியின் நடுவீதத்தில் மாற்றப்பட்டுள்ளன.

### முதலீடுகள்

அனைத்து முதலீடுகளும் கொள்விலையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

### முற்பணங்கள்

ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள முற்பணங்கள் நிதிக் கூட்டு நிலையங்களிலிருந்து வரவேண்டிய செயற்படாக் கடன்களுக்கான ஒதுக்கீடுகளைக் கழித்துப் பெறப்பட்டவையாகும்.

### நிலையான சொத்துக்கள்

நிலையான சொத்துக்கள் கொள்விலையில் பெறுமானத் தேய்வைக் கழித்துக் காட்டப் பட்டுள்ளன. பெறுமானத் தேய்வு குறைந்து செல்லும் நிலுவை முறையில் பின்வரும் வீதங்களில் அறவிடப்படுகின்றது.

| விடயம் | சதவீதம் |
|---|---|
| கட்டடங்கள் | 2 |
| பொருத்துக்களும் இணைப்புக்களும் | 10 |
| அலுவலகத் தளபாடங்களும் உபகரணங்களும் | 10 |
| உந்து ஊர்திகள் | 10 |
| தனியாள் கணனிகள் | 25 |
| தன்னியக்கக் கருவிகள் | 20 |
| ஏ.எஸ்/400 பிரதான சட்டக் கணனிகள் | 20 |
| நூலக நூல்கள் | 33 1/3 |

அலுவலகத் தளபாடங்கள் மற்றும் கருவிகளின்கீழ் உள்ளடக்கப்பட்டு 10 சதவீத தேய்மானத்தைக் கொண்டிருந்த தன்னியக்கக் கருவிகளும் ஏ.எஸ்.400/பிரதான சட்டக் கணனியும் தனியான கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் 20 சதவீத தேய்மானத்தைக் கொண்டிருந்தன. முன்னர் செலவுகளாகக் கருதப்பட்டு பதிவழிக்கப்பட்ட நூலக நூல்களின் செலவுகள் மீள் மூலதன மயப்படுத்தப்பட்டு 33 1/3 சதவீதத்தில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளன.

நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு அத்தகைய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட முழு ஆண்டுக்குமான தாக இருந்ததுடன் நிலையான சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்ட அல்லது அகற்றப்பட்ட ஆண்டிற்கு பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட மாட்டாது.

## கையிருப்புக்கள்

எழுதுகருவி வகைகள் மற்றும் பொறியியற் களஞ்சியங்கள் மீது ஆண்டில் ஏற்பட்ட மொத்தச் செலவு இலாப நட்டக் கணக்கில் கழிக்கப் பட்டதுடன் முடிவுக் கையிருப்புக்களைப் பொறுத்தவரையில் எவ்வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

## வருமானக் கணிப்பு

காசு அடிப்படையில் கணிக்கப்படும் செயற்படாக் கடன்கள் மீதான வட்டிதவிர, வட்டியும் ஏனைய வருமானங்களும் ஏடுகளில் ஒன்று சேர்ந்த அடிப்படையில் கணிக்கப் படுகின்றன.

## தேறிய இலாபம்

இலாப நட்டக் கணக்கில் வெளிப்படுத்தப் பட்டுள்ள தேறிய இலாபம் அனைத்துச் செலவுகளும் அறவிடப்பட்ட பின்னரும் பின்வருவனவற்றிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னருமாகும்.

(அ) செயற்படாக் கடன்களுக்கான ஒதுக்கீடு.

(ஆ) நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கீடு

(இ) நாணய விதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒதுக்குகளுக்கான ஏனைய அவசிய ஏற்பாடுகளும் ஒதுக்கீடுகளும்.

## வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 87இன் கீழ் வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) ஆண்டொன்றுக்கு 17 சதவீதமாக மாற்றமின்றியிருந்தது.

## குறுங்காலக் கொடுகடன்

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் மற்றும் ஏற்றுமதிக் கொடு கடன் மீள் நிதியிடல் திட்டம் என்பனவற்றின்கீழ் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடல் வசதிகள் முறையே 1994 ஏப்பிறலிலும் மேயிலும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. எனினும் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் நிறுத்தப்படுவதற்கு முன்னர் வேளாண்மைக் கடன்பாட்டாளர்களுக்கு சுழலும் கடன் வசதியை வழங்கிய வர்த்தக வங்கிகளுக்கு சுழலும் கடன் தொகையின் மீது மீள் நிதியிடல் வசதிகள் வழங்கப் பட்டன. இவ் வசதியின் கீழ் வெளிநின்ற தொகை 1996இறுதியின் ரூ.52.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1997 இறுதியில் ரூ.35.4 மில்லியனாக விளங்கியது.

## நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் 1997இல் மாற்றமின்றி ரூ.4,925 மில்லியனாக விளங்கியது. இவ்வாண்டில் பகிர்ந்தளிப்பு நீங்கலாக மீளச் செலுத்தப்பட்ட தொகை ரூ.193.6 மில்லியனாக அமைந்தது.

## நிதிக் கூட்டு நிலையங்களுக்கான கடன் வழங்கல்

1988இன் 78ஆம் இலக்க நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் பிரிவுகள் 20(4)(அ) மற்றும் 21 (1)இன் நியதிகளின்படி மத்திய வங்கி நிதிக் கூட்டு நிலையங்களுக்குத் தொடர்ந்தும் நிதியியல் கடன்களை வழங்கியது. 1997இல் இவ் வசதியின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.15.0 மில்லியனாகவும் 1997 இறுதியில் வெளிநின்ற மொத்தத் தொகை, அறவிட முடியாக் கடன் ஒதுக்குகளுக்கு முன் ரூ.2,585.2 மில்லியனாகவும் இருந்தது.

## ஒதுக்குத் தேவைப்பாடுகள்

வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புகளுக்கெதிரான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 1997 காலப்பகுதியில் இரு தடவைகள் திருத்தப் பட்டன. வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 1997 சனவரி 17ஆம் நாள் தொடக்கம் 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கும் 1997 மாச்சு 28ஆம் நாள் தொடக்கம் 14 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது. வர்த்தக வங்கிகளின் இலங்கைக்கு வெளியே முதலீடு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 1997 சனவரி 17ஆம் நாளிலிருந்து நீக்கப்பட்ட வேளையில் வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் ஏனைய அனைத்து வைப்புக்களின் மீதுமான நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் 1997 மாச்சு 28ஆம் நாள் தொடக்கம் 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டன.

## முதலீட்டுச் சபையல்லா ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணய கடன் வசதி

முதலீட்டுச் சபையல்லா ஏற்றுமதியாளர்களும், மறைமுக ஏற்றுமதியாளர்களும் வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பெறுவதனை வசதிப்படுத்துமுகமாக, 1997 சனவரியில் வங்கி புதிய திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது. இத் திட்டத்தின்கீழ் வர்த்தக வங்கிகள் அவற்றின் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகள் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளூடாக வெளிநாட்டு நாணயத்தில் கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கு அங்கீகாரமளித்துள்ளன. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும், வங்கிகள் அவற்றின் வெ.நா.வ.தொழில் பிரிவுகளினூடாக ஐ.அ.டொலர் 100 மில்லியன்களை வழங்குமாறு ஆலோசனை வழங்கியதுடன் இத்தொகை வங்கிகளுக்கிடையே அவற்றின் மூலதன நிதியத்தின் அடிப்படையில் அவற்றிற்கு ஒதுக்கப்பட்டன.

1997 காலப்பகுதியில் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் ஐ.அ.டொலர் 254 மில்லியனாகும். இதில் ஐ.அ.டொலர் 245 மில்லியன் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளினால் வழங்கப்பட்ட வேளையில் மிகுதி ஐ.அ.டொலர் 9 மில்லியனும் வெ.நா.வ. தொழில் பிரிவுகளினூடாக வழங்கப்பட்டன. 1997 இறுதியில் இத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களில் வெளிநின்ற தொகை ஐ.அ.டொலர் 70.7 மில்லியனாக இருந்தவேளையில் கடன்கள் ஏறத்தாழ ஓராண்டுகால முதிர்ச்சியுடன் 6.5 சதவீதம் தொடக்கம் 10.5 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வழங்கப்பட்டிருந்தன.

## திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

### இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தை

மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் விற்பனைகள் (கழிவிடல்) முன்னைய ஆண்டின் ரூ.16,000 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1997இல் ரூ.19,442 மில்லியனாக விளங்கியது. குறிப்பாக 1997இன் இறுதிப்பகுதியில் நிலவிய மிகையான திரவநிலைமையானது அதிகரித்த விற்பனையை விளைவித்தது. திறைசேரி உண்டியல்களின்

கொள்வனவுகளும் (மீள் கழிவு) அதிகரித்தன எனினும் 1996இன் ரூ.17,000 மில்லியனிலிருந்து 1997இல் ரூ.17,337இற்கு மிகச் சிறிதளவிலேயே அதிகரித்தது.

மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையின் விளைவு வீதங்கள் 1997இன் முதலாந்தர சந்தையில் காணப்பட்ட விளைவு வீதங்களுடன் இசைந்து செல்வதாக இருந்தன. மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில் 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு வீதங்கள் ஆண்டின் தொடக்கத்தின் 17.1 சதவீதத்திலிருந்து ஆண்டின் இறுதிப் பகுதியில் 9.97 சதவீதத்திற்குப் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன. 6மாத 12மாத திறைசேரி உண்டியல்களின் மீதான வீதங்களும் ஆண்டின் தொடக்கப் பகுதியின் முறையே 17.03 சதவீதத்திலிருந்தும் 17.11 சதவீதத்திலிருந்தும் ஆண்டின் இறுதிப்பகுதியில் முறையே 10.09 சதவீதத்திற்கும் 10.21 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்து ஆண்டின் இறுதிப் பகுதியில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையைப் பிரதிபலித்தது.

## திறைசேரி உண்டியல்களுக்கான மீள் கொள்வனவுச் சந்தை

அழைப்புப் பணச் சந்தை வீதங்களின் மிகக் குறைந்த வீதங்களையும் சமநிலைப்படுத்துவதனை வர்த்தக வங்கிகள் அவற்றின் மிகை நிதிகளை மிகக் குறுகிய காலப் பகுதிக்கு முதலீடு செய்வதற்கு வசதியளிப்பதனையும் கருத்திற் கொண்டு 1993 ஒற்றோபரில் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழான திறைசேரி உண்டியல்களின் விற்பனை 1997ஆம் ஆண்டுக் காலப் பகுதியிலும் தொடர்ந்து தொழிற்பட்டது.

ஓர் இரவு மீள் கொள்வனவு வீதம் ஆண்டின் தொடக்கத்தின் 12.75 சதவீதத்திலிருந்து 1997 மாச்சு இறுதியில் 7 சதவீதத்திற்குப் படிப்படியாக குறைக்கப்பட்டது. இது சந்தையில் காணப்பட்ட மிகையான ரூபாவின் திரவத் தன்மையைப் பிரதிபலித்தது. இது ஏப்பிறலுக்கும் நவெம்பர் மாதத்திற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் 7 சதவீதத்திற்கும் 9 சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டதுடன், 1997 திசெம்பர் முதற் கிழமையில் 9.5 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. எனினும் 1997 திசெம்பர் மாதத்தில் ரூபா திரவத்தன்மை படிப்படியாக இறுக்கமாக்கப்பட்டதன் விளைவாக ஆண்டின் இறுதியில் மீள் கொள்வனவு வீதம் 11 சதவீதத்திற்கு அதிகரித்தது.

இவ்வாண்டுப் பகுதியில் மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின்கீழ் விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்த அளவு 1996இன் ரூ.404,000 மில்லியனிலிருந்து 1997இல் ரூ.449,589 மில்லியனுக்கு உயர்ந்து 11 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தமையானது வர்த்தக வங்கிகளின் மீள் கொள்வனவு வியாபாரம் மேலும் விரிவடைந்தமையை எடுத்துக்காட்டுவதாயுள்ளது.

## நேர்மாற்று மீள் கொள்வனவு உடன்படிக்கைகள

அழைப்புப் பணச் சந்தை வட்டி வீதங்களின் உச்ச மட்டத்தினைச் சமநிலைப் படுத்தும் எண்ணத்துடன் 1995 நவெம்பரில் மத்திய வங்கி நேர்மாற்று மீள் கொள்வனவுத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது. 1997 காலப்பகுதியில் சந்தையில் தொடர்ந்து காணப்பட்ட திரவத்தன்மையைக் கருத்திற் கொண்டு, இலங்கை மத்திய வங்கிக்கு அதன் நேர்மாற்று மீள் கொள்வனவுத் திட்டத்தினூடாக நிதிகளை வழங்கும் அவசியமெதுவும் காணப்படவில்லை. இதன் விளைவாக 1997இல் இத் திட்டம் செயலற்றுக் காணப்பட்டது.

## இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து செல்வோர்க்கான உதவுதொகையும் மிகைக் கொடுப்பனவும்

1964இன் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புவதற்காக அரசின் சார்பில் கிடைக்கச் செய்யப்பட்ட மொத்த உதவிக் கொடுப்பனவுகள் 1996இன் ரூ.125,953 உடன் ஒப்பிடுகையில் 1997இல் ரூ.48,191ஆக விளங்கின. மிகைக் கொடுப்பனவுகள் 1996இன் ரூ.7,475 உடன் ஒப்பிடுகையில் 1997இல் ரூ.2,475ஆக விளங்கியது.

## ஏற்றுமதியாளர்களுக்கான இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடி

ஏற்றுமதியாளர்களுக்குச் செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிகள் தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில் வங்கி 1996இன் ரூ.1,043 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1997இல் ரூ.1,028 மில்லியன் கொண்ட மொத்தத் தொகையை வர்த்தக வங்கிகளுக்கு மீளளித்தது.

## வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள

இலங்கை ரூபாவிற்கு எதிராக ஐ.அ.டொலரின் உடன் கொள்வனவு, விற்பனவு வீதங்களையும் முன்மாற்றுக் கொள்வனவு வீதங்களையும் தீர்மானிப்பதன் வாயிலாக வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளில் மத்திய வங்கி தொடர்ந்தும் ஈடுபட்டது. இது, வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை பன்னாட்டுப் பணச் சந்தையிலும், மூலதனச் சந்தைகளிலும் தொடர்ந்து முதலிடு செய்தது.

1997இல் மத்திய வங்கியினால் இலங்கையின் வர்த்தக வங்கிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் மொத்த ரூபாப் பெறுமதி ரூ.8,118 மில்லியனாக விளங்கிய வேளையில் வர்த்தக வங்கிகளுக்கான வெளிநாட்டு நாணயங்களின் விற்பனை ரூ.9,163 மில்லியனாக விளங்கியது. (அட்டவணை II.3) இது1996 இன் ரூ.5,222 மில்லியன்கொண்ட கொள்வனவுகளுடனும் ரூ.10,881 மில்லியன் கொண்ட விற்பனைகளுடனும் ஒப்பிடத்தக்கதாகும்.

### அட்டவணை II.3

1997 இல் வர்த்தக வங்கிகளுடன் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள்

ரூ.மில்

| மாதம் | உடன் கொள்வனவுகள் | உடன் விற்பனைகள் | முன்மாற்றுக் கொள்வனவுகள் |
|---|---|---|---|
| சனவரி | - | 322 | - |
| பெப்புருவரி | - | 1,207 | - |
| மாச்சு | - | - | - |
| எப்பிறல் | - | 3,096 | - |
| மே | 37 | 1,166 | - |
| யூன் | 805 | - | - |
| யூலை | 1,068 | - | - |
| ஓகத்து | 6,208 | - | - |
| செத்தெம்பர் | - | - | - |
| ஒற்றோபர் | - | - | - |
| நவெம்பர் | - | - | - |
| திசெம்பர் | | 3,552 | - |
| மொத்தம் | 8,118 | 9,163 | - |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

1997இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தினூடான கொடுக்கல் வாங்கல்களின் மொத்த ரூபாப் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ.33,828 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.37,236 மில்லியனாக விளங்கியது. 1997இல் வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி 1996இன் ரூ.28,271 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.26,879 மில்லியனாக விளங்கியது. ஆய்விற்குரிய காலப் பகுதியில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய ஒழுங்குகளின் கீழ் 'சுவப்' வசதிக்கு இலங்கை வழங்கிய உதவுதொகை ரூ.494 மில்லியனாக விளங்கியது.

## கட்டாய சேமிப்புக்கள் நிதியம்

மத்திய வங்கி 1971இன் 6ஆம் இலக்க கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தினதும் 1972இன் 15ஆம் இலக்க வருமான உச்சவரம்பு, கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தினதும் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலராகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அரசின் சார்பில் கட்டாய சேமிப்புக்கள் நிதியத்தினையும் நிருவகித்தது.

## அரச கணக்குகள்

அரசின் வங்கியாளர் என்ற முறையில் அரச திணைக்களங்கள், அரச முகவர் நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள், குறிப்பிட்ட நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளை மத்திய வங்கி தொடர்ந்தும் பேணியது. 1997இன் இறுதியில் வங்கியினால் பேணப்பட்ட கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 165ஆக விளங்கியது.

## வெளிநாட்டு நிதி

ஆய்வுக்குரிய ஆண்டில் மத்திய வங்கி பல்வேறுபட்ட வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகள் என்பனவற்றின் கீழ் கிடைக்கத்தக்கதாக இருந்த பகிர்ந்தளிப்புக்களைத் தொடர்ந்தும் பெற்ற வேளையில் அரசின் சார்பில் வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பனவற்றின் மீள் கொடுப்பனவுகளையும் மேற்கொண்டது.

## நாணய வெளியீடு

இலங்கை மத்திய வங்கி தனியொரு நாணய வெளியீட்டு மேலாண்மையாளராக விளங்கி 1997ஆம் ஆண்டுக் காலப் பகுதியிலும் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்காக இலங்கையில் சட்டரீதியான நாணய வழங்கல் பணியினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 1997 இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயம் 1996 இறுதியின் ரூ.49,480 மில்லியனுக்கு எதிராக ரூ.53,135 மில்லியனாக இருந்தது.

நாணயத் திணைக்களத்தின் நாணயத் தொழிற்பாடுகள் சிலவற்றிற்கு வசதியளிப்பதற்காக 1997 காலப்பகுதியில் மத்திய வங்கி திறைசேரி கட்டடத்தின் கீழ்த்தளத்தின் ஒரு பகுதியில் ஒரு நிலவறையையும் மற்றும் துணை நிலவறை ஒன்றினையும் திருத்தி அமைத்தது. நாணயத் திணைக்களத்தின் முக்கியமான மூன்று பிரிவுகள் அதாவது வழங்கல் பிரிவு, வைப்புப் பிரிவு மற்றும் நாணயங்களை வேறுபடுத்தல் கணக்கிடுதல் மற்றும் தரம்பிரித்தல் பிரிவு என்பன 1997 திசெம்பரிலிருந்து புதிய இடத்திற்கு மாற்றப்பட்டன.

கொழும்பு 10இலுள்ள மக்கள் வங்கியின் ஏரிக்கரைக் கிளையிலும், கொழும்பு 1 கோட்டையிலமைந்துள்ள இலங்கை வங்கி கோபுரக் கட்டடத்திலும் அமைந்து பொது மக்களின் நாணய வழங்கலுக்குப் பொறுப்பாக இருந்த இருபிரிவுகளும் 1997இல் ஒன்றிணைக்கப் பட்டு சோனக இஸ்லாமிய கலாச்சார மண்டபம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1இல் நிறுவப்பட்டு பொதுமக்களுக்கு தடையற்ற நாணய வழங்கல் உறுதி செய்யப் பட்டது.

தேசிய மற்றும் சருவதேச முக்கிய நிகழ்வுகளை நினைவுகூரு முகமாக மத்திய வங்கி சிறப்பு நாணயக் குத்திகளை வெளியிடுகின்றது. 1997இல் நாணயத் திணைக்களம், இலங்கை சுதந்திரமடைந்த 50 வருட நினைவு விழாவைக் குறிக்கும் முகமாக ரூ.200 பொலிமர் நாணயத் தாளை வெளியிடுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டது. இப் புதுவகையான நாணயத் தாள் இலங்கையில் முதன்முதல் வெளியிடப் பட்டதும் இலங்கையின் வரலாறு மற்றும் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பட வரைவுகளைக் கொண்டதாகவும் விளங்கியது. இத்துடன் நாணயவியலாளர்களுக்காக வேண்டி நாணயத்துடன் சார்ந்த கவர்ச்சிகரமான தாள் மடிப்பு ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

மேலும் தங்கம், வெள்ளி மற்றும் இரு உலோகம் கலந்த மூன்று ஞாபகார்த்தக் குத்திகளை வழங்குவதற்கும் ஒழுங்குகள் செய்யப் பட்டன. இந்தக் குத்திகளின் சட்டப்படியான பெறுமதி ரூ.5000, ரூ.1000 ரூ.10ஆகும். இலங்கையில் இரு உலோகம் கலந்த ரூ.10 நாணயக்குத்தி முதற்றடவையாக வெளியிடப் பட்டமை குறிப்பிடத்தக்கது. தங்கம் மற்றும் வெள்ளியிலான ஞாபகார்த்த நாணயக் குத்திகளை சட்டரீதியான பெறுமதிக்குமேலாக விற்பனை செய்வதற்கு முன்மொழியப்பட்டது.

## வங்கித்தொழில் அபிவிருத்தி

வங்கித் தொழில் தொடர்பான கொள்கை உருவாக்கம், வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், வர்த்தக வங்கிகளினதும், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் கிளைகள் ஆகியவற்றை நிறுவுதல் தொடர்பான வங்கித் தொழில் சட்டத்தை நடைமுறைப் படுத்துதல் நிதியியற் கருவிகளை அறிமுகம் செய்வதற்கான எடுத்துரைப்புக்களை மதிப்பீடுசெய்தல் ஆகியவற்றை வங்கித் தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் முதன்மைத் தொழிற்பாடுகள் உள்ளடக்கியுள்ளன. மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் இணைப்பு வேலைகளை மேற்கொள்வதுடன் அவற்றின் செயலாற்றத்தையும் இத் திணைக்களம் கண்காணிக்கின்றது. மேலும், இத் திணைக்களம் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் செயலாற்றத்தினைக் கண்காணிப்பதுடன் அவ் வங்கிகளுக்கான கொள்கை உருவாக்கத்தினையும் மேற்கொள்ளுகின்றது. பிரதேச அபிவிருத்தி வங்கிகளை நிறுவுவது தொடர்பான ஆரம்ப வேலைகளையும் திணைக்களம் கவனித்துக் கொண்டது.

1997இல் வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி, வரையறுக்கப்பட்ட சனச அபிவிருத்தி வங்கி ஆகிய இரண்டு சிறப்பியல்பு வாய்ந்த உள்நாட்டு வங்கிகளை நிறுவுவதற்கான உரிமப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. வங்கித் தொழில் சட்டத்தின் அட்டவணை IVஇல் குறித்துரைக்கப்பட்ட வாணிபங்களை மேற்கொள்ள இவை அனுமதிக்கப்பட்டுள்ளன. எனினும், நடைமுறைக் கணக்குகளின் கையாளலை உள்ளடக்கிய வர்த்தக வங்கித் தொழில் தொழிற்பாடுகளை இவை மேற்கொள்ள இயலாது.

வர்த்தக வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் ஆகியன தொடர்பான சில விபரங்கள் 1997இன் இறுதியிலுள்ளவாறு அட்டவணை II-4 இல் தரப்பட்டுள்ளன. அட்டன் நசனல் வங்கியினால் இந்தோசுயஸ் வங்கியின் கொழும்புக் கிளையினது அலுவல்கள் பொறுப்பேற்கப்பட்டமையுடன் 1997இல் தொழிற்பாட்டிலிருந்த வெளிநாட்டு வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை ஒன்றால் குறைக்கப்பட்டது. வர்த்தக வங்கிகள், பிரதேச கிராமிய வங்கிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் ஆகியன 26 வர்த்தக வங்கிகளையும் (8 உள்நாட்டு வர்த்தக வங்கிகள் மற்றும் 18 வெளிநாட்டு வர்த்தக வங்கிகள்) 17 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளையும் மற்றும் 6 சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கியுள்ளன.

## வங்கிக்கிளை விரிவாக்கம்

1997இல் 119 வர்த்தக வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கான ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. இலங்கை வங்கியினால் இந்தியாவில் கோயம்புத்தூரில் திறக்கப்பட்ட வெளிநாட்டுக் கிளையொன்றையும் இது உள்ளடக்கும். மொஸ்கோவில் பிரதிநிதித்துவ அலுவலகமொன்றைத் திறப்பதற்கும் இலங்கை வங்கிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், செலான் வங்கி 8 பிரதேச அலுவலகங்களைத் திறப்பதற்கும், மக்கள் வங்கி பிரதேச அலுவலகமொன்றைத் திறப்பதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் ஆகிய இரண்டினாலும் திறக்கப்பட்ட புதிய வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 111ஆக விளங்கியது. இதில் உள்நாட்டு வர்த்தக வங்கிகள் 108 கிளைகளையும், வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் 03 கிளைகளையும் திறந்திருந்தன. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் இவ்வாண்டில் புதிய கிளையொன்றைத் திறந்தன. 1997இல் 10 கிளைகளைத் திறப்பதற்கென சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினால் திறக்கப்பட்ட கிளைகளின் மொத்த எண்ணிக்கை 10ஆக விளங்கியது. வர்த்தக வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் ஆகியன 122ஆல் விரிவடைந்து 1997இன் இறுதியில் 1,461 கிளைகளைக் கொண்டிருந்தன.

## பிரதேச அலுவலகங்கள்

மாத்தறை, அனுராதபுரம் மற்றும் மாத்தளை ஆகிய இடங்களிலுள்ள மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் 1997 காலப்பகுதியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் தமக்கு ஒதுக்கப்பட்ட மரபு ரீதியான மத்திய வங்கித் தொழில் பணிகள் ஆகியவற்றைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. பிரதேச அலுவலகங்களின் முக்கிய நடவடிக்கைகள், நாணயத் தொழிற்பாடுகள் (மாத்தறையிலும் அனுராதபுரத்திலும்) காசோலைத் தீர்ப்பனவு நடவடிக்கைகள், தரவு சேகரிப்பு, நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 1996/97இல் பங்குபற்றல், நன்மை பெறுநர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் பரிசோதனை, பிரதேச அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு உதவுதல், அப் பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள அரச திணைக்களங்கள், முகவர் நிலையங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

மாத்தறை பிரதேச அலுவலகம் தொடர்ந்தும் தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்திச் செயற்றிட்டம், தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம், நிரந்தரப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் சுரதுற சிறிய கொடுகடன் திட்டம் மற்றும் சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளைக் கையாளுகின்றது. தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்திச் செயற்றிட்டம், தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் சுரதுற திறிய நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றின் சார்பில் இப் பிரதேசத்திலுள்ள பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களின் அலுவலர்களுக்கான பயிற்சிச் செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை நடாத்துவதில் பிரதேச அலுவலகமும் துணைபுரிந்தது. தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச அலுவலகமானது, ஏறக்குறைய 100 செயற்றிட்டங்களை அவற்றின் ஆற்றலைப் பரிசோதிப்பதற்கெனவும் மாத்தறை, காலி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் தற்போது நடைமுறையிலுள்ள செயற்றிட்டங்க

## அட்டவணை II.4

### வங்கித் தொழில் நிறுவனங்களின் அமைப்பும் வங்கிக் கிளைகளின் பரம்பலும்

| வகை | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997(அ) |
|---|---|---|---|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை | 43 | 44 | 44 | 47 | 48 | 49 |
| 1.1 வர்த்தக வங்கிகள் | 23 | 23 | 23 | 26 | 27 | 26 |
| 1.1.1 உள்நாட்டு வர்த்தக வங்கிகள் | 6 | 6 | 6 | 8 | 8 | 8 |
| 1.1.2 வெளிநாட்டு வங்கிகள் | 17 | 17 | 17 | 18 | 19 | 18 |
| 1.2 பி. கி. அ. வங்கிகள் (ஆ) | 16 | 17 | 17 | 17 | 17 | 17 |
| 1.3 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (இ) | 4 | 4 | 4 | 4 | 4 | 6 |
| 1.3.1 சேமிப்பு வங்கிகள் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| 1.3.2 அபிவிருத்தி வங்கிகள் | 3 | 3 | 3 | 3 | 3 | 6 |
| 2. வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (ஈ) | 1067 | 1108 | 1156 | 1209 | 1339 | 1461 |
| 2.1 வர்த்தக வங்கிக் கிளைகள் | 820 | 854 | 890 | 936 | 1058 | 1169 |
| 2.1.1 உள்நாட்டு வங்கிகளின் கிளைகள் | 790 | 820 | 853 | 897 | 1019 | 1127 |
| முதன்மைக் கிளைகள் (உ) | 701 | 734 | 761 | 795 | 826 | 857 |
| வே. ப. நி. கிளைகள் | 34 | 29 | 28 | 19 | 17 | 14 |
| கச்சேரிக் கிளைகள் | 24 | 24 | 23 | 23 | 23 | 23 |
| விரிவாக்க கொடுப்பனவு அலுவலகங்கள் (ஊ) | 25 | 27 | 32 | 41 | 47 | 56 |
| அடைவு/சேமிப்பு நிலையங்கள் | 4 | 4 | 7 | 15 | 101 | 172 |
| வெளிநாட்டுக் கிளைகள் (எ) | 2 | 2 | 2 | 4 | 4 | 4 |
| வெளிநாட்டு விரிவாக்கக் கிளைகள் | - | - | - | - | 1 | 1 |
| 2.1.2 வெளிநாட்டு வங்கிக் கிளைகள் | 30 | 34 | 37 | 39 | 37 | 42 |
| முதன்மைக் கிளைகள் (உ) | 29 | 33 | 36 | 37 | 38 | 38 |
| விரிவாக்க அலுவலகங்கள் | 1 | 1 | 1 | 2 | 2 | 4 |
| 2.2 பி. கி. அ. வ. கிளைகள் | 156 | 163 | 169 | 171 | 175 | 176 |
| 2.3 சிறப்பியல்வு வாய்ந்த வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (ஏ) | 91 | 91 | 97 | 102 | 106 | 116 |
| 2.3.1 தேசிய சேமிப்பு வங்கிக்கிளைகள் | 84 | 85 | 90 | 95 | 97 | 99 |
| 2.3.2 தேசிய அபிவிருத்தி வங்கிக்கிளைகள் | 7 | 6 | 7 | 7 | 9 | 17 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

(ஆ) 1985 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிகி அவ சட்டத்தின் கீழ் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.

(இ) திருத்தப்பட்ட வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளாக தொழிற்படுவதற்கு உரிமங்கள் தேவைப்படும் வங்கிகள்.

(ஈ) கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் நீங்கலாக.

(உ) திருத்தப்பட்ட எண் தொகைகள் .

ளைப் பொறுத்த வரையில் செயற்றிட்ட நிதியங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காகவும் மதிப்பீடு செய்தது. சுரதுற திறிய கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மாதிரி அளவீடொன்று மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் நடாத்தப் பட்டது. இப் பிரதேசத்திலுள்ள அரச திணைக்களங்களினாலும், நிதி நிறுவனங்களினாலும் நடைமுறைப் படுத்தப்பட்ட ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் இப் பிரதேச அலுவலகம் உதவியளித்தது. மேலும், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் பல கிளைகளின் பரிசோதனையையும் இது மேற்கொண்டது. பிரதேச அலுவலகத்தின் நாணயப் பிரிவு, பொதுமக்களுக்கு நாணயச் செலாவணி

வசதிகளையும், அப் பிரதேசத்திலுள்ள வர்த்தக வங்கிகளுக்கு வைப்பு மற்றும் மீளப் பெறுதல் வசதிகளையும் தொடர்ந்தும் வழங்கியது. இவ்வாண்டில் ரூ.3,592 மில்லியன் கொண்ட 215,046 காசோலைகள் மாத்தறையிலுள்ள பிரதேச காசோலைத் தீர்ப்பனவு அகத்தில் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

அநுராதபுரத்திலுள்ள பிரதேச அலுவலகம், அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரச திணைக்களங்கள் மற்றும் முகவர் நிலையங்களுடன் இணைந்து, வேளாண்மை, பாற்பண்ணைத் தொழில், அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி ஆகிய துறைகளில் 21 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது.-இவை கிராமிய சமுகத்தவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடனேயே மேற்கொள்ளப் பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 350 ஆட்கள் வருகை தந்திருந்தனர். இவை வேளாண் மைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நவீன பயிர்ச்செய்கை, நீர் முகாமைத்துவம் மற்றும் பழச் செய்கை தொடர்பான விரிவுரை களையும் உள்ளடக்கியிருந்தன. தொழில் முயற்சி யாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின்கீழ் வேலையற்ற இளைஞர்களுக்கு மூலவளங்களைக் கண்டறிதல், வங்கித்தொழில் மற்றும் சந்தைப் படுத்தல் ஆகிய துறைகளில் பயிற்சி வழங்கப் பட்டது. பிரதேச அலுவலகம் உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக அநுராதபுரம், பொலநறு வை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் ஆறு கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்திய துடன் 1,459 மாணவர்கள் இதில் பங்குபற்றினர். அரசினாலும், வங்கித் தொழில் துறைகளினாலும் வழங்கப்படும் வசதிகள் பற்றிய அறிவை ஏற்படுத்துவதற்காக கிராமிய விவசாயிகளிடையே 'சனசமுவ' கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்யப் பட்டிருந்தன. வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆகிய இரு சிறப்புச் செயற்றிட்டங் களையும் பிரதேச அலுவலகம் கண்காணித்தது. பங்கு பற்றும் இரு அரச சார்பற்ற நிறுவனங்க ளுக்கும் (இரு செயற்றிட்டங்களிலும் ஈடுபட்டுள்ள) நான்கு ஆய்வரங்குகளூடாக வங்கித்தொழிலில் பயிற்சி வழங்கப்பட்டது. பிரதேசஅலுவலகம் இரு மாதிரி அளவீடுகளை மேற்கொண்டது. ஒன்று, சுரதுற திரிய கொடுகடன் திட்டத்தின்கீழான கடன்கள் பற்றியும் மற்றது மிளகாயைச் சந்தைப் படுத்துதலும் இப் பிரதேசத்தில் அவை தொடர் பான பிரச்சினைகள் பற்றியதுமாகும். மேலும், பிரதேச அலுவலகமானது அநுராதபுரம், குருநாகல் மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் கிளைகளில் பரிசோதனை களை மேற்கொண்டது. பிரதேச அலுவலகம் வைப்புக்களை ஏற்றுக் கொண்டதுடன் வர்த்தக வங்கிகளுக்கு நாணயத் தையும் வழங்கியது. இவ்வாண்டில் ரூ.2,222 மில்லியன் பெறுமதியான 205,354 காசோலைகள் பிரதேசத் தீர்வகத்தில் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

மாத்தளை பிரதேச அலுவலகம் பாற் பண்ணை, கோழிப்பண்ணை, வீட்டுத் தோட்டம், சுய வேலைவாய்ப்புக்கு வழியமைக்கும் விதத்தில் அரிசியையும், நாற்றுப் பண்ணைகளையும் ஒழுங்குமுறைப்படி தயாரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு விடயங்கள் தொடர்பான ஆறு நன்மை பெறுநர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு அவசியமான விடயங்கள் பற்றியும் இரண்டு ஆய்வரங்குகள் நடாத்தப் பட்டன. 1,422 மாணவர்கள் இந் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றினர். பிரதேச அலுவலகம் இப் பிரதேசத்தில் புதிய செயற்றிட்டங்களைத் தொடர்ந்தும் அடையாளம் கண்டது. இக்காலப் பகுதியில் பிரதேச அலுவலகம் சிறு அளவுக் கைத்தொழில் செயற்றிட்டங்கள் மீதான 18 சாத்திய வள ஆய்வு அறிக்கைகளைத் தயாரித் தது. அப் பிரதேசத்திலுள்ள நிதி நிறுவனங்களு க்கு அறிக்கைகள் அனுப்பப்பட்ட மையால் தொழில் முயற்சியாளர்களுக்கு அவை உதவக்கூடியதாயிரு க்கும். கிராமப் பகுதிகளில் வங்கித்தொழில் வசதிகள் பற்றிய அறிவினை கமக்காரர்களுக்கு வழங்குவதற்கென 'சனசமுவ' கூட்டங்களை நடாத்தியதுடன், சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சிகளையும், விற்பனைகளையும் நடாத்து வதற்கும் உதவியளித்தது. சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் பல்லாண்டுப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆகியவை தொடர்பான நடவடிக்கைகளைப் பிரதேச அலுவலகம் தொடர்ந்தும் கையாண்டது. மேலும், இது பல பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் பரிசோதனைகளை மேற்கொண்டது டன், அப் பிரதேசத்திலுள்ள பிரதேச கிராமிய

அபிவிருத்தி வங்கிகளின் நடவடிக்கைகளையும் பரிசோதித்தன. மாத்தறையிலும் கண்டியிலுமுள்ள இரு பிரதேச தீர்வகங்களும் முறையே ரூ.2,061 மில்லியன் கொண்ட 164,973 காசோலைகளையும் ரூ.22,162 மில்லியன் கொண்ட 691,955 காசோலைகளையும் தீர்ப்பனவு செய்தன.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

1997ஆம் ஆண்டில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் வேளாண்மை, மீன்பிடி, குடிசை மற்றும் சிறிய அளவுக் கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கும் மற்றும் கிராமியத் துறையிலுள்ள ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் தொடர்ந்தும் நிதியை வழங்கியது.

### பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் கிளை வலையமைப்பு

பதினெழு மாவட்டங்களில் தொழிற்படும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 1997இன் இறுதியில் 17ஆக மாற்றமின்றியிருந்தது. 1997 பெப்புருவரியில் இரத்தினபுரியில் கொடகாவெல கிளை திறக்கப்பட்டதுடன் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளினது மொத்த எண்ணிக்கை 1996இன் 175இலிருந்து 1997இல் 176இற்கு அதிகரித்தது. (அட்டவணை 11.5)

பிரதேச அபிவிருத்தி வங்கிகளை விரைவில் நிறுவுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் கிளை விரிவாக்கமானது குறிப்பிடத்தக்களவில் குறைக்கப்பட்டது. பிரதேச அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டவுடன் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் அலுவல்கள் பிரதேச அபிவிருத்தி வங்கியில் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன் மேலதிக கிளை விரிவாக்கம் பற்றி இவ்வங்கிகளே தீர்மானிக்கும்.

### வைப்புக்களைத் திரட்டல்

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 1997 காலப்பகுதியில் தொடர்ந்தும் வைப்புக்க

**அட்டவணை II.5**

**பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கிளை வலையமைப்பு**

| பெயர் | நிறுவப்பட்ட திகதி | தலைமை அலுவலகம் அமைவிடம் | திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1985-1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1997 இறுதியில் மொத்தம் |
| 1. களுத்துறை | 85.07.13 | புளத்சிங்கள | 12 | - | 1 | 2 | - | - | - | 1 | - | 16 |
| 2. மாத்தறை | 85.07.28 | மாத்தறை | 8 | - | - | 4 | - | - | - | 1 | - | 13 |
| 3. குருநாகல் | 85.08.10 | குளியாப்பிட்டி | 14 | 1 | - | 2 | - | - | - | - | - | 17 |
| 4. அநுராதபுரம் | 85.08.12 | அநுராதபுரம் | 7 | - | 3 | 1 | - | - | - | - | - | 11 |
| 5. அம்பாந்தோட்டை | 86.12.13 | அம்பலாந்தோட்டை | 6 | 1 | - | 1 | - | - | - | - | - | 8 |
| 6. கேகாலை | 87.02.08 | கேகாலை | 11 | 1 | -1 | 1 | 1 | 1 | - | - | - | 14 |
| 7. புத்தளம் | 87.07.11 | சிலாபம் | 6 | 2 | 1 | 1 | - | - | - | - | - | 10 |
| 8. காலி | 87.08.17 | எல்பிட்டிய | 9 | - | - | 3 | - | - | - | - | - | 12 |
| 9. கண்டி | 87.10.13 | கண்டி | 9 | 2 | - | 2 | - | - | 1 | 1 | - | 15 |
| 10. நுவரெலியா | 88.10.10 | நுவரெலியா | 4 | 2 | - | 2 | - | - | - | - | - | 8 |
| 11. மொனராகலை | 88.10.11 | புத்தளை | 3 | 1 | 2 | - | - | - | - | - | - | 6 |
| 12. பதுளை | 90.10.13 | பதுளை | - | 4 | 2 | 3 | - | 4 | - | - | - | 13 |
| 13. பொலனறுவை | 91.05.17 | பொலனறுவை | - | - | 4 | 2 | 1 | - | - | - | - | 7 |
| 14. மாத்தளை | 91.06.21 | மாத்தளை | - | - | 5 | 1 | - | - | - | - | - | 6 |
| 15. இரத்தினபுரி | 91.09.30 | இரத்தினபுரி | - | - | 4 | 2 | 1 | - | - | - | 1 | 8 |
| 16. அம்பாறை | 92.02.24 | அம்பாறை | - | - | - | 5 | 2 | - | - | - | - | 7 |
| 17. கம்பகா | 93.06.07 | கம்பகா | - | - | - | - | 2 | 1 | 1 | 1 | - | 5 |
| மொத்தம் | | | 89 | 14 | 21 | 32 | 7 | 6 | 2 | 4 | 1 | 176 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

ளைத் திரட்டின. கிராமியப் பகுதிகளில் சேமிப்புக் களைத் திரட்டுவதற்காக பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் பல கவர்ச்சிகரமான சேமிப்புத் திட்டங்களை அறிமுகம் செய்ததுடன் நடமாடும் வங்கித் தொழில் பணிகளையும் வழங்கின. ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களி னிறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் திரட்டப்பட்ட மொத்த வைப்புக்கள் ரூ.2,404 மில்லியனாக விளங்கியது. இது 1996இன் இறுதியிலிருந்த மட்டத்தைவிட 18 சதவீத அதிகரிப்பைக் கொண்டதாகும். இவ் வைப்புக்கள் தொடர்பான கணக்குகளின் எண்ணிக்கை ஒரு மில்லியனை விஞ்சியதுடன் 1996இன் இறுதியில் 993,434இலிருந்து 1997 இறுதியில் 1,037,981 ஆகியது. சேமிப்பு வைப்புக்கள், இவ்வைப்புக்களின் பெரும்பகுதி யைத் தொடர்ந்தும் உள்ளடக்கியதுடன் மொத்தத்தின் 70 சதவீதத்திற்கு வகைகூறின. சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புக்களின் சராசரிப் பெறுமதி 1996இன் ரூ.1,643இலிருந்து 1997இல் ரூ.1,661ஆக சிறிதளவால் அதிகரித்த வேளையில் நிலையான வைப்பொன்றின் சராசரிப் பெறுமதி 1996இன் ரூ.43,160இலிருந்து 1997இல் ரூ.42,487இற்கு வீழ்ச்சியடைந்தது.

## கொடுகடன் வழங்கல்

ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 274,365 கடன்கள் தொடர்பாக ரூ.1,781 மில்லியன் கொண்ட கடன்களையும் முற்பணங்களையும் பகிர்ந்தளித்தன. அதேகாலப் பகுதியில், அதாவது கடந்த ஆண்டு சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 207,505 கடன்கள் தொடர்பாக ரூ.1,403 மில்லியன்கொண்ட தொகையை மட்டுமே பகிர்ந்தளித்தன. எனினும், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 1996இன் இறுதியில் ரூ.2,294 மில்லியனாக அதிகரித்த தமது வாடிக்கையாளர் அடிப்படை மற்றும் அவர்களின் மட்டம் ஆகியவற்றினை மீளக் கட்டியெழுப்புவதற்காக கடந்த ஆண்டின் பிற்பகுதியில் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வழங்கலைக் குறிப்பிட்டளவில் அதிகரித்தன.

கடந்த காலத்தைப் போலவே பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், தம்மால் அறிமுகம்செய்து வைக்கப்பட்ட பல கடன் திட்டங்களின்கீழ் தொடர்ந்தும் நிதி உதவியை வழங்கின. இவை, ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்களுக்கான சிறப்புக் கொடுகடன் திட்டங்கள், சமுர்த்தி பெறுநருக்கான சுயவேலை வாய்ப்புக் கடன்கள், முச் சக்கரவண்டிகளின் கொள்வனவுக்கும், பராமரிப்பு நிலையங்களையும் முச்சக்கர வண்டிகளுக்கான உதிரிப் பாகங்களை விற்பனை செய்யும் கடைகளையும் அமைப்பதற்கு மான கடன்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

## ஏனைய நடவடிக்கைகள்

முன்னைய ஆண்டறிக்கைகளில் குறிப்பிடப் பட்டது போல, பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமக்கு வழங்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளை நிறைவு செய்வதற்காக பரந்த அளவிலான துணைப் பணிகளைத் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கின. இவை சமுர்த்தி நன்மை பெறுநர் உட்பட தமது வாடிக்கையாளர்களுக்கு கல்வி முகாமைத்துவ உத்திகள் மற்றும் புதிய தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பயன்தரு கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் ஆலோசனைப் பணிகளை வழங்கி ஊக்குவித்தன.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், வங்கதொழில் வசதிகள் பற்றிய அறிவாற்றலை ஏற்படுத்தவும் கொடுகடன் வசதிகளை விரிவாக்க வுமென கிராமங்களில் 'சனசமுவ' கூட்டங்களைத் தொடர்ந்தும் நடாத்தின. இவை வேளாண்மை உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் ஆகியவற்றையும் தொடர்ந்து ஊக்குவித் தன. மேலும், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், முச்சக்கர வண்டிகளின் கொள்வனவு, பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளின் உதிரிப் பாகங்களின் விற்பனைக் கான நிலையம் ஆகியன நிறுவுதல் என்பவற்றுக் கான தீவு முழுவதற்குமான கடன் திட்டமொன் றினை அறிமுகப்படுத்தின. இச் செயற்றிட்டம் தனியார்துறையுடன் இணைந்து ஆரம்பிக்கப் பட்டது. தனியார் துறையானது தேவையான நிபுணத்துவத்தையும் பயிற்சியையும் வழங்கும். இத் திட்டம் கிராமியத் துறையிலுள்ள இளைஞர்க ளுக்கு சுய வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங் களை வழங்கும். விவசாயிகளைப் பாதுகாப்பதற கென பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக

ளினால் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றொரு திட்டம் அறுவடைக்காலத்தில் மிளகாயைக் கொள்வனவு செய்து களஞ்சியப் படுத்தி வைப்பதற்கானதாகும். இதனால் இவ்வுற்பத்திப் பொருள் பின்பு நியாயமான விலையில் விற்கப்படக் கூடியதாயிருக்கும்.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் பல சிறப்புக் கொடுகடன் திட்டங்களில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக விளங்கின. அவையாவன: ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம், நீண்ட காலப் பயிர்ச்செய்கை அபிவிருத்திச் செயற்றிட்டம், தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம், வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம், ஐ.நா. உதவி வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான டிகலிடச் செயற்றிட்டம், சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில் கடன் செயற்றிட்டம் மற்றும் இசுறு செயற்றிட்டம் என்பனவாகும்.

## பிரதேச அபிவிருத்தி வங்கிகள்

1997 யூன் 5ஆம் நாள் 1997ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிகள் சட்டம் இயற்றப்பட்டது. அந்த மாகாணத்தில் ஏற்கெனவேயுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் வாணிபத்தைக் கையேற்பதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஒன்றினை நிறுவுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது.

குடித்தொகையின் நலிவுற்ற பிரிவினருக்கு ஆதரவு வழங்கவேண்டிய தேவையினைக் கருத்திற்கொண்டு அந்த மாகாணத்தினுள் சிறப்பாகச் செயற்படக்கூடிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்குக் கடன் வழங்குவதற்காக வேண்டி மாகாணத்தினுள்ளும் மாகாணத்திற்கு வெளியேயும் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் வைப்புக்களைத் திரட்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது. அபிவிருத்தி சார்ந்த தொழில் முயற்சிகளுக்கு நிதியிடுவதற்கு மேலதிகமாக மாகாண சபைகள், பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளினால் மேற்கொள்ளப் படும் அபிவிருத்தித் திட்டங்களிலும் இந்த வங்கிகள் முக்கிய பங்கினை ஏற்கும்.

இந்த ஒவ்வொரு வங்கியினதும் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் ரூ.10/= பங்குகளாகப் பிரிக்கப்பட்டு ரூ.500 மில்லியனாக விளங்கும். பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் மூலதனம் தொடக்கத்தில் இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஊழியர் சேம நிதியம் என்பனவற்றினால் வழங்கப்படும். மாகாணத்தில் உள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் தேறிய சொத்துக்களின் பெறுமதியினைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு வங்கியினதும் வழங்கப் பட்ட மூலதனத்தின் தொடக்க அளவு தீர்மானிக் கப்படும். பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் வழங்கப்பட்ட மூலதனம் ரூ.100 மில்லியனுக்கும் ரூ.150 மில்லியனுக்கும் இடையிலான வீச்சில் காணப்படும். பிரதேச அபிவிருத்தி வங்கிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் தேறிய சொத்துக்கள் மத்திய வங்கியின் மூலதன உதவுதொகைக்கு மிகையாகக் காணப்படின் அவை தொடர்பாக பிரதேச அபிவிருத்தி வங்கிகள் மத்திய வங்கிக்கு முறிகளை வழங்கும். இந்த முறிகள் ஆண்டொன்றுக்கு 12 சதவீத வட்டியினைக் கொண்டிருக்கும். தேசிய பெறுமதியானது வழங்கப்பட்ட பங்கு மூலதனத்திற்குக் குறைவாகக் காணப்படின் இந்த வேறுபாடு மத்திய வங்கியினால் வழங்கப்படும்.

வங்கித்தொழில் நோக்கங்களுக்காக பிரதேச அபிவிருத்தி வங்கிகள் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வங்கிகளாகக் கருதப்படுவதனால் அவை மத்திய வங்கியின் மேற்பார்வையின்கீழ் காணப்படும். அவை பிரதேச அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும். எனினும், நடைமுறைக் கணக்குகள் தொடர்பான வர்த்தக வங்கித் தொழிற்பாடுகளை அவை மேற்கொள்ளமாட்டா.

## வங்கி மேற்பார்வை

வங்கித் தொழில் நிறுவனங்களுடன் தொடர்பான மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் பொறுப் பேற்கப்பட்டன. திணைக்களம் நாட்டின் அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், உரிமம்

பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றில் காலத்திற்குக் காலம் தலப் பரீட்சிப்புக்களையும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்களையும் மேற்கொள்வதன் மூலம் அதன் தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. மேற்பார்வையின் குறிக்கோள் யாதெனில் வங்கித் தொழில் முறையின் பாதுகாப்பையும் ஆற்றலையும் உறுதிப்படுத்துவதன் மூலம் வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதும் நிதியியல் முறையில் பொது மக்களின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதுமேயாகும்.

சொத்துப்பட்டியலின் ஆற்றலைத் தீர்மானிப்பதற்காக வேண்டி தலப் பரீட்சிப்புக்களின் செயற்பரப்பு சொத்துக்களின் தரத்தினை மதிப்பிடுவதனையும் உள்ளடக்குகிறது. வங்கியின் பொதுவான நிதியியல் நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்காக முகாமைத்துவத்தினை மதிப்பிடுவதுடன் மூலதனப் போதுமை, வருமானங்கள், திரவத்தன்மை முறைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகள் போன்ற மற்றைய அம்சங்களும் பரீட்சிக்கப்பட்டன. பொருந்தத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு வங்கிகள் இணங்கியொழுக வேண்டிய அளவு பற்றியும் மிகக் கவனமாகப் பரீட்சிக்கப்படுகின்றன.

## உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்

ஆய்விற்குரிய ஆண்டில், திணைக்களம் 13 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் 5 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்பன தொடர்பாக 18 தலப் பரீட்சிப்புக்களைத் தொடங்கியுள்ளதுடன் 3 உரிமம்பெற்ற வங்கிகளினதும் 5 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினதும் பரீட்சிப்புக்களை முடித்துக்கொண்டது. அதற்குப் புறம்பாக, முன்னைய ஆண்டில் தொடங்கப்பட்ட 9 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்புக்கள் 1997இல் முடிக்கப்பட்டன. இரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் உடன் பரீட்சிப்புக்களையும் திணைக்களம் மேற்கொண்டதுடன் இப்பரீட்சிப்புக்கள் அவற்றினது தொழிற்பாடுகளின் சில குறிப்பிட்ட அம்சங்களை உள்ளடக்கியிருந்தன.

தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையின் கீழ், திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பனவற்றின் மாதாந்தக் கூற்றுக்கள் மற்றும் திரவச் சொத்துக்கள், மூலதனப்போதுமை, செயற்படா முற்பணங்கள் மற்றும் வருமானமும் செலவும் என்பனவற்றின் காலாண்டுக் கூற்றுக்கள் என்பனவற்றின் அடிப்படையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினதும் நிதியியல் நிலைமைகளை திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. வங்கியின்மீது மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அல்லது நலிவடைவதற்கான அடையாளங்கள் ஏதாவது உள்ளனவா என்பதனைக் கண்டறிவதற்காக கூற்றுக்கள் மிக அவதானமாக மீளாய்வு செய்யப்பட்டதுடன் இவற்றின் அடிப்படையில் மிகச் சரியான நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும்.

திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாதாந்த கூற்றுக்கள் மற்றும் வருமானம் மற்றும் செலவு பற்றிய காலாண்டுக் கூற்றுக்கள் என்பனவற்றின் அடிப்படையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் தொழிற்பாடுகளையும் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. வங்கித் தொழில் சட்டத்திற்கு செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாக, வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளுக்கு வழங்குவதற்காக அவசியமான முன் மதியுடைய ஒழுங்கு விதிகளையும் தீர்மானங்களையும் வடிவமைப்பதில் திணைக்களம் தற்பொழுது ஈடுபட்டுள்ளது.

## உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்

ஆய்விற்குரிய ஆண்டில், 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் IX(அ) பகுதியின் நியதிகளுக்கிணங்க, சிறப்பியல்பு வாய்ந்த வங்கித்தொழில் நிறுவனங்களான தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, பிரமுக சேமிப்பு வங்கி மற்றும் அபிவிருத்தி வங்கி, சனச அபிவிருத்தி வங்கி என்பனவற்றின் தொழிற்பாடுகள் மத்திய வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரத்தின் கீழ் வந்தன.

இது தொடர்பாக, சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முன்மதி மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக, நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பணிப்புரைகள் 1997 நவெம்பரில் வழங்கப்பட்டன. கண்காணிப்பு நோக்கங்களுக்காக காலத்திற்குக் காலம் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்காக உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு தேவைப்படும் கூற்றுக்களைத் தயாரிப்பதில் திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

## ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்

1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின்கீழ் திணைக்களம் ஒழுங்கு முறைப்படுத்தும் தேவைப்பாடுகளைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இவை திரவச் சொத்துக்களின் ஆகக்குறைந்த மட்டத் தினைப் பேணல், தனியொரு கடன்பாட்டாளருக்கான மட்டுப்படுத்தல்களுக்கு இசைவாக நடத்தல், இடர் நிறையேற்றப்பட்ட சொத்துக்களை அடிப்படையாகக்கொண்ட ஆகக்குறைந்த மூலதனம், பணிப்பாளர்கள்/ அவர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் அவர்களின் நலவுரித்துக்களுக்கான கடன் வழங்கலின் மீது கட்டுப்பாடுகள் மற்றும் நியதிச் சட்ட காலப் பகுதிக்குள் ஆண்டு நிதியியல் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. செயற்படா முற்பணங்களின் வருமான அங்கீகரிப்பு மற்றும் அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான போதுமான ஏற்பாடுகள் என்பன தொடர்பாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் வங்கித் தொழில் சட்டத்தின்கீழ் மீண்டும் வழங்கப்பட்டதுடன் அவை 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46 அ பிரிவின் நியதிகளின்படி நியதித் தேவைப்பாடுகளாகவும் மாற்றமடைந்துள்ளன. இதே போன்று, இதுவரை காலமும் நாணய விதிச் சட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகள் வங்கித் தொழில் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. 1997 ஒகத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு பங்குகளில் முதலீடுகளை மேற்கொள்ளல், வங்கிகளினால் சொத்துக்கள் கையேற்கப்படுதல், கம்பனிகள் தொகுதியொன்றின் மொத்தத்திற்கு உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்படக்கூடிய கடன்களின் உச்சவரம்பு தொடர்பாக தற்போதுள்ள பணிப்புரையில் திருத்தம் என்பனவற்றை உள்ளடக்கிய புதிய மூன்று பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

இவ்வாண்டில் வங்கித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளில் பின்வரும் மீறல்கள் இடம் பெற்றமைபற்றி வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(அ) விலைக் குறிப்பிடாக் கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வது தொடர்பான பிரிவு 17 அ (1)உம் (2)உம்.

(ஆ) மூலதனப் போதுமை விகிதம் தொடர்பான வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 19 (7) (அ). இம் மூலதனப் போதுமை நியமங்கள் வங்கித்தொழில் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை நடைமுறைக் குழுவினால் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

(இ) ஆகக்குறைந்த திரவச் சொத்து விகிதமாக 20 சதவீதத்தினைப் பேணுவது தொடர்பான வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 21 (1).

(ஈ) கணக்காய்வுசெய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளை சமர்ப்பிப்பது தொடர்பான வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 38(1).

(உ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் வாணிபப் பணிமனையினுள் தெளிவாகத் தெரியும் இடமொன்றில் திரட்டிய ஐந்தொகையினைக் காட்சிக்கு வைக்க வேண்டுமென உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளைத் தேவைப் படுத்தும் வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 38(4).

(ஊ) வாடிக்கையாளருக்கான ஆகக்கூடிய கடன் தொகை தொடர்பான வங்கித்தொழில் சட்டத்தின் 46ஆம் பிரிவின் (1) (இ) (i) மற்றும் (ii).

(எ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் ஆகக்கூடிய சதவீதப் பங்குடமைகள் தொடர்பான வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 46 (1) (ஈ).

(ஏ) செயற்படா முற்பணங்கள் மீதான வட்டியை பிரித்தெடுப்பது மற்றும் இடை நிறுத்துவது

தொடர்பான வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 46அ இன்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரை.

(ஐ) பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்கள் ஈடுபாடு கொண்டுள்ள ஒருவருக்கு முற்பணங்களை வழங்குவது தொடர்பான வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 47 (4) (5) மற்றும் (6).

மேற்குறிப்பிட்ட மீறல்கள் தொடர்பாக அவற்றை திருத்தும் நடவடிக்கைகள் திணைக்களத்தினால் எடுக்கப்பட்டுவருகின்றன. மேலும், மத்திய வங்கியுடன் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் அதேபோன்று ஆகக்குறைந்த திரவச் சொத்து விகிதங்களையும் பேணத் தவறுமிடத்து முறையே நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 93 மற்றும் வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 21 (1)இன் நியதிகளின்கீழ் மத்திய வங்கி தண்டங்களை விதிக்கும்.

இவ்வாண்டில் திணைக்களம் பல சிறப்பு பரீட்சிப்புக்களைத் தொடங்கியதுடன் இவை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆய்வுக்குரிய காலப்பகுதியல் திணைக்களம் பின்வருவனவற்றைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டிருந்தது.

1. வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 38அ இன் நியதிகளுக்கிணங்க தகைமைபெற்ற கணக்காய்வாளர் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது. கணக்காய்வாளர்குழு நாணயச் சபையினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளமையால் உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளும் அவற்றின் ஆண்டு கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு இக்குழுவிலிருந்தே கணக்காய்வாளர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. எனினும், பொதுக் கூட்டுத்தாபனமென வகைப் படுத்தப்பட்டுள்ள வங்கிகள் இத் தேவைப் பாட்டிலிருந்து விலக்களிப்புப் பெறலாம்.

2. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நகை அடவுவைத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்பான வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 83 (அ) வின் நியதிகளிலுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள். இவ்விதிகளும் ஒழுங்கு விதிகளும் அறிமுகப்படுத்தப் பட்டதன் காரணமாக, நகை அடவுபிடிப் போர் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 99) ஏற்பாடுகள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்குப் பொருந்தாததுடன் அத்தகைய வங்கி நாணயச் சபையினால் தீர்மானிக்கப் பட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் உட்பட்டு நகை அடவு பிடிக்கும் வியாபாரத்தை மேற்கொள்ள முடியும்.

## வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் பின்வரும் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

### உரிமம் பெற்ற வர்த்த வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள்

1. வங்கித்தொழில் சட்டம் பிரிவு 17 அ (1) (அ) மற்றும் (ஆ)இன்கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் பங்குகளில் செய்யப்பட்ட முதலீடு தொடர்பான பணிப்புரைகள்.

2. வங்கித்தொழில் சட்டம் பிரிவு 19 (7) (அ)இன்கீழ் மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகள் தொடர்பாக மீள வழங்கப்பட்ட பணிப்புரைகள் இது காலவரை இத் தேவைப்பாடுகள் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 102இன்கீழ் நடைமுறைப்படுத்தப் பட்டன.

3. செயற்படா முற்பணங்கள் மீதான வட்டியின் இடைநிறுத்தம், அறவிட முடியா மற்றும் ஐய முற்பணங்களின் வகைப்படுத்தல் மற்றும் ஏற்பாட்டு நோக்கங்களுக்கான பிணையின் மதிப்பீடு என்பன தொடர்பான பணிப்புரைகள் வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 46 அ இன்கீழ் மீள வழங்கப்பட்டன. இதுகாலவரை இவை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழிகாட்டல்களாக வழங்கப்பட்டிருந்தன.

4. தனிப்பட்டவர்களுக்கும் கம்பனிகளுக்கும் வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய தொகை மற்றும் கூட்டுக் கம்பனிகளுக்கு மொத்தமாக வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய தொகை என்பன தொடர்பான வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 46 (1) இ (1) மற்றும் (11)

இன் நியதிகளின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்.

5. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அசையாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் அல்லது கையேற்றல் தொடர்பான வங்கித்தொழில் சட்டம் பிரிவு 48 அ இன் நியதிகளில் வழங்கப்பட்ட பணிப்புரைகள்.

**உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள்**

1995இன் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76 ஒ (1) இன் நியதிகளின்படி உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு பதினெட்டு பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. இப் பணிப்புரைகள் பின்வருவனவற்றுடன் தொடர்புற்றிருந்தன.

1. மூலதனப் போதுமை விகிதம்.
2. நியதி ஒதுக்கு விகிதம்.
3. பங்குடமை முதலீடு.
4. செலுத்தப்படாத வட்டி (1999 சனவரியிலிருந்து)
5. திரவச் சொத்துக்கள்.
6. சொத்துடைமை எல்லைகள்.
7. தனிப்பட்ட ஒரு கடன்பாட்டாளரின் எல்லை.
8. பணிப்பாளர்கள் / தொடர்பான கம்பனிகளுக்கான கடன் வழங்கல்.
9. அசையாச் சொத்துக்களைக் கையேற்றல்.
10. கடன் வழங்குவதற்கான நிபந்தனைகள்.
11. குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் (01.01.1999 தொடக்கம்)
12. குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான மத்திய வங்கியின் முன் ஒப்புதல்கள்.
13. விஞ்ஞானம் மற்றும் அமைப்பு உறுப்புரைகளில் மாற்றம் செய்தல்.
14. பங்கிலாபங்களின் கொடுப்பனவு.
15. பணிப்பாளராக நியமனம் பெறுவதற்கு அல்லது தெரிவுசெய்யப்படுவதற்கான தகைமை இன்மை.
16. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் செயலாளர்.
17. முகாமையாளர் போன்றோரின் நியமனத்திற்கு தகைமையின்மை.
18. அசையாச் சொத்துக்களின் விற்பனை மற்றும் மாற்றல்களில் கட்டுப்பாடு.

**வைப்புக் காப்புறுதித் திட்டம்**

1997இல் தொழிற்படத் தொடங்கிய வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை திணைக்களம் தொடர்ந்தும் நிருவகித்தது. இத் திட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 7ஆக விளங்கி 3 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளையும் 4 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு ரூ.100இற்கும் காலாண்டொன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் 3.75 சதமாக இருந்ததுடன் 1997ஆண்டுப் பகுதியில் கட்டணம் மூலமாக சேகரிக்கப்பட்ட நிதியின் தொகை ரூ.1,326,488ஆக விளங்கியது. 1997 திசெம்பர் 31ஆம் நாளன்று மொத்த நிதி ரூ.70,145,474ஆக விளங்கியது. இது, மத்திய வங்கியினால் ஒதுக்கப்பட்ட ரூ.50 மில்லியன் நிதியையும் உள்ளடக்குகின்றது.

## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் நிதிக் கம்பனிகள் போதுமானளவிற்கு மூலதன மயப்படுத்தப்பட்டுள்ளமை, முன்மதியுடன் முகாமைப்படுத்தப்படுகின்றமை மற்றும் நிதியியல் ஆற்றல் என்பனவற்றை உறுதிப்படுத்துகின்ற குறிக்கோளுடன் நிதிக் கம்பனிகள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. திணைக்களம் மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்கு முக்கியமாக தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்களூடாகவும் தலப் பரீட்சிப்புக்களூடாகவும் கடுமையாக முயன்றுவருகின்றது.

## நிதிக் கம்பனிகள் பற்றிய சுருக்கமான மேல்நோக்கு

பதிவுசெய்யப்பட்ட 25 நிதிக் கம்பனிகளினதும் ஒன்றுதிரட்டப்பட்ட ஐந்தொகை 31 மாச்சு 96இலும் 31 மாச்சு 97இலும் உள்ளவாறு அட்டவணை II.6இல் தரப்பட்டுள்ளது. பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் இவ்வாண்டில் ரூ.3.6 பில்லியனால் அல்லது 23 சதவீதத்தால் அதிகரித்தன. சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக ரூ.2.4 பில்லியன் அல்லது 24 சதவீதத்தினால் அதிகரித்த முற்பணங்களிலும் ரூ.492.2 மில்லியன் அல்லது 31 சதவீதத்தினால் அதிகரித்த திரவச் சொத்துக்களிலும் பிரதிபலித்தது. முக்கிய சொத்து வகைகளின் பகிர்ந்தளிப்பு கணிசமானளவிற்கு மாற்றமடையவில்லையெனினும் முன்னைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டதுபோன்று வழங்கப்பட்ட வசதிகளில் பெரும்பங்கு குத்தகைக்கானதாக இருந்த போக்கு 1997இலும் காணப்பட்டது. சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு வைப்புக்களில் ஏற்பட்ட ரூ.2.3 பில்லியன் அல்லது 26 சதவீத வளர்ச்சியும் மூலதன நிதியத்தில் ஏற்பட்ட ரூ.428.3 மில்லியன் அல்லது 19 சதவீத வளர்ச்சியும் நிதிகளை வழங்கின.

## பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் ஒழுங்குமுறைப்படுத்தலும் மேற்பார்வையும்

ஆய்விற்குரிய காலப்பகுதியில், 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட விதிகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக திணைக்களம் தொடர்ந்தும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்களை மேற்கொண்டு அதன் பதிவுசெய்யப்பட்ட 25 கம்பனிகளினாலும் காலத்திற்குக் காலம் சமர்ப்பிக்கப்பட்ட உரிய கூற்றுக்களை ஆய்வுசெய்தது. மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் திணைக்களம் தொடர்ந்தும் திரவச் சொத்துக்களின் வாராந்தக் கூற்றுக்கள், வழங்கப்பட்ட பாரிய முற்பணங்களின் மாதாந்தக் கூற்றுக்கள், சொத்துக்கள் பொறுப்புக்களின் மாதாந்தக் கூற்றுக்கள், செயற்படா முற்பணங்களின் காலாண்டுக் கூற்றுக்கள், கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு ஐந்தொகை மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த மூலதனமும் திரவ மட்டங்களும், தனியொரு கடன்பாட்டாளரின் வரையறைகளின் அவதானிப்பு, அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகளின் போதுமை என்பனவற்றுடன் ஒத்துச்செல்லும் அடிப்படையிலான நிதியியல் கூற்றுக்கள் என்பனவற்றைப் பெற்று கண்காணிப்புக்களை மேற்கொண்டுவந்தது. பாதகமான நிகழ்வுகளை அடையாளம் கண்டு கட்டுப்படுத்துவதற்காக ஆய்வுக்குரிய காலப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் இலாபம் மற்றும் வளர்ச்சிப் போக்குகள் மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டன.

இவ்வாண்டில் திணைக்களம் மூன்று நிதிக் கம்பனிகளின் தலப் பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. பரீட்சிக்கப்பட்ட கம்பனிகளின் கணக்கு ஏடுகளும் ஏனைய பதிவுகளும் மீளாய்வு செய்யப்பட்டதுடன் மூலதன போதுமை, சொத்துக்களின் தரம், முகாமைத்துவத்தின் இயலுமை, வருவாய்களின் அளவும் தரமும் மற்றும் திரவத்தன்மை என்பனவற்றை மதிப்பீடு செய்யும் பொருட்டு கம்பனிகளின் அலுவலர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. மோசடிகளைத் தடுப்பதற்கான உள்ளக முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் பயன், உரிய நேரத்தில் சரியான முகாமைத்துவத் தகவல்கள் என்பனவும் மதிப்பீடுசெய்யப்பட்டன.

அனைத்தையும் உள்ளடக்கிய தலப் பரீட்சிப்புக்களுக்கு மேலதிகமாக ஆண்டு உரிமங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் கம்பனிகள் உடன் பரீட்சைகளுக்கு உட்பட்டிருந்தன. அப்பரீட்சையில் கம்பனிகளில் கணக்கேடுகள் மற்றும் ஏனைய பதிவுகள் தொடர்பான சரியான தன்மைபற்றி அறிந்து கொள்வதற்காக சொத்துக்கள் பொறுப்புக்களின் மாதாந்தக் கூற்றுக்களில் அறிவிக்கப்பட்டவாறான முக்கிய விடயங்கள் பரிசீலிக்கப்பட்டன.

## முறிவடைந்த நிதிக் கம்பனிகள்

நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நாணயச் சபைக்கு கையளிக்கப்பட்ட ஐந்து நிதிக் கம்பனிகளினதும் நிருவாகமும் முகாமைத்துவமும் தொடர்ந்தும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இடருக்குள்ளான

## அட்டவணை II.6

## தொழிற்படும் நிதிக் கூட்டு நிலையங்களின் ஒன்று திரட்டிய ஐந்தொகை

| வகை | 96 மாச்சு இறுதியில் ரூபா மில் | % | 97 மாச்சு இறுதியில் ரூபா மில் | % | மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| பொறுப்புக்கள் | | | | | |
| 1. மூலதன நிதியங்கள் | | | | | |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் | 385.8 | | 495.1 | | |
| பங்குக் கட்டணம் | 205.0 | | 205.4 | | |
| மூலதன ஒதுக்கு | 491.3 | | 527.3 | | |
| பொது ஒதுக்கு | 612.3 | | 768.5 | | |
| ஒதுக்கு நிதியம் | 308.1 | | 378.9 | | |
| ஏனைய ஒதுக்குகள் | 116.5 | | 219.7 | | |
| இலாப நட்டக் கணக்கு | 109.8 | | 63.7 | | |
| மொத்த மூலதன நிதியங்கள் | 2,228.8 | | 2,658.6 | | |
| கழிக்க : பிற்போடப்பட்டசெலவுகள் | 8.9 | | 10.4 | | |
| தேறிய மூலதன நிதியங்கள் | 2,219.9 | 14.2 | 2,648.2 | 13.8 | 19.3 |
| 2. அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கு | 1,026.7 | 6.6 | 1,281.0 | 6.7 | 24.8 |
| 3. பொதுமக்களின் வைப்புக்கள் | 8,793.0 | 56.3 | 11,088.3 | 57.6 | 26.1 |
| 4. கடன்பாடுகள் | | | | | |
| வங்கி மேலதிகப் பற்று | 375.3 | | 314.8 | | |
| ஏனையவை | 867.2 | | 888.4 | | |
| மொத்தக் கடன்பாடுகள் | 1,242.5 | 8.0 | 1,203.2 | 6.3 | -3.2 |
| 5. ஏனைய பொறுப்புக்கள் | 2,345.6 | 15.0 | 3,022.1 | 15.7 | 28.8 |
| முழு மொத்தம் | 15,627.7 | 100.00 | 19,242.8 | 100.00 | 23.1 |
| சொத்துக்கள் | | | | | |
| 1. திரவச் சொத்துக்கள் | | | | | |
| காசும் வங்கிகளிலிருந்து வரவேண்டியவையும் | 241.1 | | 305.5 | | |
| நிலையான வைப்புக்கள் | 408.7 | | 488.4 | | |
| குறுந்தவணை வைப்புக்கள் | 0.0 | | 14.8 | | |
| திறைசேரி உண்டியல்கள் | 950.8 | | 1,284.5 | | |
| மொத்த திரவச் சொத்துக்கள் | 1,600.6 | 10.2 | 2,092.8 | 10.9 | 30.8 |
| 2. முதலீடுகள் | | | | | |
| துணை மற்றும் கூட்டிலுள்ள கம்பனிகளின் பங்குகள் | 236.4 | | 309.2 | | |
| தொடர்புடைய கம்பனிகளின் பங்குகள் | 451.8 | | 600.2 | | |
| பங்குகளின் நீண்டகால முதலீடுகள் | 145.9 | | 168.0 | | |
| பங்குகளில் வர்த்தக முதலீடுகள் | 210.5 | | 52.2 | | |
| தொகுதிக் கடன்கள் | 0.5 | | 15.2 | | |
| மொத்த முதலீடுகள் | 1,045.1 | 6.7 | 1,144.8 | 6.0 | 9.5 |
| 3. முற்பணங்கள் | | | | | |
| கடன்கள் | 1,005.0 | | 1,085.4 | | |
| வாடகைக் கொள்வனவுகள் | 2,682.9 | | 2,374.7 | | |
| குத்தகை | 5,878.9 | | 7,326.2 | | |
| உண்மைச் சொத்துக்கள் | 644.6 | | 741.5 | | |
| ஏனைய முற்பணங்கள் | 262.2 | | 1,423.6 | | |
| மொத்த முற்பணங்கள் | 10,473.6 | 67.0 | 12,951.3 | 67.3 | 23.7 |
| 4. நிலையான சொத்துக்கள் | | | | | |
| இறையில் காணியும் கட்டடங்களும் | 860..7 | | 935.1 | | |
| தளபாடங்கள், பொருத்துக்கள் | | | | | |
| ஏனைய கருவிகள் | 157.1 | | 235.6 | | |
| உந்து ஊர்திகள் | 117.2 | | 96.4 | | |
| பொறிகள் | 19.2 | | 8.4 | | |
| குத்தகைச் சொத்துக்கள் | 9.8 | | 55.9 | | |
| ஏனையவை | 25.6 | | 24.3 | | |
| மொத்த நிலையான சொத்துக்கள் | 1,189.6 | 7.6 | 1,355.6 | 7.0 | 14.0 |
| 5. ஏனைய சொத்துக்கள் | 1,318.8 | 8.4 | 1,698.3 | 8.8 | 28.8 |
| முழு மொத்தம் | 15,627.7 | 100.0 | 19,242.8 | 100.0 | 23.1 |
| அறியத்தந்த கூட்டு நிலையங்கள் | 24 | | 25 | | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான நிவாரணத் திட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தியும், அதிகாிக்கப்பட்ட நிவாரணத் திட்டங்களின்கீழ், மீளப் பெறப்பட்ட கடன்கள் மற்றும் சொத்துக்களின் விற்பனைகளைப் பயன்படுத்தியும் இந் நிதிக் கம்பனிகளில் இரண்டின் வைப்பாளர்களுக்கு 1997இல் ரூ.5.9 மில்லியன் கொண்ட நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. ஆய்விற்குரிய காலப் பகுதியில் நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன் நிதியிலிருந்து ரூ.15 மில்லியன் கொண்ட மேலுமொரு தொகை வழங்கப்பட்டமையின் காரணமாக நலிவுற்ற நிதிக் கம்பனிகளுக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வெளிநின்ற மீள் நிதியிடல் வசதிகள் 31 திசெம்பர் 97அன்று ரூ.2,582.2 மில்லியனாக விளங்கின. எஞ்சிய கம்பனிகள் இரண்டின் அசையாச் சொத்துக்களின் விற்பனைத் தொகையைப் பயன்படுத்தி வைப்புக்களின் கணிசமான பகுதியினைத் தீர்ப்பனவு செய்யும்பொருட்டு அக் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களை விற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எஞ்சிய கம்பனியின் வைப்பாளர்களுக்கு முழுமையாக மீளச் செலுத்தப்பட்டுள்ளதுடன் கோரப்படாத தொகை மட்டுமே செலுத்தப்படாது எஞ்சியுள்ளது. நலிவுற்ற மற்றைய நான்கு நிதிக் கம்பனிகளையும் ஒடுக்கி விடுவதற்காக நியமிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனத்துடன் திணைக்களம் தொடர்ந்தும் இணைப்புக்களைக் கொண்டிருந்ததுடன் உதவிகளையும் வழங்கியது. கொழும்பு மாவட்ட நீதிமன்றின் மேற்பார்வையின கீழ் இக் கம்பனிகளின் ஒடுக்கல் மேற்கொள்ளப்படுகின்றது.

முறிவடைந்த நிதிக் கம்பனியொன்றின் தலைமை அலுவலகத்தின் விற்பனைப் பெறுகைகளை வழிப்படுத்துவதற்கு அமைக்கப்பட்ட நம்பிக்கை நிதியத்தினூடாக திணைக்களம் அக் கம்பனியின் வைப்புக்களின் ஒரு பகுதியைத் தொடர்ந்தும் மீளளித்தது. இந் நம்பிக்கை நிதியத்தினூடாக 31 திசெம்பர் 97வரை 1928 வைப்பாளர்களுக்கு ரூ.71.3 மில்லியன் கொண்ட தொகை செலுத்தப்பட்டது. இவ்வாண்டில் திணைக்களம் நலிவுற்ற இன்னுமொரு நிதிக் கம்பனியின் பணிப்பாளர்களின்மீது நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது. இக் கம்பனிகள் அதன் அசையாச் சொத்துக்களை நாணயச் சபையின் ஒப்புதலில்லாமல் இன்னொருவருக்கு பாராதீனப்படுத்துவதன் மீது கட்டுப்பாடும் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்வதன்மூலம் அதன் சொத்துக்களை விற்பதற்கும் அவ்வாறு பெறப்படும் விற்பனைப் பெறுகைகளை சமமான முறையில் பகிர்ந்தளிப்பதற்குமான பணிப்புரைகள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மாறாக அல்லது நிதிக் கம்பனிகளைத் தவறாகக் கையாண்ட நலிவுற்ற நிதிக் கம்பனிகளின் தவறிழைத்த பணிப்பாளர்களுக்கு எதிராகப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்காக பிரயோகிக்கத்தக்க சட்டங்களின்கீழ் திணைக்களம் தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. பதிவுசெய்யப்பட்ட வழக்குகளில் வெற்றி பெறுவதனை உறுதிப்படுத்துவதற்காக தவறிழைத்த பணிப்பாளர்களுக்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையுடன் பொலிஸ் திணைக்களத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு திணைக்களம் சாத்தியமான அனைத்து உதவிகளையும் தொடர்ந்தும் வழங்கும்.

## கொள்கை முயற்சிகள்

ஆய்விற்குரிய காலப்பகுதியில், நிதிக் கம்பனிகளின் ஒழுங்குவிதிகளையும் மேற்பார்வையையும் ஆளுமைப்படுத்தும் தற்போதைய சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட பல திருத்தங்களையும் ஒருங்கிணைத்த நிதிக் கம்பனிகள் (திருத்தச்) சட்டம் என்ற பெயரினைக் கொண்ட சட்ட மூலத்தின் வரைவினை முற்றுப்பெறச் செய்வதில் திணைக்களம் பங்கேற்றது. ஏனைய பல விடயங்களுடன் உத்தேசிக்கப்பட்டுள்ள இத் திருத்தங்கள், நாட்டின் பொருளாதார மற்றும் நிதியியல் போக்குகளுக்கு இணங்க நிதிக் கம்பனியாக பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படும் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் உச்ச மற்றும் ஆகக்குறைந்த மட்டங்களைக் குறித்துரைப்பதற்கு மத்திய வங்கியை இயலச்செய்யும்.

இலங்கையில் நிதியியல் குத்தகை வியாபாரத்திற்கான நிறுவன ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுடன் தொடர்பான வேலைகளை அபிவிருத்தி செய்வதற்காக உத்தேச சட்டம் இயற்றப்படுவதுடன் அண்மிய எதிர்காலத்தில் நிதியியல் குத்தகைக் கம்பனிகளைப் பதிவு

செய்வதற்கும் மேற்பார்வையிடலுக்குமான அதிகாரங்கள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படும்.

தற்போதுள்ள பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் மற்றும் பரிசீலனையின் கீழுள்ள புதிய பணிப்புரைகள் என்பனபற்றி உறுப்பினர்களுக்கு அறிவிக்கவும் அவர்களின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்குமாக திணைக்களம் நிதிக் கம்பனிகள் கூட்டமைப்புடன் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

(அ) இடர் நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அடிப்படையில் ஆகக்குறைந்த மூலதன விகிதத்தினை அறிமுகப்படுத்தல்.

(ஆ) மிகக் கடுமையான வருமான அங்கீகார நியமங்கள்.

(இ) அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகளின்மீது மிகக் கடுமையான வழிகாட்டல்கள்.

(ஈ) நிதிக் கம்பனிகளினால் பொறுப்பேற்கப்படக்கூடிய நடவடிக்கைகளின் வகைகளை மட்டுப்படுத்தல்.

## நிதியியல் சந்தைகள்

இலங்கையில் நிதியியல் துறையின் அபிவிருத்திக்கான முழுப் பொறுப்புடன் 1997 செத்தெம்பரில் நிதியியல் சந்தைகள் திணைக்களம் நிறுவப்பட்டது. புதிய திணைக்களம் மூலதன, நிதியியல் சந்தைகள் அபிவிருத்திப் பிரிவினால் கையாளப்பட்ட அனைத்து வேலைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டது. அதற்குப் புறம்பாக, திணைக்களம் நாட்டில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிதியியல்துறை சீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைப் படுத்தலை இணைப்பதற்கும் பொறுப்பாக இருந்தது.

திணைக்களம், படுகடன் சந்தையின் மீது சிறப்பான வலியுறுத்தல்களுடன் நாட்டின் நிதியியல் சந்தைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் மிகப்பெரும் பங்கினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பின்வரும் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- நாணய மற்றும் மூலதனச் சந்தைகளின் அபிவிருத்திக்கு நிதியியல் உதவிகள் தேவைப்படும் துறைகளை இனங்கண்டு கொள்வதுடன் அத்தகைய சீர் திருத்தங்களை நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைத் திட்டத்தினை ஒரு காலவரையறைக்குள் தயாரித்தல்.
- முன்னுரிமை அடிப்படையில் நாணயம் மற்றும் மூலதனச் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கு மிக இன்றியமையாதது என அடையாளம் காணப்பட்ட நிறுவனங்களை நிறுவுவதற்கு பொருத்தமான வழி முறைகளை நடைமுறைப்படுத்துவதும் அவற்றிற்கு ஒப்படைக்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கு இந் நிறுவனங்களின் தொழிற்பாடுகள் பொருத்தமிக்கனவாக இருக்கும் என்பதனையும் உறுதிப்படுத்துதல்.
- ஆரோக்கியமான நாணய மற்றும் மூலதனச் சந்தைகளை மேம்படுத்தக் கூடிய புதிய நிதியியல் கருவிகளை அடையாளம் காணுதல்
- நாணய மற்றும் மூலதனச் சந்தைகளின் விரைந்த அபிவிருத்தியினைப் பாதிக்கின்ற தடைகளை இனங்கண்டு கொள்வது அத்தகைய தடைகளை ஒழித்துவிடுவதற்கு காலவரையறைகளுடன் கூடிய நிகழ்ச்சித் திட்டத்தினைத் தயாரித்தல்.
- நாணய மற்றும் மூலதனச் சந்தைகளின் அபிவிருத்திக்கு அவசியமான இறை ஊக்குவிப்புக்களை இனங்கண்டு கொள்ளுதல்.
- நாணய மற்றும் மூலதனச் சந்தைகளின் அபிவிருத்தியில் மத்திய வங்கியின் குறிக்கோள்களை அடையும் நோக்குடன் மற்றைய தொடர்பான முகவர்களுடன் இணைப்புக்களை ஏற்படுத்தல்.
- நவீன ஆகப்பிந்திய தொழில் நுட்பத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் மூலதனச் சந்தையில் ஆர்வம் கொண்ட ஏனைய முகவர்களுடன் நெருக்கமாகத் தொழிற்படுதல்.
- கிரமமான அடிப்படையில் நிதியியல் சந்தைகளின் அபிவிருத்தியைக் கண்காணிப்பதுடன் மோசமான நிகழ்வுகள் அவதானிக்கப்படுகையில் பொருத்தமான வழி முறைகளை மேற்கொள்ளுதல்.
- தற்பொழுதுள்ள நிதியியல்துறை சீர்திருத்தக் குழுவின் தொழிற்பாடுகளை இணைத்தல்.

ஆய்விற்குரிய காலப்பகுதியில் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. திணைக்களத்தின் முக்கிய நடவடிக்கைகளிலொன்று நிதியியல் சந்தை சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை இணைப்பதும் நிதியியல்துறை சீர்திருத்தக் குழுவின் சார்பில் முன்னேற்றங்களைக் கண்காணிப்பதுமாகும். நிதியியல்துறை சீர்திருத்தக் குழு மத்திய வங்கியின் ஆளுநரைத் தலைவராகக் கொண்டு திறைசேரியின் செயலாளரினால் 1997 சனவரியில் மீள அமைக்கப்பட்டது. நாட்டின் நிதியியல் துறை சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தினைக் கண்காணிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள நிதியியல் துறை சீர்திருத்தக்குழு நிதியமைச்சு (திறைசேரி க்கான செயலாளர் மற்றும் திறைசேரிக்கான துணைச் செயலாளர் ஆகியோர் உறுப்பினர்கள்) மற்றும் மத்திய வங்கி என்பனவற்றிலிருந்தான அலுவலர்களை உள்ளடக்கியுள்ளது. நிதியியல் துறைச் சீர்திருத்தக்குழுவின் பணிகளுக்கு மூன்று துணைக் குழுக்களான – வங்கி மேற்பார்வை மீதான நிதித்துறைச் சீர்திருத்த துணைக்குழு, ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்கள் மற்றும் நிதியியல் சந்தைகளின் மீதான நிதித்துறை, சீர்திருத்த துணைக்குழு மற்றும் மத்திய வங்கி மீதான நிதியியல் துறை சீர்திருத்தக்குழு – என்பன உதவுகின்றன.

இவ்வாண்டுக் காலத்தில் பல சட்ட சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அவற்றுள் காப்புறுதித் துறைக்கு சுயநிர்ணய ஒழுங்குமுறைப்படுத்தலையும் மேற்பார்வை அதிகாரத்தையும் வழங்கக்கூடிய புதிய காப்புறுதி மசோதா ஒன்றாகும். இம் மசோதா 1998இன் ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாண்டில் நிதித்துறை சீர்திருத்தக்குழு நிதிக் குத்தகை மசோதாவிற்கும் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்திற்கான திருத்தத்திற்கும் ஒப்புதல் வழங்கியுள்ளது. குத்தகைத் துறையினை ஒழுங்குமுறைப் படுத்தவும், மேற்பார்வை செய்யவும் வங்கிக்கு அதிகாரங்களை வழங்கக்கூடிய நிதிக் குத்தகை மசோதாவினை வரைவதில் மத்திய வங்கியும் ஈடுபட்டிருந்தது. நிதியமைச்சிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ள நிதி குத்தகை மசோதாவும் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்திற்கான திருத்தங்களும் 1998இல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திணைக்களம் இலங்கையில் கொடுகடன் தரமிடல் முகவரகத்தினை நிறுவுதல் தொடர்பான வேலையையும் இணைக்கின்றது. இது தொடர்பாக திணைக்களம் கொடுகடன் தரமிடல் முகவரகத்தின் மூலதனம் மற்றும் சொத்துடைமை அமைப்பு என்பனவற்றைத் தீர்மானிப்பதிலும் பொருத்தமான வெளிநாட்டு தொழில்நுட்ப பங்காளரை இனங்காண்பதிலும் ஈடுபட்டது. பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிபோன்ற பல்புடை முகவரகங்களும், 1998இல் நிறுவப்படுவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ள கொடுகடன் தரமிடல் முகவரகத்தில் முதலீடு செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

திணைக்களம் வங்கிகளின் வினைத்திறன், இலாபத்தன்மை, நிதியியல் வல்லமை என்பனவற்றை மேம்படுத்துவதற்காக அரசிற்கும் இலங்கை வங்கி, மற்றும் மக்கள் வங்கிகளுக்கிடையில் புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தது. தொழிற்பாட்டு சுயநிர்ணயத்தை வழங்குவதன் மூலமும், வங்கிகள் அடையவேண்டிய குறிப்பிட்ட செயலாற்ற இலக்குகள் பற்றி உத்தரவளிப்பதன் மூலம் அவற்றின் கூட்டு ஆளுமையை மேம்படுத்துவதற்கும் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் எதிர்பார்க்கிறது. இப்புரிந்துணர்வு விஞ்ஞாபனம் 1998இன் தொடக்கத்தில் கைெயழுத்தாகும்.

திணைக்களம் பின்வரும் விடயங்களிலும் ஈடுபட்டிருந்தது

(அ) 1997 திசெம்பரில் முற்றுப் பெற்ற நிதியியல்பணிகளிலுள்ள வர்த்தகத்தின் மீதான உலக வர்த்தக அமைப்புப் பேச்சுவார்த்தைகளுக்கான கடப்பாடுகளைத் தயாரித்தல்.

(ஆ) தொழில் நுட்ப உதவிச் செயற்றிட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன் அத்தகைய உதவிச் செயற்றிட்டங்களிலுள்ள பன்னாட்டு கொடை முகவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

(இ) பொது மக்களுக்காக 1998இல் வெளியிடப் படவுள்ள திறைசேரி உண்டியல் திறைசேரி முறிகள் மற்றும் அரசபிணைகள் பற்றிய தகவல்களைக் கொண்ட சிற்றேடுகளைத் தயாரித்தல்.

# அபிவிருத்தி நிதி

அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் நடவடிக்கைகள் 1997இல் விரிவாக்கப்பட்டன. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி உதவிச் செயற்றிட்டமென அழைக்கப்பட்ட (சிநஉசெ) புதிய கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்று 1997 செத்தெம்பர் 9இலிருந்து நடைமுறைக்கு வந்தது. 1996இன் பிற்பகுதியில் நடைமுறைக்கு வந்த பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டமானது 1997 காலப்பகுதியில் விரைவாக விரிவடைந்து கடன் ஒப்புதல்கள் மற்றும் பங்கீடுகள் தொடர்பில் மிக உயர்ந்த மட்டச் செயலாற்றத்தைக் காட்டியது. மத்திய வங்கியினால் கொடுகடன் உத்தரவாதம் வழங்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கான பரிசோதனையையும் திணைக்களம் தொடர்ந்து நடாத்தியது.

## 1. நடைமுறைக் கொடுகடன் திட்டங்கள்

### பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டம்

1996 மேயில் ஆசிய அபிவிருத்தி வங்கி, தனியார் மயமாக்கப்பட்ட பிரதேச பெருந் தோட்டக் கம்பனிகளின் மூலதன அபிவிருத்திக்கான ஐ.அ.டொலர் 60 மில்லியன் கொண்ட கடனொன்றின் கொடுகடன் கூறான ஐ.அ. டொலர் 40 மில்லியனுக்கு ஒப்புதல் வழங்கியது. அதே ஆண்டு திசெம்பரில் யப்பானின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியமானது இதே நோக்கத்துக்காக மேலதிக நிதியமாக 4,075 மில்லியன் யப்பானிய யென் கொண்ட கடனொன்றை (ஐ.அ.டொலர் 40 மில்லியனுக்குச் சமமான தொகை) வழங்குவதற்கு இணங்கியது. உச்சக் கடன் வழங்குநராகவும், பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டத்தினது கொடுகடன் உத்தரவாதமளிப்பவராகவும் விளங்கும் இலங்கை மத்திய வங்கியின் அபிவிருத்தி நிதித் திணைக்களம் ரூ.426 மில்லியன் கொண்ட கடன்களுக்கு 1996இல் ஒப்புதல் வழங்கியது. மாறாக 1997இலான கடன் ஒப்புதல்கள் 92 சதவீதத்தால் அதிகரித்து ரூ.818 மில்லியனாக விளங்கின. 1996இல் ரூ.57.9 மில்லியனாக மட்டும் காணப்பட்ட கடன் பகிர்ந்தளிப்பு 1997இல் ரூ.519.2 மில்லியனுக்கு அதிகரித்தது. அட்டவணை II.7இல் காட்டப்பட்ட பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டக் கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பின்படி, பதனிடல் முன்னேற்றத்துக்கும், மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்குமாக ரூ.347.7 மில்லியன் கொண்ட கடன்களுக்கு (42 சதவீதம்) ஒப்புதல் வழங்கப்பட்ட வேளையில் பயிர் அபிவிருத்திக்காக ரூ.308.5 மில்லியன் கொண்ட கடன்களுக்கு (38 சதவீதம்) ஒப்புதல் வழங்கப் பட்டது. பணிக்கான ஊர்திகள் மற்றும் கருவிகள் ஆகியவற்றின் கொள்வனவுக்காக ஒப்புதலளிக்கப் பட்ட கடன்களின் பெறுமதி ரூ.161.9 மில்லியனாக (20 சதவீதம்) விளங்கியது.

1996இல் தேசிய அபிவிருத்தி வங்கி மட்டுமே பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டத்தில் பங்குபற்றி ரூ.426.0 மில்லியனுக்கு ஒப்புதல் வழங்கியிருந்தது. எனினும், 1997இல் இரு அபிவிருத்தி வங்கிகளான தேசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியும் மற்றும் இரு வர்த்தக வங்கிகளும் அதாவது

**அட்டவணை 11.7**

**பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டம்**
**நோக்க அடிப்படையிலான கடன் ஒப்புதல்கள்**

(ரூபா மில்லியன்

| | 1996 | | 1997 | | 1996-97 | |
|---|---|---|---|---|---|---|
| | எண் | தொகை | எண் | தொகை | எண் | தொகை |
| மரப் பயிர் அபிவிருத்தி | 5 | 163.3 | 12 | 308.5 | 17 | 471.8 |
| பதனிடல் அபிவிருத்தி மற்றும் மாசடைதல் கட்டுப்பாடு | 5 | 151.6 | 11 | 347.7 | 16 | 499.3 |
| பணி ஊர்திகள் மற்றும் கருவிகள் | 5 | 111.1 | 11 | 161.9 | 16 | 273.0 |
| மொத்தம் | 15 | 426.0 | 34 | 818.1 | 49 | 1244.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியும், இலங்கை வங்கியும் கடன் திட்டத்தில் பங்கு பற்றியிருந்தன. மேலும், 1997இல் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது இரண்டாவது பெரிய பங்குபற்றும் நிதி நிறுவன மாகக் காணப்பட்டு அனைத்துக் கடன்களிலும் 42 சதவீதமானவற்றுக்கு ஒப்புதல் வழங்கியிருந்தது. கடன் ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதப் பொறுப்பு ஆகியன பற்றிய விபரங்கள் அட்டவணைய 11.8இல் தரப்பட்டுள்ளன. அட்டவணையில் காட்டப்பட்ட படி 1996 இறுதியில் ரூ.40.5 மில்லியனாக விளங்கிய பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டக் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழான கொடுகடன் உத்தரவாதப் பொறுப்பானது 1997 திசெம்பர் இறுதியில் ரூ.337.8 மில்லியனுக்கு அதிகரித்தது. 1997 திசெம்பர் இறுதியில் உள்ளவாறான மொத்தக் கட்டுப்பணச் சேகரிப்பு ரூ.5.1 மில்லியனாக விளங்கியது.

## சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் (சிநகை) IV

1992 மாச்சில் தொடங்கப்பட்ட சிநகை IV திட்டத்தின் இறுதிக் கட்டம் 1997இல் நடைமுறைப் படுத்தப்பட்டது. 1997இல் மத்திய வங்கி சிநகை IVஇன்கீழ் ரூ.317.4 மில்லியன் கொண்ட 356 கடன்களுக்கு உத்தரவாதமளித்த துடன் இக் கடன்களுக்கான மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதப் பொறுப்பு ரூ.176.8 மில்லியனாக வும் விளங்கியது. இவ்வாண்டில் ரூ.1,033.9 மில்லியன் கொண்ட 1,932 கடன்களின் மீளக் கொடுப்பனவுகளைப் பொறுத்தவரையில் கடனாளி களால் அவை நிறைவு செய்யப்பட்ட வேளையில் ரூ.83.4 மில்லியன் பெறுமதியான 65 கடன்களின் கொடுகடன் உத்தரவாதங்கள் மீளப் பெறப் பட்டோ அல்லது காலம் முடிவடைந்தோ காணப்பட்டமைக்கு, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள், மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி நடவாமையே காரணமாகும். 1997இன் இறுதியில் ரூ.4,029.6 மில்லியன் கொண்ட 6,137 கடன்களுக்கான கொடுகடன் உத்தரவாதங்கள் தொழிற்பாட்டிலிருந்ததுடன் இக் கடன்களு க்கான மத்திய வங்கியின் பொறுப்பு ரூ.2,491 மில்லியனாக விளங்கின. 1997இன் இறுதியில் ரூ.93.3 மில்லியன்கொண்ட 156 கோரல்கள் பெறப்பட்டன. சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டத்திலிருந்து பெறப்பட்ட ஒன்று திரண்ட உத்தரவாத கட்டுப் பணச் சேகரிப்புக்கள் 1997இன் இறுதியில் ரூ.131.1 மில்லியனாக விளங்கிய வேளையில், கோரல் களுக்குப் பின்பான மொத்த மீளப் பெறுகைகள் ரூ.2.4 மில்லியனாக விளங்கின. 1996, 1997 மற்றும் 1992-97 காலப்பகுதிகளுக்கான சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் IVஇன் முன்னேற்றம் அட்டவணை II.9இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 11.8**

**பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்ட ஒப்புதல்கள், பகிர்வுகள் மற்றும் மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதப் பொறுப்பு**

(ரூபா மில்லியன்

| பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் | 1996 | | | 1996 | | | 1996 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒப்.(அ) | பகிர்.(ஆ) | கொஉபொ(இ) | ஒப். | பகிர். | கொஉபொ | ஒப். | பகிர். | கொஉபொ |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 426.0 | 57.8 | 40.5 | 188.9 | 299.0 | 168.8 | 614.9 | 356.8 | 209.3 |
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | -- | -- | -- | 346.5 | 94.2 | 56.4 | 346.5 | 94.2 | 56.4 |
| இலங்கை வங்கி | -- | -- | -- | 120.6 | 75.5 | 40.8 | 120.6 | 75.5 | 40.8 |
| இலங்கை வர்த்தக வங்கி | -- | -- | -- | 162.1 | 50.5 | 31.3 | 162.1 | 50.5 | 31.3 |
| மொத்தம் | 426.0 | 57.8 | 40.5 | 818.1 | 519.2 | 297.3 | 1244.1 | 577.0 | 337.8 |

அ. ஒப்புதல்கள்.
ஆ. பகிர்வுகள்.
இ. கொடுகடன் உத்தரவாதப் பொறுப்பு.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை 11.9

### சி.ந.கை.- IV கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் செயலாற்றம் கடன்களின் எண்ணிக்கையும் பெறுமதியும்

ரூபா மில்லியன்

| விடயம் | 1996 | | 1997 | | 1996 - 97 | |
|---|---|---|---|---|---|---|
| | எண் | தொகை | எண் | தொகை | எண் | தொகை |
| வழங்கப்பட்ட கடன்கள் | 1334 | 1293.1 | 356 | 317.4 | 9072 | 7666.4 |
| உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் | 1334 | 861.0 | 356 | 176.8 | 9072 | 4906.5 |
| முற்றாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் | 72 | 18.0 | 1932 | 1039.9 | 2546 | 1316.2 |
| உத்தரவாதம் மீளப் பெறப்பட்ட அல்லது காலாவதியான | -- | -- | 65 | 83.4 | 303 | 228.4 |
| வெளிநிற்கும் கடன்கள் | 7804 | 5761.9 | 6137 | 4029.6 | 6137 | 4029.6 |
| நிலுவையாகவுள்ள கடன்கள் | 1339 | 694.7 | 2054 | 1065.8 | 2054 | 1065.8 |
| வெளிநிற்கும் உத்தரவாதம் | 7804 | 3254.2 | 6137 | 2491.1 | 6137 | 2491.1 |
| பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் | 33 | 17.3 | 36 | 23.0 | 156 | 93.3 |
| சேகரிக்கப்பட்ட கட்டுப் பணம் | -- | 20.0 | -- | 26.2 | -- | 131.1 |
| கோரல்களின் பின்னான மீளப் பெறுகைகள் | -- | 1.0 | -- | 0.3 | -- | 2.4 |

குறிப்பு:

(அ) நாளதுவரை.

(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் கட்டம் IV

1992 யூலையில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் கட்டம் IVஇன் கீழான கடன்களின் மீள் நிதியிடல் 1997இலும் தொடர்ந்து தொழிற்படுத்தப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் அரசின் வீடமைப்புக் கடன் உத்தரவாத நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் IVஇன் கீழ் இலங்கை அரசினால் பெறப்பட்ட நிதியங்கள் வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச் சித் திட்டத்தின் உச்ச கடன் வழங்குநராக செயற் படும் மத்திய வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவை வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியுடன் உடன்படிக்கையில் ஈடுபட்டதும், துணை உச்சக் கடன் வழங்குநர் களாக நியமிக்கப்பட்டதுமான பங்கேற்கும் கொடு கடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்க ளின் மீள் நிதியிடலுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டன.

வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டமானது நிதியமைச்சினால் வழங்கப்பட்ட ரூ.150 மில்லியன்கொண்ட முற்பண த்தைப் பயன்படுத்தி தொடக்கத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டது. எனினும், 1994 ஒற்றோபரில் ஐ.அ.டொலர் 25 மில்லியன் கொண்ட கடனொன் றின் முதலாவது பிரிவாகக் காணப்பட்ட ஐ.அ.டொலர் 10 மில்லியன் கொண்ட கடனொன்று இத்திட்டத்திற்கு வழங்கப் பட்டது. ஐ.அ.டொலர் 15 மில்லியன் கொண்ட இரண்டாவது பிரிவு 1997 செத்தெம்பரில் வழங்கப்பட்டதுடன் இதன் விளைவாக 1997 செத்தெம்பர் - திசெம்பர் காலப் பகுதியில் மத்திய வங்கிக்கு ரூ.195 மில்லியனைப் பகிர்ந்தளி ப்பதற்கு இயலச் செய்தது. 1992 இலிருந்து 1997 வரையிலான ஒன்றுசேர்ந்த ஒப்புதல்கள் மற்றும் பகிர்ந்தளிப்புக்கள் ஆகியன, ரூ.1,142 மில்லியன் கொண்ட தொகைக்கு ஒப்புதலளிக்கப்பட்ட வேளையில் ரூ.832 மில்லியன் கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப் பட்டதைக் காட்டின. கூடுதலான விபரங்கள் அட்டவணை II.10இல் காணக் கூடியதாக உள்ளன.

1996இல் இக் கடன் திட்டத்தின் இரண்டா வது பிரிவுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய நிகழ்ச்சித் திட்ட வழங்கல் திட்டத்தின் காரண மாக வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டமானது 1997இல் அமைப்பு ரீதியான மாற்றத்துக்கு உட்பட்டிருந் தது. புதிய நிகழ்ச்சித் திட்ட வழங்கல் திட்டப்படி ஈட்டினால் உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் மட்டுமே நிதியிடலுக்குத் தகுதியுடையன வாயிருந்ததுடன் இதனால் 1997இல் கொடுகடன் திட்டத்தில் நீண்ட கால கொடுகடன் நிறுவனங் கள் மட்டுமே பங்கேற்கக்கூடியதாக இருந்தது.

## அட்டவணை II.10

## வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் IV
## கடன் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புகளும்

(ரூபா மில்லியன்)

| துணை- உச்சக் கடன் வழங்குநர் | ஒப்புதல்கள் 1996 | 1997 | 1992-97 | பகிர்ந்தளித்தல்கள் 1996 | 1997 | 1992-97 |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | -- | -- | 350.0 | -- | 1.3 | 313.8 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி | -- | -- | 1.8 | -- | 0.3 | 1.4 |
| வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி | -- | -- | 5.3 | -- | -- | 4.7 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 58.3 | 138.5 | 362.1 | -- | 68.6 | 153.9 |
| மக்கள் வங்கி | 27.1 | -- | 262.3 | -- | 71.6 | 250.9 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | 13.4 | -- | 80.1 | -- | 26.0 | 58.9 |
| வரையறுக்கப்பட்ட செலான் வங்கி | -- | -- | 4.5 | -- | 1.7 | 4.2 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 7.4 | 7.9 | 75.8 | -- | 25.4 | 44.4 |
| மொத்தம் | 106.2 | 146.4 | 1141.9 | -- | 194.9 | 832.2 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டத்தின் ஆகக்கூடிய அளவு கடனாளிகள் 1996 மற்றும் 1997 தரவுகளிலிருந்து அறியக்கூடியவாறு கிராமியத் துறையிலேயே காணப்பட்டனர். 1997இன் நோக்க அடிப்படையிலான கடன் பகுப்பின்படி நிலக் கையேற்புக்காக 99 சதவீதத்திற்கு மேல் ஒப்புதலளிக்கப்பட்டது. 1997இல் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் 95 சதவீதமானவற்றுக்கு ஒப்புதல் வழங்கியதுடன் எஞ்சியவை அரச ஈட்டு முதலீட்டு வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்டன. 5 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிக்கு புதிய கடன்களில் 3 சதவீதமானவை மட்டும் வழங்கப்பட்டதையும், 10 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு 96 சதவீதத்துக்கும் மேலாக வழங்கப்பட்டதையும் இத் திட்டத்தின் கீழான கடன்களின் முதிர்ச்சியமைப்புக் காட்டுகின்றது.

## அட்டவணை II.11

## வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் iv
## நோக்கம், முதிர்ச்சியின்படி ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள்

(ரூ. மில்லியன்)

| பிரிவு | ஒப்புதல்கள் 1996 நகரம் | 1996 கிராமம் | 1996 மொத்தம் | 1997 நகரம் | 1997 கிராமம் | 1997 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| நோக்கங்களின்படி | | | | | | |
| 1. கட்டடவாக்கம் | 404 | 8,570 | 8,974 | 155 | 30 | 185 |
| 2. திருத்தங்கள் | 2,665 | 26,614 | 29,279 | -- | -- | -- |
| 3. நிலக் கொள்வனவு | 9,496 | 57,420 | 66,916 | 6,799 | 139,392 | 146,191 |
| 4. உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 35 | 965 | 1,000 | -- | -- | -- |
| மொத்தம் | 12,600 | 93,569 | 106,169 | 6,954 | 139,422 | 146,376 |
| முதிர்ச்சியின்படி கடன்கள் | | | | | | |
| 5 ஆண்டுகளுக்குக் குறைவானவை | 3,277 | 34,576 | 37,853 | -- | 621 | 621 |
| 6 - 10 ஆண்டுகள் | 1,667 | 5,521 | 7,188 | 527 | 3,905 | 4,432 |
| 11 - 15 ஆண்டுகள் | 7,656 | 53,472 | 61,128 | 6,427 | 134,896 | 141,323 |
| 16 - 20 ஆண்டுகள் | -- | -- | -- | -- | -- | -- |
| மொத்தம் | 12,600 | 93,569 | 106,169 | 6,954 | 139,422 | 146,376 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி உதவிச் செயற்றிட்டம்

1997 மேயில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி உதவிச் செயற்றிட்டம் எனப் படும் புதிய கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்று க்கு ஒப்புதலளித்தது. இத் திட்டம் வெளிநாட்டு வர்த்தக மூலங்களிலிருந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தும் கூட்டாக திரட்டப்பட்ட ஐ.அ. டொலர் 55 மில்லியன் கொண்ட கடன்களின் ரூபாப் பெறுகைகளைக் கொண்டு தேசிய அபிவிருத்தி வங்கியினால் மீள் நிதியிடப்பட்டது. இக் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ் மத்திய வங்கியானது, தேசிய அபிவிருத்தி வங்கியுடன் பங்கேற்பு உடன்படிக்கைகளை முடித்துக்கொண்ட பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி உதவிச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதத்தை வழங்கும். 1997 செத்தெம்பர் 22இன் சீபி/டீஎப்/சிநதொஉசெ (97) கொண்ட மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் வழங்கலுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி உதவிச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதத் திட்டம் 1997 செத்தெம்பரில் நடைமுறைக்கு வந்தது. 1997இன் கடைசிக் காலாண்டில் ரூ.5.0 மில்லியன் கொண்ட எட்டு கொடுகடன் உத்தரவாத விண்ணப்பங்களுக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி உதவிச் செயற்றிட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்டன.

அட்டவணை II. 12

### மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் செயலாற்றத் தொகுப்பு - 1997 இறுதி

(ரூ. மில்லியன்)

| | சி.ந.கை.I (அ) | | சி.ந.கை.II (ஆ) | | சி.ந.கை.III (இ) | | சி.ந.கை.IV (ஈ) (உ) | | பே.கொ.க. (ஊ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் (எ) | 1670 | 286.1 | 2531 | 1392.5 | 3130 | 1955.6 | 9072 | 7666.4 | 1932 | 1098.6 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் (எ) | 1670 | 157.5 | 2531 | 713.6 | 3130 | 1312.6 | 9072 | 4772.1 | 1932 | 871.2 |
| 2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் (எ) | 1230 | 183.9 | 1852 | 1056.6 | 1814 | 1016.1 | 2546 | 1316.2 | 1518 | 861.4 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் (எ) | 113 | 31.4 | 392 | 51.0 | 734 | 239.0 | 303 | 228.4 | 117 | 69.2 |
| 3.1 பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் (எ) | 338 | 75.9 | 227 | 70.0 | 165 | 80.6 | 156 | 93.3 | 18 | 9.8 |
| 3.2 பெறப்பட்ட கோரல்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு (எ) | -- | 33.9 | -- | 58.6 | -- | 64.6 | -- | 73.9 | -- | 6.9 |
| 3.3 தீர்க்கப்பட்ட கோரல்கள் | | | | | | | | | | |
| முழுமையாகத் தீர்க்கப்பட்டவை | 232 | 19.2 | 126 | 31.7 | 86 | 23.4 | 42 | 14.6 | -- | -- |
| பகுதியளவில் தீர்க்கப்பட்டவை | 27 | 2.1 | 4 | 0.7 | -- | -- | -- | -- | 11 | 2.5 |
| நிராகரிக்கப்பட்ட கோரல்கள் | 32 | 6.9 | 46 | 12.7 | 45 | 17.7 | 41 | 14.8 | 02 | 1.0 |
| கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் | 36 | 2.0 | 5 | 1.5 | 1 | 1.6 | 3 | 1.0 | 01 | 0.4 |
| பிற்போடப்பட்ட கோரல்கள் | 8 | 2.1 | 2.6 | 8.6 | 5 | 4.5 | 8 | 5.3 | -- | -- |
| முடிவுறாக் கோரல்கள் | 2 | -- | 13 | 3.8 | 22 | 10.5 | 57 | 27.3 | 03 | 2.5 |
| புறக்கீடு செய்யப்பட்ட கோரல்கள் | 3 | 0.5 | 7 | 8.2 | 6 | 3.3 | 5 | 5.6 | 01 | 0.2 |
| 4.1 வெளிநிற்கும் கடன்கள் (எ) | 40 | 4.6 | 106 | 34.7 | 450 | 119.7 | 6137 | 4029.6 | 282 | 52.9 |
| 4.2 நிலுவையில் உள்ளவை (எ) | 40 | 4.6 | 40 | 11.4 | 65 | 33.5 | 2054 | 1065.8 | -- | |
| 4.3 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு (எ) | 40 | 2.9 | 106 | 20.9 | 450 | 74.8 | 6137 | 2491.1 | 282 | 42.1 |
| 5. கட்டணச் சேகரிப்பு (எ) | -- | 12.2 | -- | 29.8 | -- | 44.3 | -- | 131.1 | -- | 21.9 |
| 6. கோரலுக்குப் பிந்திய மீட்புக்கள் | -- | 10.4 | -- | 16.5 | -- | 15.4 | -- | 2.4 | -- | 1.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அ. சிநாகை I - 1979-81வரை தொழிற்பட்டவை
ஆ. சிநாகை I - 1982-89வரை தொழிற்பட்டவை
இ. சிநாகை I - 1988-91வரை தொழிற்பட்டவை
ஈ. சிநாகை I - 1992-97வரை தொழிற்பட்டவை
உ. தற்காலிகமானவை
ஊ. பெ.கொ.கை - 1990-92வரை தொழிற்பட்டவை
எ. ஒன்று சேர்ந்தவை

## முற்றுப்பெற்ற கொடுகடன் திட்டங்கள்

முற்றுப்பெற்ற கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் தொகுப்பொன்று 1997 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு அட்டவணை II.12இல் கொடுக்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் திட்டங்களின்கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் கைத்தொழில் வாரியான பகுப்பொன்றினை அட்டவணை II.13 காட்டுகின்றது. கொடுகடன் உத்தரவாத முற்றுப்பெற்ற திட்டங்களின் முக்கிய விடயங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.

## சிறிய அளவு கைத்தொழில்கள் திட்டம்

1997இன் இறுதியில் ரூ.0.3 மில்லியன் கொண்ட மொத்த உத்தரவாதக் கடப்பாட்டடினை உள்ளடக்கி ரூ.04 மில்லியனாகக் காணப்பட்ட எட்டு கடன்கள் மட்டுமே செலுத்தப்பட வேண்டியனவாயிருந்தன.

## சிறிய அளவு நடுத்தர அளவு கைத்தொழில்கள் திட்டங்கள் I, II மற்றும் III

சிறிய அளவு நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டங்கள் I, II மற்றும் IIIஇன்கீழ் ரூ.2,183.7 மில்லியன் உத்தரவாதப் பொறுப்புடன் ரூ.3,634.2 மில்லியன் கடன் தொகையைக் கொண்ட மொத்தம் 7,331 கடன்கள் வழங்கப் பட்டிருந்தன. 1997 இறுதியில் இத் திட்டங்களின் கீழ் தொழிற்பாட்டிலிருந்த கடன்களின் எண்ணிக்கை 596 ஆகவும் கடன் பெறுமதி ரூ.159 மில்லியனாகவும் விளங்கின.

## பேருந்து கொள்வனவுக் கடன் திட்டம்

ரூ.871.2 மில்லியன் கொண்ட உத்தரவாதப் பொறுப்பை உள்ளடக்கி ரூ.1,098.6 மில்லியன் கொண்ட 1,932 கடன்கள் பேருந்துக் கொள்வனவுக்கடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டன. 1997இன் இறுதியில் ரூ.52.9 மில்லியன் கொண்ட 282 கடன்கள் செலுத்தப்பட வேண்டியிருந்தன.

அட்டவணை **II.13**

### சிநகை -II, சிநகை -III, சிநகை -IV இன் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு 1997 இறுதியில் உள்ளவாறு

ரூ.மில்

| கைத்தொழில் | சிறிய நடுத்தரக் கைத்தொழில் II,III,IV (1982 - 1997) (அ) | | | | | | சிறிய நடுத்தரக் கைத்தொழில் IV(1997) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | % | கடன் தொகை (ரூ.ப.இ.) | % | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை (ரூ.ப.இ.) | % | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | % | கடன் தொகை (ரூ.ப.இ.) | % | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை (ரூ.ப.இ.) | % |
| உணவு பதனிடல் | 3,247 | 22.0 | 2.173.9 | 19.7 | 1,275.8 | 18.4 | 56 | 15.7 | 55.1 | 17.4 | 25.7 | 14.5 |
| ஏனைய வேளாண்மைக் கைத்தொழில் | 311 | 2.1 | 153.4 | 1.4 | 99.8 | 1.5 | 11 | 3.1 | 2.9 | 1.0 | 2.4 | 1.4 |
| இறப்பர் உற்பத்திகள் | 304 | 2.1 | 314.7 | 2.9 | 174.1 | 2.6 | 04 | 1.1 | 11.0 | 3.6 | 6.2 | 3.5 |
| உலோக உற்பத்திகள் | 1,394 | 9.4 | 740.9 | 6.7 | 459.5 | 6.7 | 52 | 14.6 | 11.6 | 3.7 | 9.2 | 5.2 |
| கட்டவாக்கப் பொருட்கள் | 914 | 6.2 | 556.0 | 5.6 | 367.4 | 5.4 | 08 | 2.2 | 8.9 | 2.7 | 4.8 | 2.7 |
| கட்டவாக்க ஒப்பந்தம் | 546 | 3.7 | 766.5 | 7.0 | 270.4 | 5.5 | 13 | 3.7 | 27.1 | 8.6 | 12.2 | 6.9 |
| மர உற்பத்திகள் | 895 | 6.1 | 450.4 | 4.1 | 294.3 | 4.3 | 12 | 3.4 | 6.9 | 2.2 | 5.0 | 2.8 |
| ஆடைகள் | 904 | 6.2 | 790.5 | 7.2 | 438.9 | 6.5 | 05 | 1.4 | 8.6 | 2.7 | 2.1 | 1.2 |
| புடவைகள் | 325 | 2.2 | 319.5 | 2.9 | 181.6 | 2.7 | -- | -- | -- | -- | -- | -- |
| தொழிற்கூடத்திருத்தல் | 558 | 3.8 | 331.0 | 3.0 | 215.3 | 3.2 | 14 | 4.0 | 12.2 | 3.9 | 8.4 | 4.8 |
| ஏனையவை (அ) | 5,335 | 36.1 | 4,417.7 | 40.1 | 2,939.2 | 43.2 | 181 | 50.8 | 172.5 | 54.5 | 100.8 | 57.0 |
| மொத்தம் | 14,733 | 100.0 | 11,014.5 | 100.0 | 6,798.3 | 100.0 | 356 | 100.0 | 316.5 | 100.0 | 176.8 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) சி.ந.கை I தொடர்பான தரவுகளின் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு கிடைக்கவில்லை

(ஆ) பயணிகள் மற்றும் வர்த்தகப் போக்குவரத்து, தோல், விலங்கு வளர்ப்பு, இரசாயனம், மீன்பிடி, உணவுகள், கண்ணாடி இழை, மின்னியக்கம், மட்பாண்டம், பொலித்தீன் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

## உத்தரவாத நிதிகளின் முதலீடு

மத்திய வங்கியினால் முற்பணமாக வழங்கப் பட்ட நிதியங்களை உள்ளடக்கி சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில், பெருந்துக் கொள்வன வுக் கடன் மற்றும் பெருந்தோட்ட சீரமைப்பு செயற்றிட்ட உத்தரவாத நிதியங்களின் முதலீடு கள் ஆகியவற்றின் மொத்தப் பெறுமதியும் 1997இல் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப் பட்ட கட்டுப்பணச் சேகரிப்புக்களும் ரூ.1,448 மில்லியனாக விளங்கின. இவ்வாண்டின் முதலீடுகளி லிருந்தான வட்டி வருமானத்தின் மொத்தப் பெறுமதி ரூ.180.5 மில்லியனாகக் காணப்பட்டது.

## செயற்றிட்டங்களின்பின் தொடரலும் பரிசோதனைகளும்

சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களின் நிலுவையாகவுள்ள கடன்கள் மற்றும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் உத்தரவாதக் கோரல்களையும் உள்ளடக்கிய திணைக்களத்தின் செயற்றிட்டப் பரிசோதனை நிகழ்ச்சித் திட்டம் 1997இலும் தொடர்ந்தது. திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான பின்தொடரும் வேலைகள் பல நலிவுற்ற கைத்தொழில்களின் மீட்சி மற்றும் புனரமைப்பு ஆகியவற்றின் முன்னேற்றத்தில் பங்கெடுத்தது. 1996இன் 65 செயற்றிட்டங்களுக்கு மாறாக 1997இல் 200 செயற்றிட்டங்கள் பரிசோதனையிடப்பட்டன. 1996இலும் 1997இலும் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டப் பின்தொடரல் பரிசோதனையின் வெளிப்பாட்டினது தொகுப்பினை அட்டவணை II.14 தருகின்றது.

அட்டவணை II.15இல் காட்டப்பட்டபடி 1997இல் ரூ.29.7 மில்லியன்கொண்ட பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் 45 உத்தரவாதக் கோரல்கள் 1997 காலப்பகுதியில் பரிசோதனைப் பரிவினால் பரிசோதனையிடப்பட்டன.

அட்டவணை II.14

**பின் தொடர் பரிசோதனைகள்**
**செலுத்தத் தவறிய கடன்கள்**

| | விதந்துரைப்புக்கள் / பெறுபேறு | 1996 | | 1997 | |
|---|---|---|---|---|---|
| | | செயற்றிட் டங்களின் எண்ணிக்கை | கடன் தொகை ரூ.மி. | செயற்றிட் டங்களின் எண்ணிக்கை | கடன் தொகை ரூ.மி. |
| 1. | கடன்களை மீளஅட்டவணைப்படுத்து வதற்கான சாத்தியங்களைக் கண்டறிதல் | 5 | 12.2 | 15 | 18.3 |
| 2. | ஒழுங்க முறைப்படுத்தப்பட்ட கடன் கணக்குகள் | 2 | 2.4 | -- | -- |
| 3. | மீளப் பெறப்படுவதற்கான உத்தரவாதம் | 1 | 0.6 | 25 | 33.8 |
| 4. | கடன்களை முழுமையாகச் செலுத்த உடன்பட்ட கடனாளிகள் | 3 | 0.9 | 5 | 5.8 |
| 5. | பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் அழைப்பு அவதானிப்புக்கள் | 2 | 4.5 | 8 | 6.2 |
| 6. | யோசனை தெரிவிக்கப்பட்ட நெருங்கிய கண்காணிப்புக்கள் | 12 | 10.5 | 102 | 169.8 |
| | மொத்தம் | 25 | 31.1 | 155 | 233.9 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## கிராமியக் கொடுகடன்

ஆய்விற்குரிய ஆண்டில். மத்திய வங்கி. கொடை மூலம் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் மற்றும் அதன் சொந்த கொடுகடன் ஆகிய இரண்டினதும் நிறைவேற்று முகவராகத் தொடர்ந்தும் தொழிற்பட்டது. நிறைவேற்று முகவராக இருப்பதன் காரணமாக, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களை அனுமதித்தல் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்குதல், செயற்றிட்டங்களின் கீழ் தகைமை பெற்ற கடன் கள் தொடர்பாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்க ளுக்கு மீள் நிதியினைப் பகிர்ந்தளித்தல், கடன் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஒருங்கி ணைத்தல், கடன் பதிவுகளைப் பேணுதல் மற்றும் தொடர்பான செயற்றிட்ட அலுவலகங்கள் மற்றும் ஏனைய உள்நாட்டு முகவர்களின்

அட்டவணை II.15

## பெறப்பட்ட உத்தரவாத கோரல் பரிசோதனைகள்

| | விதந்துரைப்புக்கள் / விளைவு | 1996 | | 1997 | |
|---|---|---|---|---|---|
| | | கோரல்கள் எண்ணிக்கை | கடன்தொகை ரூ.மில் | கோரல்கள் எண்ணிக்கை | கடன்தொகை ரூ.மில் |
| 1. | நிராகரிக்கப்பட்ட உத்தரவாதக் கோரல்கள் | 7 | 5.0 | 10 | 5.0 |
| 2. | பரிசீலனையின் கீழ் உள்ள உத்தரவாதக் கோரல் நிராகரிப்புக்கள் | 4 | 1.6 | 3 | 2.0 |
| 3. | பிற்போடப்பட்ட உத்தரவாதக் கோரல்கள் | 4 | 1.0 | 12 | 13.1 |
| 4. | இ. ம. வங்கிக்கு உத்தரவாதக் கோரல்கள் சமர்ப்பிக்கப் பட்ட பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்ட கடன்கள் | 3 | 1.6 | 2 | 0.6 |
| 5. | முற்றாக தீர்ப்பனவு செய்யப்பட்ட உத்தரவாதக்கோரல்கள் | 9 | 2.5 | 5 | 1.5 |
| 6. | பரிசீலனையின் கீழ் உள்ள உத்தரவாதக் கொடுப்பனவுகள் | 5 | 6.4 | 5 | 1.4 |
| 7. | முடிவு பெறாத கோரல்கள் | 8 | 9.4 | 6 | 3.7 |
| 8. | மீளப்பெறப்பட்ட கோரல்கள் | -- | -- | 2 | 2.4 |
| | மொத்தம் | 40 | 27.5 | 45 | 29.7 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

உதவியுடன் கடன் திட்டங்களைப் பிரபல்யப் படுத்தல் என்பனவற்றுடன் தொடர்புபட்ட கொடு கடன் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குப் பொறுப்பாக இருந்தது.

1997இல் வங்கியினால் நடைமுறைப் படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் பின்வருமாறு.

**(அ) ஆசிய அபிவிருத்தி வங்கியினால்[1] நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்**

(1) வேளாண்மைப் புத்தாக்க செயற்றிட்டம் (சுழல்முறை நிதிய் கொடுகடன் திட்டம்)

(11) சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம்.

(111) பல்லாண்டுப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(iv) தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(v) வடமேல் மாகாண நீர் மூலவளங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்

(vi) வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

**(ஆ) வே.அ.ப.நிதியம்[2], க.ப.அ.முகவர்[3], சு.ப.அ.முகவர்[4], யப்பானிய அரச[5], உ.உ.நிகழ்ச்சித் திட்டம்[6]** என்பனவற்றினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களாவன.

(vii) சிறு வேளாண்மையாளர்கள் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் (வே.அ.ப.நிதியம், க.ப.அ.முகவர், உ.உ.நிகழ்ச்சித் திட்டம்)

(viii) வடமத்திய மாகாண பங்கேற்கும் கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (வே.அ.ப.நிதியம், க.ப.அ. முகவர், உ.உ.நிகழ்ச்சித் திட்டம்

(ix) உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டம் (யப்பானிய அரசு)

**(இ) அரசினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்**

(x) கேகாலை மாவட்ட ஒருங்கிணைக் கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழல் முறை நிதியச்) செயற்றிட்டம்

(xi) சுறதுற நிகழ்ச்சித்திட்டம்

**(ஈ) சிறப்புச் செயற்றிட்டங்கள் ;-**

(xii) இறால் வளர்ப்போருக்கான நிவாரணத் திட்டம்

(xiii) தெங்கு அபிவிருத்திக் கடன் திட்டம்

1. ஆசிய அபிவிருத்தி வங்கி
2. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம்
3. கனடா பன்னாட்டு அபிவிருத்தி முகவர்
4. சுவீடிஸ் பன்னாட்டு அபிவிருத்தி முகவர்
5. யப்பானிய உணவு உற்பத்திக் கொடை
6. உலக உணவு நிகழ்ச்சித் திட்டம்

அட்டவணை II.16

## கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியிடல் முகவர் | பணித் திட்டங்கள் | ஆரம்ப ஒதுக்கு | கடன்படுனர்களுக்கான வட்டிவீதம் | 1997.12.31 வரை கொடுகடன் பகிர்ந்தளிப்பு (ரூபா மில்லியன்) | பொருந்தத்தக்க விடத்து மீளாய்வு வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. வேளாண்மை புத்தாக்கச் செயற்றிட்டம் (1990-1995) | ஆ.அ.வ. | வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் ஐந்து எல்லை மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட வேளாண்மையாளர், பாதிக்கப்பட்ட சொத்துக்கள் புத்தாக்கம் | ஐ.அ.டொ. 14.3 மில். | 12.5 | 771.1 | 67.4 |
| 2. சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் (1989-1997) | ஆ.அ.வ. | தேயிலை சிறு உடைமையாளர்களின் தேயிலையின் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரித்தல். தேயிலைத் துறையின் நிறுவன ரீதியான பொறியமைப்பை மேம்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை விரிவாக்கல். | ஐ.அ.டொ. 12.3 மில். | 14.0 | 701.5 | 85.0 |
| 3. நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் (1989-1997) | ஆ.ஆ.வ. | நிரந்தரப் பயிர்களின் உற்பத்தியையும் வர்த்தக மயமாக்கலையும் அதிகரித்தல். | ஐ.அ.டொ. 13.2 மில். | 14.0 | 714.5 | 63.0 |
| 4. தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (1992-1999) | ஆ.ஆ.வ. | தென்மாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் | ஐ.அ.டொ. 8.1 மில். | 14.0 | 642.0 | — |
| 5. வடமேல் மாகாண நீர் மூலவளங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் (1993-1998) | ஆ.அ.வ. | செயற்றிட்டப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் பொருளாதார, சமூக மற்றும் ஊட்டச்சத்து நிலைமைகளை மேம்படுத்தல். | ஐ.அ.டொ. 2.7 மில். | 14.0 | 38.1 | 85.0 |
| 6. வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமும் வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமும் (1996-2003) | ஆ.அ.வ., வே.அ.ப.நி., க.ப.அ.அ., உ.உ.நி.தி. | தாழ்ந்த வருமானமுடைய குடும்பங்களின் வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்தை மேம்படுத்தல் மற்றும் தொழில்வாய்ப்பை அதிகரித்ததல். | இல. ரூபா 153 மில். இல. ரூபா 43 மில். | தற்பொழுது உள்ள சந்தைவீதம் | — | — |
| 7. சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் (1990-199) | வே.அ.ப.நி., க.ப.அ.நி., இலங்கை அரசு | தொழில்வாய்ப்பை உருவாக்கவும் சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்குமாக செலவுகுறைந்த உறுதியான நுண்பாக கொடுகடன் விநியோக முறையொன்றை நிறுவுதல். | இல. ரூபா 1.55 மில். | தற்பொழுது உள்ள சந்தைவீதம் | 363.0 | 92.0 |
| 8. உணவு ஊட்டச்சத்து மேம்பாட்டு கொடுகடன் திட்டம் (1997இல் தொடங்கப்பட்டது) | யப்பானிய அரசு | நாட்டில் உணவு உற்பத்தியையும், உணவுப் பதனிடல் தொழில் நுட்பத்தினையும் அதிகரித்தல். | இல. ரூபா 284 மில். | 16.0 | — | — |
| 9. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் (1986இலிருந்து) | இலங்கை அரசு | குறுங்கால உணவுப் பயிர்களைப் பயிரிடும் கிராமிய வேளாண்மையாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்தல். | | 10.0 | ஆண்டிற்கு ரூ.1000மில் | 60 பொதுவாக |
| 10. கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (மீளச் சுழலும் நிதி)ச் செயற்றிட்டம் (1998-2007) | இலங்கை அரசு | வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல். | இல. ரூபா 100 மில். | 16.0 | 33.3 | — |
| 11. சுறதுற நிகழ்ச்சித் திட்டம் (1996இலிருந்து) | இலங்கை அரசு | படித்த வேலையற்ற இளைஞர்களிடையே சுய தொழில் வாய்ப்பினை மேம்படுத்துவதன்மூலம் அவர்களின் வருமானத்தினையும் வாழ்க்கைத் தரத்தினையும் அதிகரித்தல் | இல. ரூபா 350 மில். | 10.0 | 350.0 | 65.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

### (i) வேளாண்மை புத்தாக்கச் செயற்றிட்டம்

1995 இல் வெற்றிகரமாக முடிவடைந்த வேளாண்மைப் புத்தாக்க செயற்றிட்டமானது, செயற்றிட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட நோக்கங்களுக்குப் புதிய கடன்களை வழங்கியதன் மூலமாக அதன் கடன் மீள் பெறுகைகளைத் தொடர்ந்தும் மீளக் கடனாக வழங்கியது. வேளாண்மைப் புத்தாக்கச் செயற்றிட்டத்தின் கீழ் மத்திய வங்கிக் கடன் மீள் பெறுகைகளையும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் மீள்கடன் வழங்கல்களையும் தொடர்ந்து கண்காணித்து நிருவகித்தது.

வேளாண்மைப் புத்தாக்க செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடனான ரூ.771.1 மில்லியனில், ரூ. 409.4 மில்லியன் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் 30 யூன் 1997 அன்று மீளப்பெறப்பட்டிருந்தது. அனைத்துப் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினதும் சராசரி மீளப்பெறல் வீதம் 67.4 சதவீத மாகக் காணப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்களிலமைந்துள்ள பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் கிளைகள் தாழ்ந்த வீத மீள் பெறுகைகளைக் காட்டியமைக்கு கடன் செலுத்தத்தவறிய துணைக் கடனாளிகளைச் சந்திக்கவும் தொடர்புகளை ஏற்படுத்தவும் அவர்களால் முடியாமல் போனமையே காரணமாகும். மீளப் பெறுகைகளை மீண்டும் கடனாக வழங்கும் ஒழுங்களின் கீழ், பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு ரூ.61.5 மில்லியன் கொண்ட 1,894 கடன்கள் வழங்கப்பட்டதுடன் இதில் 1997 யூன் 30 இல் ரூ. 29.8 மில்லியன் ஏற்கனவே மீளப் பெறப்பட்டன.

### (ii) சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டு 1989இல் தொழிற்பாடுகளைத் தொடங்கிய சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் 1997 திசேம்பரில் முடிவடைந்தது. இச் செயற்றிட்டம் சிறு உடமையாளர்களின் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரித்தல், தேயிலைத் தொழிற்சாலைகளின் தரத்தினையும் உற்பத்தியாற்றலினையும் மேம்படுத்தல், கிராமியப் பகுதிகளில் வருமானத்தினையும், தொழில் வாய்ப்புக்களையும் அதிகரித்தல் மற்றும் தேயிலை உடமையாளர்களுக்கான அரசின் ஆதாரப் பணிகளை மேம்படுத்தல் ஆகியவற்றினை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆரம்ப ஆண்டுகளில் கொடுகடன் திட்டத்தின் முன்னேற்றம் மெதுவாக இருந்தமைக்கு சிக்கலான நடைமுறைகள், ஏற்றுக் கொள்ளத்தக்க பிணைகளைக் கண்டறிவதில் காணப்பட்ட இடர்பாடுகள், உலக சந்தையில் காணப்பட்ட மந்தமான தேயிலை விலைகள் காரணமாக இலாபம் குறைவாக இருந்தமை போன்றன காரணங்களாயமைந்தன. எனினும், பல்வேறு சீராக்க வழிமுறைகளை மேற்கொண்டதன் பின்னர், 1994 இன் பின்னர் செயற்றிட்டத்தின் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது. இதன் விளைவாக 1997இன் தொடக்கப்பகுதியில் கொடுகடன் கூறாக, ஐ.அ. டொலர் 12.3 மில்லியனைக் கொண்ட மொத்த ஒதுக்கு (ஏறத்தாள ரூ. 687 மில்லியன்) பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் கொடுகடன்களுக்கான பகிர்ந்தளிப்பாக முழுமையாக வழங்கப்பட்டது. 1997 இறுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் ஒன்று சேர்ந்த கடன் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புக்களும் முறையே ரூ.847.7 மில்லியனாகவும் ரூ. 714.5 மில்லியனாகவும் விளங்கின.

ஆய்விற்குரிய ஆண்டில், ரூ.96.5 மில்லியன் பெறுமதி கொண்ட கடன்களுக்குப் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் ஒப்புதல்களை வழங்கின. முன்னர் ஒப்புதல் வழங்கப்பட்ட கடன்களையும் உள்ளடக்கிய பகிர்ந்தளிப்புக்கள் ரூ.174.8 மில்லியனாக விளங்கின. களஅபிவிருத்திக்காக (புதிய பயிரிடல் மற்றும் மீளப் பயிரிடல்) வழங்கப்பட்ட கடன்கள் ரூ.34.5 மில்லியனாக விளங்கிய வேளையில் நாற்றுமேடை அபிவிருத்தி மற்றும் தொழிற்சாலை அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட கடன்கள் முறையே ரூ.6.5 மில்லியனாகவும் ரூ.133.8 மில்லியனாகவும் விளங்கின. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒன்று சேர்ந்த மீள் நிதியிடல் 1997 இறுதியில் ரூ. 536 மில்லியனாக விளங்கியது. 1998 திசெம்பரில் கடன்களை நிறுத்துவதற்கு முன்னர் எஞ்சிய ரூ. 200 மில்லியனையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் கடன் பகிர்ந்தளிப்பு

க்களை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டன.

இதற்கு வசியளிக்குமுகமாக, கடன்கள் அலுவல்சார் ரீதியில் 1997 திசெம்பரில் முடிவடைந்து விட்டபோதும், ஆ.அ. வங்கி 1998 இறுதிவரை கொடுகடன் கூறிற்கு நிதியிட இணங்கியிருக்கிறது.

பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் கடன் நிதிகள் முழுமையாக பயன்படுத்துவதனை முகாமைப்படுத்துவது மட்டுமன்றி செயற்றிட்டத்தின் கீழ் 85 சதவீதமான திருப்திகரமான மீளளிப்பு வீதத்தினையும் பேணியது. இத் திருப்திகரமான செயலாற்றத்தினைக் கருத்திற் கொண்டு, ஆ.அ. வங்கி சிறு உடைமையாளர் தேயிலைத் துறைக்கான இரண்டாவது தொடர் கொடுகடனை வழங்குவதைனப் பரிசீலிப்பதற்கான அதன் விருப்பத்தினையும் தெரிவித்தது. முன் மொழியப்பட்ட இரண்டாவது செயற்றிட்டம் தொடர்பான தொழில் நுட்ப மதிப்பீடுகள் ஆ.அ. வங்கியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள 2ஆவது செயற்றிட்டம் தொழிற்பாட்டுக்கு வரும்வரை கடன் திட்டத்தின் தொடர்ச்சியினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில், பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் தேயிலை சிறு உடைமையாளர்களுக்கு அவற்றின் சொந்த நிதியிலிருந்து தொடர்ந்தும் கடன்களை வழங்க உடன்பட்டிருக்கின்றன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் கடன்படுநர்களுக்கு ஆண்டிற்கு 14 சதவீதத்தில் கடன்களை வழங்குவதனை இயலச்செய்யும் விதத்தில் தீர்வை நிதியிலிருந்து வட்டி உதவிக் கொடுப்பனவாக 4 சதவீத புள்ளியை வழங்குவதன் மூலமாக தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபை இவ்விடைக்கால ஒழுங்குகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இத்திட்டம் 1997 நவெம்பரிலிருந்து தொழிற்பாட்டிற்கு வந்தது.

## (iii) நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆ.அ. வங்கியினால் நிதியிடப்பட்டு 1990 இல் தொழிற்படத் தொடங்கிய நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆரம்பத்திலேயே அட்டவணையிடப்பட்டவாறு 1997 திசெம்பரில் நிறைவடைந்தது. இக் கொடு கடன் திட்டம் நிரந்தரப் பயிர்களின் குறிப்பாக சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் பழவர்க்கப் பயிர்களின் உற்பத்தியையும் வர்த்தகமயமாக்கலையும் மேம்படுத்துவதற்காக சலுகை வீதங்களில் வேளாண்மையாளர்களுக்கு நடுத்தர கால கொடுகடன் வசதிகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இச் செயற்றிட்டம் பல்லாண்டுப் பயிர்களின் சிக்கனமாகவும் உற்பத்தியாற்றல் மிக்கதுமான முறையில் கையாள்வதற்கும் பதனிடுவதற்கும் நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாட்டினை மேம்படுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

நிரந்தரப்பயிர்களின் அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் கீழ் கடன்களின் பகிர்ந்தளிப்பு 1997 இல் விரைவடைந்தமைக்கு, 1997இன் இறுதியில் இச் செயற்றிட்டம் முற்றுப் பெறுவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது என்பதனைக் கருத்திற் கொண்டு அச் செயற்றிட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து முகவர்களும் புத்தூக்கமொன்றினைக் காட்டியமையே முக்கிய காரணமாகும். இதன்படி, 1997 இறுதிவரை ஒன்றுசேர்ந்த கடன் ஒப்புதல்களும் பகிாந்தளிப்புக்களும் முறையே ரூ.773 மில்லியனாகவும் ரூ.604.3 மில்லியனாகவும் விளங்கின. மேற் குறிப்பிட்ட கடன்கள் தொடர்பாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த மீள் நிதியிடல் 1997 இறுதியில் ரூ. 508.2 மில்லியனாக விளங்கியது. பயிரிடப்பட்ட நிலப் பரப்பு, மற்றும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள துணைக் கடன்கள் ஆகிய இரு நியதிகளிலும் அடையப்பட்ட வெளிப்படையான சாதனைகள் 1988இல் செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்ட நேரத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை விஞ்சியுள்ளன.

இச் செயற்றிட்டத்தினால் அடையப்பட்ட திருப்திகரமான முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்டு, ஆசிய அபிவிருத்தி வங்கி சிஎஉ 14.743 மில்லியன் கடன் வசதியுடன் கூடிய இரண்டாவது பல்லாண்டுப்பயிர்கள் அபிவிருத்தி செயற்றிட்டமொன்றை ஆரம்பிக்கவும் உடன்பட்டிருக்கின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் அரசு மேற்கொண்ட கடன் தொடர்பான பேச்சுவார்த்தைகள் 1997 செத்தெம்பரில் முற்றுப்பெற்றதுடன் புதிய செயற்றிட்டத்தினை 1998இன் ஆரம்பத்திலிருந்து தொழிற்படுத்தவும் பட்டியலிடப்பட்டுள்ளது. இப்புதிய செயற்றிட்டத்திலும் கூட மத்திய வங்கியே கொடுகடன் கூறிற்கான நிறைவேற்று முகவராக தொழிற்படும்.

## (iv) தென் மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டு 1992 இல் தொழிற்படத் தொடங்கிய தென் மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டமானது, செயற்றிட்டப் பிரதேசத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை மேற்கொள்வதன் மூலமும் வருமானத்தினையும் தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்குவதன் மூலமும் தென்மாகாண மக்களின் வருமானத்தினையும் தொழில் வாய்ப்புக்களையும் உயர்த்துவதனைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. சிஎஉ 6.4 மில்லியனை (ஏறத்தாள ரூ. 450 மில்லியன்) மொத்தக் கொடுகடன் ஒதுக்காகக் கொண்ட கடனின் நிறைவேற்று முகவராக வங்கி தொழிற்படுகின்றது. இச்செயற்றிட்டம் தொடங்கியதிலிருந்து இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும், காலி, மாத்தறை, மற்றும் அம்பாந்தோட்டையிலுள்ள மூன்று பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாகத் தொழிற்பட்டன. இவ்வாண்டில் இக்கொடுகடன் திட்டத்தின் கீழ் தேசிய அபிவிருத்தி வங்கியும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனமாக அனுமதிக்கப்பட்டது. இவ்வனைத்து பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களும் தென்மாகாண சபையினால் மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்ட செயற்றிட்ட அலுவலகத்தின் உதவிகளைப் பெற்றுக் கொண்டன. இச் செயற்றிட்டத்தின் கீழ் வெலிகமவிலுள்ள சாளிமவுண்ட் கைத்தொழில் பேட்டையிலுள்ள சிறிய/நடுத்தர அளவுக் கைத்தொழில்களுக்கும் தென் மாகாணத்திலுள்ள சிறிய/நடுத்தர அளவுக் கைத்தொழில் களுக்கும் தென்மாகாணத்திலுள்ள சிறிய/நடுத்தர அளவுக் கிராமிய கைத்தொழில் முயற்சிகளுக்கும் நிதியிடுவதற்காக வங்கியினால் மீள் நிதியிடல் வழங்கப்பட்டது. 1997இல் செயற்றிட்டத்தின் கீழான கடன் வழங்கல் வீதமும் மீள் நிதியிடல் வீதமும் முறையே 14 சதவீதத்திலும் 6 சதவீதத்திலும் மாற்றமின்றியிருந்தன.

ஆய்விற்குரிய ஆண்டில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் ரூ.67.7 மில்லியன் தொகை கொண்ட 432 கடன்களை வழங்கி ஆண்டின் இறுதியில் ரூ.212 மில்லியன் கொண்ட ஒன்று சேர்ந்த பகிர்ந்தளிப்பினைப் பதிவு செய்தன. 1997 இல் வங்கி, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கான மீள் நிதியிடல் வடிவில் 432 கடன்கள் தொடர்பாக ரூ.60.7 மில்லியன் கொண்டதொரு தொகையை வழங்கியது. இதன்படி 1997 இறுதியில் 5541 கடன்கள் தொடர்பாக ஒன்று சேர்ந்த மீள் நிதியிடல் ரூ. 187.8 மில்லியனாக விளங்கியது.

## (v) வடமேல் மாகாண நீர் மூலவளங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வடமேல் மாகாண நீர் மூலவளங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் 1997இல் அதன் நான்காவது ஆண்டினை நிறைவு செய்தது. செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறு சிஎஉ 1.6 மில்லியனாக (ஏறத்தாள ரூ.100 மில்லியன்) விளங்கி வடமேல் மாகாணத்தில் வேளாண்மைக்கான கிணறுகளை அமைத்தல், ஏற்று நீர்ப்பாசன துணைச் செயற்றிட்டங்கள், கிராமியப் பெண்களுக்கு வருமான உருவாக்கத்தினையளிக்கும் சுயவேலைவாய்ப்பு செயற்றிட்டங்கள் ஆகிய மூன்று முக்கிய துணைக்கூறுகளை உள்ளடக்கியிருந்தது. இச் செயற்றிட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து புத்தளம் மற்றும் குருநாகல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கியும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக இச் செயற்றிட்டத்தில் பங்கேற்றவேளையில் மக்கள் வங்கியும் இலங்கை வங்கியும் 1996இல் இக் கொடுகடன் திட்டத்தில் இணைந்து கொண்டன.

ஆய்விற்குரிய ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதலுடன் மத்திய வங்கி கொடுகடன் திட்டத்தின் செயலாற்றத்தினை முன்னேற்றுவதற்காக பல வழிமுறைகளை மேற்கொண்டது. இவை வேளாண்மைக்கான கிணறுகள், மற்றும் கிராமிய பெண்களுக்கான சுயவேலைவாய்ப்பு என்பனவற்றிக்கான கடன்களின் எல்லையை ரூ.50,000இற்கு உயர்த்தியமையையும் ஏற்றல் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர்த்தாங்கி கோபுரமொன்றின் கட்டுமானத்திற்காக ரூ.60,000 வழங்கப் பட்டமையையும், முதற் கடனை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ள பெண்களுக்கு ஆகக் கூடிய ரூ.70,000 வரையான கடன்கள் வழங்கப் பட்டதையும், வேளாண்மையாளர் அமைப்புக்களூடாக பெண் நன்மைபெறுநர்களை இனம் காணல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

1997 இறுதியில், பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் வடமேல் மாகாணத்தில் 725 வேளாண்மைக் கிணறுகளின் கட்டுமானத்திற்காக ரூ. 22.81 மில்லியனையும் பெண்களுக்கான 1031 சுயவேலை வாய்ப்புத் துணைச் செயற்றிட்டங்களுக்காக ரூ.14.2 மில்லியனையும் பகிர்ந்தளித்துள்ளன. 1997 இல் தீவிர செயற்பாட்டினைக் கொண்டிருந்த ஏற்றல் நீர்ப்பாசன செயற்றிட்டத்தில் ரூ. 1.1 மில்லியன் செலவில் 41 திட்டங்களுக்கு நிதியிடப்பட்டது. 1997 இறுதிவரை இச் செயற்றிட்டத்தின் கீழ் மத்திய வங்கி அனைத்துப் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கும் மீள் நிதியிடலாக ரூ. 29.2 மில்லியனை வழங்கியுள்ளது.

## (vi) ஆ.அ. வங்கியினால் நிதியிடப்பட்ட வடமத்திய மாகாணத்தின் கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டமும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட பங்கேற்புக் கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமும்

வடமத்திய மாகாண பங்கேற்புக் கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம், வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆகிய இரு வறுமையொழிப்புச் செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசு வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்துடனும் இரண்டு கடன் உடன்படிக்கைகளுக்கு கையெழுத்திட்டுள்ளது. வடமத்திய மாகாண - பங்கேற்புக் கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் 1996இலிருந்து தொழிற்படத் தொடங்கிய வேளையில் வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் 1997இல் தொடங்கப்பட்டது. இவ்விரு செயற்றிட்டங்களினதும் பொதுவான பரந்த குறிக்கோள்களாக வடமத்திய மாகாணத்தின் மாவட்டங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் கொடுகடன் வசதிகளுக்கான ஏற்பாடு என்பனவற்றினூடாக வறுமையை ஒழிப்பதும் வேளாண்மையாளர்களின் உற்பத்தியாற்றலை மேம்படுத்துவதும் விளங்கின.

இவ்விரு செயற்றிட்டங்களினதும் கொடுகடன் கூறுகளுக்கான உச்ச இணைப்பு முகவராக மத்திய வங்கி விளங்கியது. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் - வட மத்திய மாகாண/பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறினை தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் நிதிகளைப் பயன்படுத்தியதன் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது. எனினும், தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக அடிமட்டத்தில் தொழிற்பட வேண்டியிருந்த பங்காளர் அமைப்புக்கள் தோல்வியுற்றமையும் அதனைத் தொடர்ந்து தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டமையுமே இவ்வொழுங்குகள் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியாமல் போனமைக்கு காரணங்களாகும். எனவே வடமத்திய மாகாண - பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறினை ஆசிய அபிவிருத்தி வங்கி - வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்துடன் ஒருங்கிணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இக் கொடுகடன் கூறு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால், சொத்துப் பட்டியலின் 2 சதவீதப் புள்ளியைக் கொண்ட பணிக்கட்டணங்களின் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய ஆதரவுப் பணிகளின் வழங்கல் என்பனவற்றினால் உதவியளிக்கப்பட்ட அவற்றின் சொந்த நிதிகளிலிருந்து நிதியிடப்பட்டது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நசனல் வங்கி, செலான் வங்கி என்பனவற்றின் பங்களிப்புடன் இவ்விரு செயற்றிட்டங்களினதும் கொடுகடன் கூறுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப அடிப்படை வேலைகள் 1997 இறுதியளவில் முற்றுப் பெற்றதுடன் இக் கொடுகடன் திட்டம் 1998இன் ஆரம்பத்தில் நடைமுறைக்குவரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## (vii) சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

நிறைவேற்று முகவராக வங்கி தொழிற்பட்ட சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் ஆரம்பத்திலேயே அட்டவணையிடப்பட்டவாறு செயற்றிட்டத்தின் வடிவமைப்புக் கட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்த பின்னர் 1997 திசெம்பரில் முற்றுப்பெற்றது. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் (ஐ.அ.டொலர் 6.7 மில்லியன் கொண்ட கடன்) கனடிய பன்னாட்டு அபிவிருத்தி முகவர் (ஐ.அ.டொலர் 6.6 மில்லியன் கொண்டதொரு கொடை இலங்கை அரசு

(ஐ.அ.டொலர் 4.1 மில்லியன் கொண்ட கொடை) என்பனவற்றின் நிதியிடலுடன் வறுமை ஒழிப்பின் முன்னோடிச் செயற்றிட்டமாக 1990இல் தொடங்கப்பட்ட இச் செயற்றிட்டம் காலி, மாத்தறை, கண்டி, புத்தளம் ஆகிய நான்கு தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டது.

1997 இறுதியில் உள்ளவாறு இச் செயற்றிட்டம் குறிப்பிட்ட நான்கு மாவட்டங்களிலுமுள்ள 2274 கிராமங்களை உள்ளடக்கியுள்ளதுடன் செயற்றிட்ட நன்மை பெறுநர்களுக்கு உதவிகளை வழங்கும் விதத்தில் 8203 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இக் குழுக்களிலுள்ள நன்மை பெறுநர்களின் மொத்த எண்ணிக்கை 49,746 ஆக அமைந்து செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்ட நேரத்தில் இலக்கிடப்பட்ட 32,000இனைவிட மிக உயர்வாகக் காணப்பட்டது. இச் செயற்றிட்டத்தில் காணப்பட்ட மிகக் குறிப்பிடத்தக்க பண்புயாதெனில் பெண் கடன் பெறுநர்கள் தீவிரமாகவும் பெருந்தொகையிலும் பங்கேற்று 26,832 பேராக அல்லது மொத்த நன்மை பெறுநர்களில் 67 சதவீதமாகக் காணப் பட்டமையேயாகும். கடன் பெறுநர்கள் வருவாய் உருவாக்க சுயவேலை வாய்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதனை இயலச் செய்யும் பொருட்டு ஆண்டினிறுதியில் 40,275 பேருக்கு நுண்பாகக் கடனாக ரூ.363 மில்லியன் கொண்ட தொகை முற்பணமாக வழங்கப்பட்டது. கடனின் சராசரி அளவு ரூ.9,000ஆக விளங்கிய வேளையில் செயற்றிட்டம் 91 சதவீதத்திற்கு மேற்பட்ட வரவேற்கத்தக்க மீளப் பெறல் வீதத்தினை நிலையாகப் பேணியுள்ளது.

நன்மை தொடர்பான கண்காணிப்பு, மற்றும் செயற்றிட்ட செயலாற்றம் என்பனமீது 1997 யூனில் வங்கியினால் நடத்தப்பட்ட மாதிரி அளவீடொன்று, செயற்றிட்ட நடவடிக்கைகள் மூலமாக 80 சதவீதமான நன்மை பெறுநர்கள் வறுமைக் கோட்டைத் தாண்டியுள்ளமையை எடுத்துக்காட்டியது. 1997 இறுதியில் செயற்றிட்டம் முடிவுறுவதனால், வருவாய் உருவாக்க நடவடிக்கையில் முதலீடுகளைத் தொடர்வதன் மூலமாக நன்மை பெறுநர்களின் ஆற்றலினை உறுதிப்படுத்துவது அவசியமாக இருந்தது. இக் குறிக்கோளினை அடையும் பொருட்டு வங்கி, மாவட்டத்திலுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளைச் செயற்றிட்டத்திற்கான வங்கியாளராக தொடர்ந்து ஈடுபடுத்துவதன் மூலமும் கடன் மீளப்பெறல்களை மீண்டும் கடன் வழங்கப் பயன்படுத்துவதன் மூலமும் மேலும் 20 ஆண்டுக் காலப்பகுதிக்கு செயற்றிட்ட நடவடிக்கைகளைத் தொடருவதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டுள்ளது. சிறப்புச் செயற்றிட்ட சுழலும் நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருக்கும் இக்கடன் மீளப் பெறல்கள் 1997 இறுதியில் ரூ. 256.2 மில்லியனாக இருந்தன.

செயற்றிட்ட நன்மை பெறுநர்களுக்கு கொடுகடன்களையும் ஏனைய ஆதரவுப் பணிகளையும் வழங்குவதற்கான ஊடகமாக உருவாக்கப்பட்ட சிறு சுய உதவிக் குழுக்களின் செயற்பாடு ஆண்டின் இறுதியில் முடிவடைவதனால், இக்குழுக்களை நன்மை பெறுநர்களுக்கும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்குமிடையிலான இணைப்பாளராக தொழிற்படும் விதத்தில் பாரிய சுயவிருப்ப அமைப்புக்களாக வடிவமைப்பதற்கான அவசியம் உணரப்பட்டது. இதனால், கிராமப்புறங்களில் தொழிற்படுகின்ற பல குழுக்கள், சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடன் கூட்டுச் சபைகளாகக் கம்பனிகள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்டுள்ள சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் அபிவிருத்திச் சங்கங்களுடன் (இசுறு சங்வர்த்தன சமித்தி) ஒருங்கிணைக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் சம்பந்தப்பட்ட சங்கங்களின் கீழ் அத்தகைய வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட 110 சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தினூடாக வங்கி இவ்வாண்டில் ஒன்று திரட்டிய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் நோக்கில் **"இசுறு: ஒரு கடவை"** என்ற தலைப்பில் ஒரு வீடியோ விவரணப் படத்தையும் **"இசுறு மான்பெதீ பியவற தபுவோ"** என்ற தலைப்பில் சிங்கள மொழியிலான விடய ஆய்வு நூலொன்றையும் வெளியிட்டது. இதற்கு மேலதிகமாக, பெண்களின் உரிமைத்துறைகள், தொழில்நுட்ப மாற்றல்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் வறுமை ஒழிப்புக் கோட்பாடு என்பனவற்றை உள்ளடக்கும் ஏனைய பல விவரண வீடியோக்களும் வங்கியினால் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### (viii) உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டம்

உணவு வேளாண்மை அமைச்சு கேட்டுக் கொண்டதற்கிணங்க இலங்கை மத்திய வங்கி 1997 இல் உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டமென்ற பெயரில் புதிய கொடுகடன் திட்டமொன்றினைத் தொடங்கியது. இக் கொடுகடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அரசினால் பெறப்பட்ட யப்பானிய உணவு உற்பத்திக் கொடையின் இணைக்கிணை நிதியத்திலிருந்து ரூ.284 மில்லியனை அரசு ஒதுக்கியது. இலங்கை மத்திய வங்கி கொடுகடன் திட்டத்தினை வடிவமைத்து கடன் வழங்கும் வங்கிகளூடாக நடைமுறைப்படுத்தியது. இக் கொடுகடன் திட்டமானது நாட்டில் உணவு உற்பத்தியையும் உணவு பதனிடும் தொழில் நுட்பத்தையும் மேம்படுத்துவதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தும் பொருட்டே அறிமுகப்படுத்தப் பட்டது.

இத் திட்டத்தின் கீழ், வேளாண்மைக்கு செலவுச் சிக்கன கொடுகடன் வழங்கல் பொறிமுறையொன்றினை ஏற்படுத்தும் வழிமுறையாக வேளாண்மையாளர்கள் அமைப்புக்கள்/கிராமிய அமைப்புக்கள்/கூட்டுறவு நிறுவனங்கள்/சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனிப்பட்ட வேளாண்மையாளர் என்பனவற்றினூடாக கொடுகடனை வழிப்படுத்துவதற்கு நிதியியல் நிறுவனங்களை ஊக்குவிப்பதன் வாயிலாக வேளாண்மைத் துறையை மீளமைப்பதனையும் நாட்டின் உணவு உற்பத்தியினை மேம்படுத்துவதனையும் குறிக்கோளாகக் கொண்டு வேளாண்மை அமைப்புக்கள்/கூட்டுறவுச் சங்கங்கள், தனிப்பட்ட வேளாண்மையாளர்கள் மற்றும் கிராமிய அமைப்புக்களுக்கு கொடுகடன் வசதிகள் வழங்கப்படும். இத் திட்டம் புதிய வேளாண்மைக் கைத்தொழில்களை அறிமுகப்படுத்தி உற்பத்தியாற்றலை மேம்படுத்தக்கூடியதும் வீண்விரயத்தை ஆகக் குறைக்கக் கூடிய விதத்தில் பெருமளவு உணவுத் தானியங்களை பாதுகாத்து வைக்கக் கூடிய இயலளவுடன் கூடிய களஞ்சியப்படுத்தும் வசதிகளுக்கான ஏற்பாடு, மற்றும் அறுவடை முடிவடைந்த காலத்தில் பயன்படுத்துவதற்கான தாங்கிருப்புக் களைப் பேணுதல் என்பனவற்றை மேற்கொள்ளக் கூடிய இயலாற்றல்மிக்க செயற்றிட்டங்களை ஊக்குவிக்கவும் இத் திட்டம் எண்ணியுள்ளது.

ஆண்டிற்கு 10 சதவீத வட்டி வீதத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நசனல் வங்கி, சம்பத் வங்கி, செலான் வங்கி, மற்றும் கொமர்சல் வங்கி என்பவற்றினூடாக கொடுகடன் வழங்கப்படும். கடன் வழங்கும் வங்கிகள் பங்காளர் அமைப்புக்கள் அவர்களின் உறுப்பினர்களுக்கு ஆண்டிற்கு 10 சதவீதத்தில் கடன்களை வழங்கும் பொருட்டு அவற்றிற்கு ஆண்டிற்கு 6 சதவீத வட்டி வீதத்தில் தொகை வடிவில் கடன்களை வழங்கும்.

விவசாய, காணி அமைச்சு, அவற்றின் மாகாண அலுவலகங்களூடாக தகைமை பெற்ற வேளாண்மையாளர்களுக்கு தொழில் நுட்ப அறிவினையும் ஆதரவு வசதிகளையும் வழங்குதல், மற்றும் கீழ் மட்டத்தில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுடன் திட்டங்களை இணைத்தல் என்பனவற்றில் உதவிகளை வழங்கும்.

### (ix) கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய (சுழல்கின்ற நிதி) செயற்றிட்டம்

1986-1995 காலப்பகுதியில் நடைமுறைப் படுத்தப்பட்ட கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் கடன் மீளப் பெறுகைகளை சுழல்கின்ற நிதிய கொடுகடன் திட்டத்தினூடாக இதே நோக்கங்களுக்காக மீண்டும் கடனான வழங்குகின்றது. இதன்படி, ஒன்று சேர்ந்த கடன் மீளப் பெறுகைகளிலிருந்து சுழல்கின்ற நிதியக் கொடுகடன் திட்டமொன்றினை நிறுவுவதற்காக 1997இல் திட்ட அமுலாக்கல் அமைச்சின் பிரதேச அபிவிருத்திப் பிரிவின் ஒத்துழைப்புடன் மத்திய வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவ்வொழுங்கின் கீழ் மத்திய வங்கி பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களான கேகாலை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி, இலங்கை வங்கி, மற்றும் மக்கள் வங்கியுடன் துணைக்கடன் உடன்படிக்கைகளில் கையெழுத்திட்ட பின்னர் 1997இன் நடுப்பகுதியில் கொடுகடன் பகிர்ந்தளிப்புக்கள் ஆரம்பமாகின.

கொடுகடன் திட்டத்தின் கீழ், தகைமை பெற்ற கடன்பாட்டாளர்களுக்கு அவர்கள் சுய வேலை வாய்ப்புப் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலச் செய்யும்

விதத்தில் ஆண்டொன்றிற்கு 10 சதவீத வட்டி வீதத்தில் ஆகக் கூடுதலாக ரூ.250,000 வரையிலான கடன்கள் வழங்கப்பட்டன. சுதந்திர மான அடிப்படை முறையில் தொழிற்படும் சிறப்புப் பயிற்சி பெற்ற வியாபார அபிவிருத்தி அலுவலர்களின் மூலம் கடன்பாட்டாளர்கள் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுடன் இணைக்கப் பட்டனர். 1997இறுதியில், 15 அத்தகைய அலுவலர்கள், சம்பந்தப்பட்ட பங்கேற்கும் நிறுவனங்களின் கிளைகளில் கடமையாற்றினர்.

1997இன் நடுப்பகுதியில் செயற்றிட்டம் தொழிற்படத் தொடங்கிய பின்னர், ஆண்டின் இறுதியில் பங்கேற்கும் நிறுவனங்களினால் ரூ.30 மில்லியன் பெறுமதி கொண்ட 550 கடன்களுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. இதில் ரூ.22 மில்லியன் கடன்படுநர்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டது. அத்தகைய பகிர்ந்தளிப்புக்களின் மீது வங்கியினால் ரூ. 10.5 மில்லியன் பெறுமதி கொண்ட மீள் நிதியிடல் விடுவிக்கப்பட்டது.

### (X) சுறதுற நிகழ்ச்சித் திட்டம் - நுண்பாக தொழில் முயற்சி கொடுகடனூடாக சுயதொழில் மேம்பாடு

1996 செத்தெம்பரில் அரசினால் தொடங் கப்பட்ட சுறதுற நிகழ்ச்சித் திட்டம், தொழிலற் றோர்க்கு குறிப்பாக படித்த இளைஞர்களுக்கு அவர்களினால் வருவாய் உருவாக்க சுயதொழில் வாய்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதனை இயலச் செய்யும் விதத்தில் நுண்பாக நிதி வழங்கப்பட்டது. மத்திய வங்கியினால் நடை முறைப்படுத்தப்பட்ட இச் செயற்றிட்டம் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாகத் தொழிற்படும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மற்றும் அட்டன் நசனல் வங்கி என்பனவ ற்றினால் தொழிற்படுத்தப்பட்டு வருகின்றன.

இத் திட்டத்தின் கீழ், பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள் நிதியிடலை வழங்குவதற்காக 1997 வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் ரூ.350 மில்லியன் கொண்ட தொகையை ஒதுக்கியுள்ளது. தகைமைபெற்ற கடன்பாட்டாளர்களுக்கு 9,009 கடன்களை வழங்கியதன் மூலம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிலேயே பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் இவ்வொதுக்குகள் முழுமை யாகப் பயன்படுத்தப்பட்டன. இக் கடன்களில் சிறு கைத்தொழில்களும் (48 சதவீதம்) வர்த்த கத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்றிட்ட ங்களும் (38 சதவீதம்) பெருந் தொகைக்கு வகைகூறின. மிகுதி 14 சதவீதமும் வேளாண்மை, கால்நடைவளர்ப்பு மற்றும் மீன் பிடித்துறைச் செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்டன.

பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டமையைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் செயற்றிட்டத் தின் கட்டம் IIஇனை புதிய வடிவமைப்புடன் தொடங்குவதற்கு தீர்மானித்துள்ளது. கட்டம் II இன் கீழ் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் அவற்றின் சொந்த நிதியிலிருந்து கொடுகடன் திட்டத்திற்கு நிதியிட உடன்பட்டனவெனினும், ஆண்டிற்கு 10 சதவீதத்தில் கடன்பாட்டாளர் களுக்கு கடன் வழங்குபவர்களுக்கு 10 சதவீதப் புள்ளி கொண்ட வட்டி உதவிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டது.

கட்டம் IIஇன் கீழ், இலக்கிடப்பட்ட கடன்பாட்டாளர்களினால் அவர்கள் சுயதொழில் வாய்ப்புச் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் விதத்தில் ரூ. 500 மில்லியன் பெறுமதி கொண்ட 10,000 கடன்களைப் பகிர்ந்தளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுறதுற கட்டம் Iஇன் கீழ் கடன் பயன்பாட்டின் நிலையை மதிப்பீடு செய்யும் பொருட்டு, வங்கி 1997 யூலையில் தீவு முழுவதும் மாதிரி அளவீடொன்றினை மேற்கொண்டது. கடன்பாட்டாளர்களில் 85 சதவீதத்தினர் அவர்கள் எந்தச் செயற்றிட்டத்திற்காகக் கடன் பெற்றார்களோ அதற்கான நிதியைப் பயன்மிக்க முறையில் பயன்படுத்தியுள்ளமையை இவ்வளவீடு எடுத்துக்காட்டியது.

### (xi) கூனி இறால் வளர்ப்போருக்கான நிவாரணத் திட்டம்

வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாள ராகத் தோற்றம் பெற்றுவரும் கூனி இறால் பண்ணைக் கைத்தொழில் 1996இல் மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்திய வெள்ளைப் புள்ளி நோயினால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டது. 1996 இல் மத்திய வங்கி பாதிக்கப்பட்ட குளங்களை விரைவாக மீட்டு புனரமைப்பு செய்வதற்கான வசதிகளை

வழங்கிய வேளையில் இக் கைத்தொழிலுக்கு கடன் வழங்கும் வங்கிகள் நிவாரணத் தொகுதி யொன்றினை அறிமுகப்படுத்தின. நிவாரணத் தொகுதியானது 15 மாதங்களுக்கு கடன்களைத் தாமதித்துச் செலுத்துதல், ஆண்டிற்கு 5 சதவீத வட்டி வீதத்தில் வெளிநின்ற கடன்களை மீள அட்டவணைப்படுத்தல், தற்போது நிலவும் சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதத்தில் புதிய கடன்களை வழங்குதல், புதிய அறுவடைகளிலிருந்து வெளிநின்ற கடன்களை விரைவாக மீளச் செலுத்தல் மற்றும் குளங்களின் புத்தாக்கத்திற்கு தேசிய நீர்வாழ் உயிரின மூலவள முகவராண்மையிலிருந்தான தொழில் நுட்ப உதவிகள் என்பனவற்றை உள்ளடக்கி யிருந்தது. இறால் வளர்ப்போரில் ஏறத்தாள அரைப்பங்கினர் இவ் வசதியைப் பயன்படுத்திய வேளையில், 1997 இன் நடுப்பகுதியில் புத்தாக்கம் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டதிலும் பார்க்க நீண்ட காலத்தினை எடுத்திருப்பது உணரப் பட்டது. எனவே கடற்றொழில் நீரியியல் மூலவள அபிவிருத்தி அமைச்சின் வேண்டுகோளின்படி கடன்வழங்கும் வங்கிகள் மேலும் ஒரு காலப் பகுதிக்கு நிவாரணத் தொகுதியினை தொடர வேண்டுமென மத்திய வங்கி அறிவுறுத்தியது. இதன்படி கடனைத் தாமதித்துச் செலுத்தக் கூடிய காலம் ஆண்டிற்கு 5 சதவீத வட்டியில் 1997 செத்தெம்பரிலிருந்து மேலும் 8 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.

### (xii)தெங்கு அபிவிருத்திக் கடன் திட்டம்

தெங்கு உற்பத்தியையும் தெங்கு நிலங்களின் உற்பத்தியாற்றலையும் அதிகரித்தல், பண்ணை வருமானத்தினையும் தெங்கு வளர்போரின் வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்துதல், தெங்குத் துறையில் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் ஆகிய குறிக்கோள்களுடன் தெங்கு அபிவிருத்திச் சபையானது மத்திய வங்கி மற்றும் கடன் வழங்கும் வங்கிகளின் ஆலோசனையுடன் புதிய கொடுகடன் திட்டமொன்றினை அறிமுகப் படுத்தியுள்ளது. சபையினால் முன்னர் நடை முறைப்படுத்தப்பட்ட உதவிக் கொடுப்பனவுத் திட்டத்திற்குப் பதிலாக கொடுகடன் திட்டம் கொண்டுவரப்பட்டதுடன் இது முன்னர் பின்பற் றப்பட்டு வந்த உதவிக் கொடுப்பனவினை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி உபாய ங்களிலிருந்தும் வேறுபட்டதாகும். கடன் திட்டத் தினை நடைமுறைப்படுத்துவதில் தெங்கு அபிவி ருத்திச் சபைக்கு மத்திய வங்கியினால் மதியுரை களை வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடன் திட்டம் ஆரம்பத்தில் கம்பகா, குருநாகல், புத்தளம், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களை உள்ளடக்கிய விதத்தில் முன்னோடித் செயற்றிட்டமாக முக்கிய தெங்கு விளையும் பிரதேசங்களில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நசனல் வங்கி, குருநாகல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி, சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இலங்கை தெங்கு உற்பத்தியாளர் சங்கங்களின் ஒன்றியம் என்பன இத் திட்டத்தில் பங்குபற்றவு ள்ளன.

இடைப் பயிர்ச்செய்கை மற்றும் தனிப் பயிர்ச்செய்கை ஆகிய இரு பயிர்ச்செய்கையிலும் புதிய பயிரிடல்/மீளப் பயிரிடல் என்பனவற்றிற்கும் கடன் வழங்கப்படும்.

கடன் வழங்கும் வங்கிகள் கடன்பாட்டாளர் களுக்கு வங்கிகளின் சொந்த நிதியைப் பயன் படுத்தி ஆண்டொன்றிற்கு 18 சதவீத வட்டி வீதத்தில் ஓராண்டு சலுகைக் காலம் உட்பட 5 ஆண்டுக் காலப்பகுதிக்கு கடன்களை வழங்கும். பண்ணைத் திட்டங்களிலும் காசுப் பாய்ச்சல் வரவு செலவுத் திட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப் பட்டவாறாக விதந்துரைக்கப்பட்ட வேளாண்மை நடைமுறைகளை வெற்றிகரமாக பின்பற்றியுள்ள கடன்பாட்டாளர்களுக்கு தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையினால் தீர்வை நிதியங்களி லிருந்து 1ஆம் ஆண்டில் 100 சதவீதத்திலும் அதன் பின்னர் உள்ள 4 ஆண்டுகளின் ஒவ்வொரு ஆண்டிற்கும் 50 சதவீதத்திலும் வட்டி தள்ளுபடி வழங்கப்படும்.

17,500 ஏக்கர் தெங்கு நிலத்தினை அபிவிருத்தி செய்வதற்காக ஏறத்தாள ரூ 672 மில்லியன் கடன் வழங்கும் வங்கிகளினால் வழங்கப்படும். தனிப்பட்ட வேளாண்மையாளர் ஒருவருக்கான நிதியின் அளவு ஆண்டிற்கு 1/2 – 5 ஏக்கருக்குள் இருக்கும்.

## கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி

1997ஆம் ஆண்டில் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி நடாத்திய 89 பயிற்சி நெறிகளில் 2,384 பேர் பங்குபற்றினர். இதில் சிறிய அளவு தொழில் முயற்சியாளர் மற்றும் சுய தொழில் செய்வோர் 1,258 பேரும் 357 மத்திய வங்கி ஊழியர்களும், 250 வர்த்தக வங்கி ஊழியர்களும், 396 பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கி ஊழியர்களும், ஏனைய நிறவனங்களிலிருந்து 213 பேரும் பங்குபற்றினர். 89 பயிற்சி நெறிகளில் 49 கற்கை நெறிகள் கல்லூரியிலும் மிகுதி வெளியிடங்களிலும் நடைபெற்றன.

கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்பட்ட 49 பயிற்சி நெறிகளில் 11 பயிற்சி நெறிகள் தனியாகவே பிரதேச கிராமிய அபிவிருத்தி ஊழியர்களுக்கானதாக அமைந்தன. நகைகளைப் பிணையாகப் பெற்று கடன் வழங்கல், கடன் வழங்கலுக்கான பிணைய தொடர்புடைய சட்ட நடவடிக்கைகள் கணக்கீடு, உள்ளக கணக்காய்வு, திட்ட மதிப்பீடும் முகாமைத்துவமும் போன்றன பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட முக்கிய பயிற்சி நெறிகளாகும். 13 கணனி பயிற்சிநெறிகள் மத்திய வங்கி அலுவலர்களுக்கென மட்டும் வகுக்கப்பட்டு தனியாள் கணனியின் பயன்பாடு, வங்கிப் பணிகளைச் சந்தைப் படுத்தல், நிதியியல்துறை சீர்திருத்தங்கள், பயன் தரும் கடன் முகாமைத்துவம், முதலீடு மற்றும் வணிக வங்கியியல் தரத்துக்காக குழுப்பணி வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகள், முகாமைத்துவ மாற்றங்கள், நிதி முகாமைத்துவம், உபாய திட்டமிடல், வர்த்தக வங்கி தொழிற்பாடுகள் மற்றும் பிரயோகங்கள் ஓய்வுக்குப்பின் நீண்டநாள் வாழ்க்கை சிறப்புக்கான முகாமைத்துவம், தேசிய பொருளியல் முகாமைத்துவம், அதிகரித்த முகாமைத்துவக் கட்டுப்பாடும் மற்றும் இலாபத் தன்மையும் மூலவள ஒதுக்கீடும் அபிவிருத்தியும், சிறந்த அறிக்கை எழுதல், இடர் நேர்வு முகாமைத்துவம் என்பன கல்லூரியில் நடாத்தப்பட்ட பாட நெறிகளில் சிலவாகும்.

வெளியிடங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள் தொழில் முயற்சி அபிவிருத்தி நுண்பாக தொழில் முயற்சி, தலைமைத்துவ முகாமைத்துவம் என்பனவற்றினை முக்கியமாகக் கொண்டிருந்தன. இத்தகைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்ட ரீதியாக மாத்தறை, காலி, கண்டி, புத்தளம் என்பவற்றை உள்ளடக்கி சிறு விவசாயிகள் நிலமற்றோர் செயற்றிட்டத்தின்கீழ் நடாத்தப் பட்டன. கெயர் இன்ரநசனல் மற்றும் கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றின் வேண்டுதலுக்கு ஏற்ப வெளிக்கள அலுவலர்/குழு செயற்றிட்டத்தின் பங்காளர் வாணிப அபிவிருத்தி ஆலோசகர்கள், ஒருங்கிணைக்கப் பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் பிராந்திய இணைப்பாளர்களிடையே இரண்டு சிறப்பு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப் பட்டன.

மத்திய வங்கி ஊழியர்களுக்கான ஆங்கில மொழி சுய பயில்வு நிலையம் 1996இன் பயங்கர நிகழ்வினால் ஏற்பட்ட தற்காலிக பின்னடைவின் பின்னர் 1997 யூலையில் மீண்டும் தொடங்கப் பட்டது. 1997இன் இரண்டாமரைப் பகுதியில் 96 மத்திய வங்கி ஊழியர்கள் சுயபயில்வு நிலையத்தில் இவ்வசதிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இக்காலப் பகுதியில் சுய பயில்வு நிலையத்தில் பயிற்சித் திறமை மற்றும் வாய்மொழி தொடர்பு, அறிக்கை எழுதுதல் என்பனவற்றில் திறமை பெறுவதற்காக வகுப்புக் களும் நடாத்தப்பட்டன.

ஆசிய பசுபிக் கிராமிய மற்றும் வேளாண்மை கொடுகடன் அமைப்பின் உறுப்பினர் களின் சுயதொழில் தொகுதிகளுடன் வங்கிகளை இணைப்பதற்காக கிராமியக் கொடுகடன் திணைக்களத்துடன் இணைந்து கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி ஒப்பீட்டு கிராமிய ஆய்வு ஒன்றினை நடாத்தியது.

கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் 16ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது பொருளியல் வளர்ச்சிக்காக மேலும் எதனைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற தலைப்பில் மார்கா நிறுவனத்தின் உபதலைவர் முனைவர் ஜி.அஸ்வத்த- ஆராச்சியினால் விரிவுரையொன்று வழங்கப்பட்டது.

## ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் நியதிகளுக் கிணங்க உதவு தொகைகள், தண்டப் பணம் பெறுதல் மற்றும் முதலீடு செய்வதன் மூலம் பெறப்படும் வருவாய், பதிவு செய்யப்பட்ட தொழில் வழங்குநர்களினதும் தனிப்பட்ட உறுப்பினர்களினதும், பொருத்தமான கணக்கு களைப் பேணல் உறுப்பினர்களின் நன்மைகளை மீளளிப்புச் செய்தல் ஆகிய பொறுப்புக்கள் மத்திய வங்கியின் நாணயச்சபையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகித்தல் மற்றும் வலுப் படுத்தல் ஆகிய விடயங்களில் ஈடுபட்டுள்ள தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேம நிதியப் பிரிவுடனான நெருங்கிய கூட்டுறவுடன் இந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

1996இல் கணனி தரவுத்தளம் தகர்க்கப் பட்டதைத் தொடர்ந்து பெருமளவு ஆவணங்க ளும் அழிக்கப்பட்டிருந்தன. புதிய ஐ.பி.எம்.ஏ.எஸ். 400 மென்கலக் கணனியை பிரயோகித்து ஊழியர் சேம நிதி உறுப்பினர்களின் கணக்குகள் கணனித் தரவுத் தளத்தின் மூலம் மீள அமைக்கப் பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன.

குண்டு வெடிப்பினால் கணக்கிட முடியாமல் தடைப்பட்டிருந்த எல்லா உறுப்பினர்களினதும் 1994, 1995 ஆம் ஆண்டுக்குரிய கணக்குகளுக்குரிய ஆண்டுக் கூற்றுகள் 1997 இல் வழங்கப்பட்டன.

### உதவு தொகை

தற்காலிகத் தரவுகளின்படி 1997 இல் நிதியத்தினால் பெறப்பட்ட உதவு தொகை 1996 இன் ரூ.9.3 பில்லியனுக்கு எதிராக ரூ.9.8 பில்லிய னாக விளங்கின. இது முன்னைய ஆண்டில் பெறப்பட்ட உதவு தொகை மட்டத்தி னைவிட5 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது.

தொடக்கத்திலிருந்து ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தினால் ஊழியர் சேமநிதிய உதவு தொகைகள் கொழும்பில் மத்திய அமைவிட மொன்றில் சேகரிக்கப்பட்டன. 1997 ஏப்பிறலிரு ந்து இரு அரச வங்கிகளில் அதாவது இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளில் ஊழியர் சேம நிதியக் கணக்குகள் திறக்கப்பட்டு உறுப்பினர்களிட மிருந்து உதவு தொகைகள் சேகரிக்கப்பட்டன. இந்த ஒழுங்குகள் தொழில் தருநர்கள் ஊழியர் சேமலாப நிதித் திணைக்களத்திற்கு நேரடியாகப் பணத்தினை அனுப்பும் முறையை நீக்கியதுடன் தங்களது விருப்பப்படி வங்கிக் கிளைகளின் மூலமாக உதவு தொகைகளை கொடுப்பனவு செய்ய வாய்ப்பளித்தது.

### உறுப்பினர் நிலுவைகள்

ஆய்விற்குரிய ஆண்டிற்கான வட்டி ஒதுக்கப்படும் முன்னர் 1997 திசெம்பர் 31இல் உறுப்பினரின் நிலுவைகள் ஏறத்தாழ ரூ.104 பில்லியனாக இருந்ததென மதிப்பிடப்பட்டதுடன் இது 1996இன் மட்டத்தைவிட ரூ.17 பில்லியன் அல்லது 20 சதவீத அதிகரிப்பைக்காட்டியது.

### முதலீடுகள்

ஆய்விற்குரிய ஆண்டில் நிதியத்தின் மிகைப்பணம் அரச பிணைகள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் என்பன வற்றில் முதலீடு செய்யப்பட்டது. 1997 திசெம்பர் 31இல் நிதியத்தில் உள்ள மொத்த முதலீடுகள் ரூ.137.6. பில்லியனாக இருந்ததோடு இது 1996இன் இறுதியிலிருந்த மட்டத்தைவிட ரூ.21.6 பில்லியன் கொண்ட அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

### முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாயும் செலுத்தப்பட்ட வரியும்

1989ஆம் ஆண்டில் ஊழியர் சேம நிதியத்திற்கு அளிக்கப்பட்டிருந்த வருமான வரி விலக்களிப்பு நீக்கப்பட்டதன் பின்பு 1997ஆம் ஆண்டின் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமான வரியின் தொகை ரூ.1.6 பில்லியன் ஆகும்.

1997இல் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் 1996இல் பெறப்பட்ட ரூ.15.8 பில்லிய னுக்கு எதிராக ரூ.18.2 பில்லியனாக இருந்தது.

### மீளளிப்புக்கள்

1997இல் உறுப்பினர்களின் மீளளிப்பு நன்மைகளின் வடிவில் செலுத்தப்பட்ட தொகை 1996இன் ரூ. 3.5 பில்லியனுக்கு எதிராக ரூ.4.6 பில்லியனாக விளங்கியது. இது முன்னைய

ஆண்டினைவிட 31.4 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. ஆய்விற்குரிய ஆண்டில் நன்மைகளின் மீளளிப்புக்கான உரிமை கோரல்கள் 1996இல் தீர்க்கப்பட்ட 56,536 உரிமை கோரல்களுக்கு எதிராக 61,196ஆகக் காணப்பட்டது. மீளளிப்புக்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்ந்தும் இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறையின் மூலமே மேற்கொள்ளப்பட்டன.

### ஊழியர் சேம நிதிய வீடமைப்புக் கடன் திட்டம்

ஆய்விற்குரிய காலத்தில் ஊழியர் சேம நிதியத் திணைக்களம் சம்பந்தப்பட்ட தொழில் அலுவலகங்களுக்கு நிலுவைகளை உறுதிப்படுத்தும் மொத்தம் 6,057 விண்ணப்பங்களை செயல்முறைப்படுத்தி அனுப்பி வைத்தது.

### நடாத்தப்பட்ட ஆய்வரங்குகள்

ஊழியர் சேம நிதியத்தினை நவீனமயப்படுத்துவதற்கான அடிப்படை வேலைகளுக்கு அத்திவாரமிடுவதற்காக 1997 மேயில் மென்கல அபிவிருத்தியாளர்களுக்கான கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது.

நிதியத்தின் செயற்றிறனை மேம்படுத்துவதற்காகவும் தொழிற்பாடுகளை நவீனமயப்படுத்துவதற்குமான விதந்துரைப்புக்களை வழங்குவதற்காக ஆய்வுக்குரிய ஆண்டில் தொழில் திணைக்களம் மற்றும் மத்திய வங்கியின் அலுவலர்களை உள்ளடக்கிய குழுவொன்று கௌரவ அமைச்சரினால் நிறுவப்பட்டது. இவ்வாண்டில் பலமுறை கூடிய இந்தக்குழு இந்தக் குறிக்கோள்களை எய்துவதற்கான முன்மொழிவுகள் சிலவற்றைக் கலந்துரையாடின. இறுதி அறிக்கை வரைவு வடிவில் உள்ளது.

## செலாவணிக் கட்டுப்பாடு

மேலும் தளர்த்தப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணய கடன் வழங்கல் திட்டத்தினைவிட 1997இல் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கொள்கையில் பாரிய மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை. ஆய்விற்குரிய காலப்பகுதியில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் மூலதனக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களுக்கான ஒப்புதல்களை வழங்குதல், நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணித்தல், கப்பற் சரக்கு அனுப்புவோர்க்கு உரிமங்களை வழங்குதல், பணம் மாற்றுவோர், சுற்றுலா விடுதிக்காரர்கள், ஆபரணக்கடை உரிமையாளர்கள் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும் பணிகளுக்கெதிராக வெளிநாட்டு நாணயங்களைப் பெற்றுக கொள்ள அனுமதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட உரிமங்களைப் புதுப்பித்தல், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது தொடர்பாக புலனாய்வுகளை நடாத்ததுதல், செலாவணி ஒழுங்குகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான அறிக்கைகளைத் தயாரித்தல் பல்வேறுபட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் பற்றி பொதுமக்கள், உள்ளூர் மற்றும் பன்னாட்டு அமைப்புக்களுக்கு தகவல்களையளித்தல் ஆகியன ஆய்வுக்குரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளில் சிலவாகும். பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதியுடன் தொடர்பான நடைமுறைகளைக் குறிப்பிடுகின்ற 1996 மாச்சு 21ஆம் நாளின் எண் 915/15 கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளின் படி, இலங்கைச் சுங்கத்தினால் கருத்துக் கேட்கப்பட்ட இறக்குமதி விண்ணப்பங்களை நிறைவு செய்வதிலும் ஈடுபட்டிருந்தது.

### மூலதனக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்கள்

### (அ) வெளிநாட்டு முதலீடுகள்

இலங்கைக் கம்பனிகள் வெளிநாடுகளில் முதலீடு செய்வதனை மாண்புமிகு நிதி திட்டமிடல் அமைச்சரின் ஒப்புதலுடன் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து அனுமதி வழங்கியது. இவ் விண்ணப்பங்கள் துபாயிலுள்ள வோர்டீகிரான்ட் ஹோட்டலில் ஆபரணக் கடையொன்றை நிறுவுதல், இந்தியாவில் கோயம்புத்தூரில் பிளாத்திக்கு நீர்ப்பாய்ச்சல் கட்டுப்பாட்டுக் கருவியினைத் தயாரிக்கின்ற பிரிவினை ஏற்படுத்துதல், தென்னிந்தியாவில் கலைநயம் மிக்க பெண்களின் உள்ளாடைகளைத் தயாரிப்பத

ற்கான பொறியினை நிறுவுதல் மற்றும் தில்மா என்ற வர்த்தகப் பெயரில் தேயிலை பதனிட்டு பொதியிடுவதற்கான உற்பத்திப் பொறித் தொகுதியொன்றை ஏற்படுத்துவதற்காக போலந்திலுள்ள கம்பனியொன்றினைக் கொள்வனவு செய்தல் என்பனவாகும்.

## (அ) ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கடன்கள்

1997இற்கான அரச வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட முன்மொழிவுகளின் விளைவாக 1997இல் ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கடன்கள் தொடர்பான கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட்டன. 1997 சனவரி 03ஆம் நாளன்று நடைமுறைக்குவந்த புதிய ஒழுங்கானது, ஏற்றுமதிக் கம்பனிகளின் தொழிற்படு மூலதனம் மற்றும் நிலையான மூலதனம் என்பனவற்றின் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்கு உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளிலும் அதேபோன்று வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளிலும் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியங்களிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியிலான கடன்களை, காலவரையறை தொடர்பான கட்டுப்பாடுகள் எதுவுமின்றி வழங்கியது. கடன்களை மீளத் தீர்ப்பனவு செய்வதற்கு ரூபா நிதியங்களை மாற்றுவது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. முன்னர் வெளிநாட்டு நாணயக்கடன்கள் ஏற்றுமதிக் கட்டளைகளை நிறைவேற்றத் தேவைப்படும் வெபளிநாட்டு உள்ளீடுகளுக்கு நிதியிடும் நோக்கத்திற்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

## (இ) வெளிநாட்டுக் கடன்கள்

1997இல் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான பல விண்ணப்பங்களுக்கு தனிச்சிறப்பு அடிப்படையில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டன.

## (ஈ) திணைக்களத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஏனைய மூலதன கணக்கு / கொடுக்கல் வாங்கல்கள் / வாணிபங்கள்

(அ) 1992 யூன் 29ஆம் நாளின் அரச வர்த்தமானி அறிவித்தல் எண் 721/4இன் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக பங்குக் கொடுக்கல் வாங்கல்கள்

(ஆ) பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கினூடாக வழிப்படுத்தப்படாத நிதிகளுக்கு எதிராக வதிவற்றோருக்குப் பங்குகளை வழங்குதல்.

(இ) வெளிநாட்டுச் செலாவணி சம்பந்தப்படாத அடிப்படையில் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பொறிகளின் பெறுமதிக்கு எதிராக வதிவற்றோருக்கு பங்குகளை வழங்கல்.

(ஈ) வதிவுடைய கம்பனிகளினால் வெளிநாட்டவர்களுக்கு முறிகளை வழங்குதல்.

(உ) வெளிநாட்டு ஒப்பந்தக் காரர்களினால் செய்யப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பான பணவனுப்பல்கள்.

(ஊ) வதிவற்றோரின் பங்கு கொள்வனவு தொடர்பான புதிய வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளின் விற்பனைப் பெறுகைகளின் பணவனுப்பல்கள்.

(எ) அரச நிறுவனங்களின் செயற்றிட்டக் கடன்களினது மீள் கொடுப்பனவு.

(ஏ) வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் கருவிகள் தொடர்பான நடவடிக்கைகள்.

(ஐ) வெளிநாட்டுக் கட்டுப்பாட்டிலுள்ள கம்பனிகளுக்கு இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்து கடன்களையும் மேலதிகப் பற்றுக்களையும் வழங்குதல்.

(ஒ) சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகள், சிறப்பு ரூபாக் கணக்குகள், வதிவுடைய அதிதிகள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதிவுடைய அதிதிகள் ரூபா நடைமுறைக் கணக்குகள் என்பனவற்றைத் திறத்தல்.

(ஓ) வதிவற்றோரின் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்.

(ஔ) செலாவணிக் கட்டுப்பாடு ஏற்பாடுகளிலிருந்து முழுமையாக விலக்குப் பெற்றுள்ள முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கு வெளிநாட்டு நாணயத்தில்

குறித்துரைக்கப்பட்ட குத்ததைகளை வழங்குதல்.

(க) பன்னாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கான வெளிநாட்டு வங்கி உத்தரவாதங்கள், செயலாற்ற முறிகள் மற்றும் முற்பண முறிகள்.

### (உ) குடியகல்விற்கான மூலதன மாற்றல்கள்

மற்றைய நாடுகளில் குடியேறுவதற்கான அனுமதியை/நிரந்தர வதிவிட அந்தஸ்தைப் பெற்ற இலங்கையர்களிடமிருந்து மூலதன நிதிகளை மாற்றல் செய்வதற்காகப் பெறப்பட்ட பல விண்ணப்பங்களுக்கு 1997இல் திணைக்களம் ஒப்புதலளித்தது. அத்துடன், மரணமடைந்த ஒருவருக்குச் சொந்தமான சொத்துக்களை குடிபெயர்ந்தோர் தீர்ப்பனவு செய்வதற்கும், குடிபெயர்ந்தோர் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கும் தடுத்துவைத்தல் நிதியிலிருந்து பணங்களை அனுப்புவதற்கும் அனுமதிக்கப்பட்டது.

### (ஊ) நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணித்தல்

வர்த்தக வங்கிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்களின் அடிப்படையில் நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்களைத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. ஏறத்தாழ 100 முதன்மைப் பொறுப்பாளர்களின் சார்பில் கப்பற்சரக்கு அனுப்புவோர் ஆகியோரினால் பேணப்படும் ரூபா நடைமுறைக் கணக்குகளுக்கான வரவுகளையும் பற்றுக்களையும் சரக்குப் பட்டடியல் பற்றுக் குறிப்புக்கள், உட்பணவனுப்பல்களுக்கான பற்றுச் சீட்டுக்கள் போன்றவற்றைப் பரீட்சிப்புச் செய்வதன்மூலம் கண்காணித்தது. மின்னியல் பொறிகளைப் பயன்படுத்துவதன்மூலம் திணைக்களத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### (எ) புலனாய்வுகள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை பல உள்நாட்டு, வெளிநாட்டுக் கம்பனிகளும் தனிப்பட்டவர்களும் மீறியமை தொடர்பாக திணைக்களம் பல புலனாய்வுகளை நடாத்தியுள்ளது. இப் புலனாய்வுகள் முக்கியமாக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒப்புதலில்லாமல் பங்குகளை மாற்றல், விற்றல், கொள்வனவுசெய்தல், வெளிநாடுகளில் முதலீடு, வெளிநாட்டுச் செலாவணி மாற்றல்களை மேற்கொள்ளல் என்பனவற்றுடன் தொடர்புடையனவாக இருந்தன.

## பொதுப்படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113 ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க இலங்கை அரசின் படுகடன்களைத் திரட்டல், முகாமைப்படுத்தல், உள்நாட்டுப் படுகடன் பணிகள் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் பணிகள் என்பன இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டன. இந் நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் கையாளப்பட்டன. இப் பொறுப்புக்களை நிறைவேற்றும் விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களம் ரூபாப்பிணைகள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், மற்றும் திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் ஆகிய உள்நாட்டுப்படுகடன் கருவிகளை வெளியிட்டது.

பொதுப்படுகடன் திணைக்களம் வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றின் சார்பில் வழங்கப்பட்ட தொகுதிக் கடன்கள் என்பனவற்றின் பணிக்கொடுப்பன வினையும் கையாண்டது.

### அபிவிருத்தி நடவடிக்கைகள்

உள்நாட்டுப்படுகடன் பிணையங்கள் சந்தையை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பொதுப்படுகடன் திணைக்களம் பல முயற்சிகளை மேற்கொண்டது. அத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளிலொன்றாக முதனிலை வணிகர்கள் முறையை வலுவாக்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காணப்பட்டன. படுகடன் பிணையங்கள் சந்தையில் நடைமுறை நிகழ்வுகள் தொடர்பாக மத்திய

வங்கிக்கும் முதனிலை வணிகர்களுக்குமிடையே தொடர்ச்சியான தொடர்புகளைப் பேணும் பொருட்டு பொதுப்படுகடன் திணைக்களம் முதனிலை வணிகர்களுடன் கிரமமான கூட்டங்களை ஒழுங்கு செய்தது. இக் கூட்டங்களில் நடைமுறை வட்டி வீதங்கள் தொடர்பான விடயங்களின் கலந்துரையாடல் சாத்தியப்பட்டதுடன் இவ்விடயங்கள் பற்றிய முதனிலை வணிகர்களின் கருத்துக்களையும் பெறமுடிந்தது.

படுகடன் கருவிகளில் குறிப்பாக, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் முதனிலை வணிகர்களின் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக தகவல்கள் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பெறப்பட்டு கிரமமாக பகுப்பாய்வு செய்யப்பட்டன. றொயிட்டர், இன்டர்நெட் போன்ற ஊடகங்களூடாகச் சேகரிக்கப்பட்ட தகவல்களை வெளியிடுவதற்கும் பொதுப்படுகடன் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. முதனிலை வணிகர்கள் அமைப்புப் பற்றிய பொதுமக்களின் புரிந்துணர்வை மேம்படுத்துவதற்கான தகவல்கள், பத்திரிகை வெளியீடுகளின் வடிவில் செய்தித் தாள்கள், றொயிட்டர் மற்றும் லங்கா ஒன்லைன் இன்டர்நெட் கம்பியூட்டர் நெட்வேர்க் என்பனவற்றினூடாக சந்தைக்கு கிரமமாக வெளியிடப்பட்டன. முதனிலை வணிகர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி தரவுத்தளமொன்று நிறுவப்பட்டது. இத் தரவுகள் தனிப்பட்ட முதனிலை வணிகர்கள் அதேபோன்று மொத்தச் சந்தை என்பன மீதான செயலாற்றக் குறிகாட்டிகளைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. வாராந்த அடிப்படையில் நடத்தப்பட்ட முதனிலை வணிகர்களுக்கான ஒன்றுக்கொன்றாக நடத்தப்பட்ட கூட்டத்தில் சுருக்க வடிவிலமைந்த தகவல்கள் வெளியிடப்பட்டமையானது வணிகர்கள் மொத்தச் சந்தையைப் பொறுத்தவரையில் தமது நிலை பற்றி மதிப்பீடு செய்வதற்கு இயலச் செய்தது. தரவுத்தளம்முதனிலை வணிகர்கள் அமைப்பின் வருடாந்த ஆய்வினைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.

அரசபடுகடன் பிணையங்களில் முதனிலை வணிகர்களின் வியாபாரம் தொடர்பான பொதுவான ஈடுபாடுகள் பற்றிய விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு அச் சமூகத்தினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பொன்றினை ஏற்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி ஊக்குவித்தது. இம் முயற்சிகளின் விளைவாக, 1997 யூனில் முதனிலை வணிகர் அமைப்பு நிறுவப்பட்டது. முதனிலை வணிகர் முறையுடன் தொடர்பான வேறுபட்ட விடயங்களை ஆராய்வதற்காக முதனிலை வணிகர் அமைப்பில் பல துணைக் குழுக்கள் உருவாக்கப்பட்டன.

பொதுப்படுகடன் திணைக்களம் திறைசேரி முறி நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்காக நடைமுறைகளையும், ஒழுங்கு விதிகளையும் வடிவமைத்ததுடன் திறைசேரி முறிகளின் ஏலமிடல், வழங்கல் பணியாற்றல் என்பனவற்றிற்கு வசதியளிக்கும் பொருட்டு திணைக்களத்திலேயே தேவையான கணனி மென்கலவகையை அபிவிருத்தி செய்துள்ளது. இவ்வாறு உருவாக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் "1997 இன் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்களின் (திறைசேரி முறிகள்) ஒழுங்கு விதிகள் எண் 1 " என்ற பெயரில் 1997 பெப்புருவரி 20 ஆம் நாளன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. இவ்வொழுங்கு விதிகளினது நியதிகளின்படி, திறைசேரி உண்டியல்கள் மற்றும் மத்திய வங்கிப் பிணையங்கள் என்பனவற்றிற்கான தற்போதுள்ள முதனிலை வணிகர்கள் திறைசேரி முறிகளுக்கான முதனிலை வணிகர் களாகவும் நியமிக்கப்பட்டனர். இவ்வொழுங்குகள் முற்றுப்பெறச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொதுப்படுகடன் திணைக்களம் 1997 மாச்சில் திறைசேரி முறிகளை வழங்கத் தொடங்கியதுடன், 1997 மாச்சு 2 ஆம் திகதியை செல்லுபடியாகும் நாளாகக் கொண்ட திறைசேரி முறிகளின் முதலாவது வழங்கலுக்காக, 1997 பெப்புருவரி 27ஆம் நாளன்று முதலாவது ஏலம் விடப்பட்டது. இவ்வாண்டில் பொதுப்படுகடன் திணைக்களமும் மூலாந்தர வழங்கலை மேம்படுத்துவதற்காக வகைமுறைகளை அபிவிருத்தி செய்வதிலும் இரண்டாந்தரச் சந்தையில் இக் கருவிகளை வர்த்தகப் படுத்துவதிலும் ஈடுபட்டிருந்தது. பொதுப்படுகடன் திணைக்களம் திறைசேரி முறிகள் தொடர்பாக நிறுவன முதலீட்டாளர் களுக்காக 1997 ஏப்பிறல் 3ஆம் நாளும் 1997 யூலை 26ஆம் நாளும் இரு செயலமர்வுகளை நடத்தியது.

பொதுப்படுகடன் திணைக்களம் ரூ.16,000 மில்லியன் தொகை கொண்ட 7 ரூபாப் பிணையங்களை உரிய காலத்திற்கு முன்னர் தீர்ப்பனவு

செய்வதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டமைக்கு 1999 செய்யப்படவேண்டிய கட்டாய மீள் கொடுப்பனவும் 1998 இன் விருப்பத்திற்குரிய மீள் கொடுப்பனவுகளுமே காரணங்களாக இருந்தன. இவை, 15 சதவீத வட்டி வீதத்தினைக் கொண்டிருந்த ரூ.6,000 மில்லியன் கொண்ட 3 ரூபாப் பிணைகளையும் 16 சதவீத வட்டி வீதத்தினைக் கொண்டிருந்த ரூ.10,000 மில்லியன் கொண்ட 4 ரூபாப் பிணைகளையும் உள்ளடக்கியுள்ளன. இவ் ரூபாப்பிணைகளின் உரிய காலத்திற்கு முன்னரான தீர்ப்பனவு தொடர்பான வர்தகமானிக் கட்டளை 1997 செத்தெம்பர் 23ஆம் நாளன்று வெளியிடப்பட்டது.

படுகடன் பிணைகள் சந்தையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு இவ்வாண்டில் பொதுப் படுகடன் திணைக்களம் இரு வெளிநாட்டு ஆலோசனையாளர்களிடமிருந்து தொழில் நுட்ப மதியுரைகளைப் பெற்றது. மூலதனச் சந்தை அபிவிருத்தி தொடர்பாக இவ்வாலோசனையாளர்களுடன் கலந்துரையாட முதனிலை வணிகர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமையின் காரணமாக அவர்களின் கருத்துக்களையும் அவர்களால் தெரிவிக்க இயலுமாக இருந்தது.

1996 சனவரியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் அழிந்துபோன பொதுப்படுகடன் திணைக்களத்தின் கணனி மென்கலம் மற்றும் தரவுத்தளத்தினை மீள நிர்மாணிக்கும் வேலைகள் 1997இலும் தொடர்ந்து நடைபெற்றது. பொதுப் படுகடன் திணைக்களம் குண்டு வெடிப்பில் அழிந்துபோன திறைசேரி உண்டியல்களுக்கான நகல்களை வழங்குவதனை நிறைவு செய்துள்ளதுடன் அனைத்து நகல் திறைசேரி உண்டியல்களினதும் முதிர்ச்சிப் பெறுகைகள் 1997 இன் நடுப்பகுதியில் முழுமையாச் செலுத்தப்பட்டன.

வெளிநாட்டு படுகடனின் பதிவிடல் மற்றும் முகாமைத்துவத்திற்காக பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தற்பொழுது பயன்படுத்தப் பட்டுவரும் பொதுநலவாய செயலகப்படுகடன் பதிவிடல் மற்றும் முகாமைத்துவ முறைத் தரவுத்தளம் 1997 யூலையில் விளக்கம் 6.1 இலிருந்து விளக்கம் 7.1 இற்கு தரமுயர்த்தப் பட்டது. புதிய விளக்கத்தின் முக்கிய அனுகூலம் யதெனில் இது வின்டோ/டொஸ் இலுள்ள விரித்த தாளிற்கு தரவுத்தளம் இணைக்கப்பட்டுள்ளமையேயாகும்.

## தொழிற்பாட்டு நடவடிக்கைகள்

1997 இறுதியில் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட மொத்த வெளிநின்ற பொதுப்படுகடன் ரூ.740,412 மில்லியனாக விளங்கியது. 1996ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ரூ.49,708 மில்லியன் அல்லது 7.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது. 1997 இறுதியில் மொத்த வெளிநின்ற பொதுப்படுகடன் ரூ. 364,561 மில்லியன் (49.2 சதவீதம்) கொண்ட உள்நாட்டுப் படுகடனையும் ரூ.375,851 மில்லியன் கொண்ட (50.8 சதவீதம்) வெளிநாட்டுப் படுகடனையும் உள்ளடக்கியிருந்தது. பொதுப்படுகடனின் உள்ளடக்கப்படுகடனின் கூறு ரூ. 33,371 மில்லியனால் அல்லது 10.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் வெளிநாட்டுப்படுகடன் ரூ.16,337 மில்லியனினால் அல்லது 4.5 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அட்டவணை II.17 பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட பொதுப் படுகடனின் உள்ளமைப்பினைக் காட்டுகின்றது.

## திறைசேரி உண்டியல்கள்

### முதலாந்தரச் சந்தை

1997 இறுதியில் வெளிநின்ற மொத்தத் திறைசேரி உண்டியல்கள் 1996 இறுதியின்

**அட்டவணை II.17**

**மொத்தப் பொதுப்படுகடன் உள்ளடக்கம்**

| வகை | 1996 முடிவில் உள்ளவாறு ரூ. ப. இ. | % | 1997 முடிவில் உள்ளவாறு(அ) ரூ. ப. இ. | % |
|---|---|---|---|---|
| உள்நாட்டுப் படுகடன் | 331,190 | 47.9 | 364,561 | 49.2 |
| திறைசேரி உண்டியல்கள் | 124,996 | | 114,996 | |
| ரூபாப் பிணைகள் | 205,975 | | 239,475 | |
| திறைசேரி முறிகள் | -- | | 10,000 | |
| திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் | 212 | | 83 | |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | 7 | | 7 | |
| வெளிநாட்டுப் படுகடன் | 359,514 | 52.1 | 375,851• | 50.8 |
| மொத்தம் | 690,704 | 100.0 | 740,412 | 100.0 |

அ. தற்காலிகமானவை. மூலம் : இலங்கை மத்திய வங்கி

ரூ.124,996 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.114,996 மில்லியனாக விளங்கின. இக் குறைப்பிற்கு 1997 ஓகத்தில் மத்திய வங்கியின் வசமிருந்த திறைசேரி உண்டியல் இருப்பில் ரூ.10,000 மில்லியன் நீக்கி விடப்பட்டமையே காரணமாகும். இவ்வாண்டில் திறைசேரி உண்டியலின் புதிய வழங்கலெதுவும் இடம்பெறவில்லை. 1997இல் திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்ட உச்ச எல்லை ரூ.125,000 மில்லியனில் மாற்றமின்றிக் காணப் பட்டது.

1997 ஓகத்தில் ரூ. 10,000 மில்லியன் திறைசேரி உண்டியல்கள் நீக்கிவிடப்பட்டமை யானது இலங்கை ரெலி கொம்மின் பங்குடைமை களில் 35 சதவீதத்தினை உரிமையகற்றல் செய்ததன் மூலம் அரசினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 225 மில்லியன் கொண்ட தனியார் மயப்படுத்தல் பெறுகைகளின் மூலம் சாத்தியமாயிற்று. நீக்கி விடப்பட்ட ரூ.10,000 மில்லியன் திறைசேரி 1997இல் முதிர்ச்சியடைய விருந்த ரூ.3,150 மில்லியன் திறைசேரி உண்டியல்களையும் 1998இல் முதிர்ச்சியடைய வேண்டிய ரூ.6,850 மில்லியன் திறைசேரி உண்டியல்களையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வாறு நீக்கிவிடப் பட்டதன் மூலமான நேரடி மொத்த வட்டிச் சேமிப்புக்கள் ரூ.516 மில்லியனாக விளங்கியது.

பொதுப்படுகடன், வங்கித் தொழில் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் என்பனவற்றினால் பணியாற்றப்பட்ட நாணயத் தொழிற்பாட்டுப் பிரிவு வாரந்தோறும் முதலாந்தர ஏலத்திற்கு விடப்படவேண்டிய திறைசேரி உண்டியல்களின் தொகை அவற்றின் முதிர்ச்சிப் பகிர்ந்தளிப்பு மற்றும் மத்திய வங்கிக்கு முன் ஒதுக்குகளாக வழங்கப்பட வேண்டிய திறைசேரி உண்டியல்கள் என்பனவற்றினைத் தொடர்ந்தும் தீர்மானித்தது. முதலாந்தர ஏலத்தில் இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் முதிர்ச்சி அமைப்பையும் நாணயத் தொழிற்பாட்டுப் பிரிவு தீர்மானித்தது.

1996இல் முதனிலை வணிகர்களின் செயலாற்றம் தொடர்பாக செய்யப்பட்ட மீளாய்வுகளின் அடிப்படையில், நாணயச்சபை ஐந்து முதனிலை வணிகர்களின் முதனிலை வணிகர்கள் என்ற அந்தஸ்தை புறக்கீடு செய்வதெனத் தீர்மானித்ததுடன் பொதுப் படுகடன் திணைக்களம் செய்த விதந்துரைப்புக்களின் பேரில் இரு புதிய முதனிலை வணிகர்களின் நியமனத்திற்கு ஒப்புதலளித்தது. இதன் விளைவாக முதனிலை வணிகர்களின் மொத்த எண்ணிக்கை 18 ஆக விளங்கியதுடன் இதில் 11 வர்த்தக வங்கிகளாகவும், 7 வர்த்தக வங்கியல்லா தனவாகவும் விளங்கின. நாணயம் மற்றும் படுகடன் சந்தைகளை மதிப்பீடு செய்யும் நோக்குடன் பொதுப்படுகடன் திணைக்களம் முதனிலை வணிகர்களுடன் ஒவ்வொருவராக நடத்தும் வாராந்தக் கூட்டத்தினைத் தொடர்ந்தும் நடத்திய வேளையில் பொதுப்படுகடன் நடவடிக்கைகளுடன் தொடர்பான விடயங்களையும் கலந்துரையாடியது. அத்துடன் அனைத்து முதனிலை வணிகர்களுடனுமான கிரமமான வாராந்தக் கூட்டங்கள் 1997 யூலையிலிருந்து தொடங்கின.

வாராந்த முதலாந்தர ஏலங்களில் பங்கு கொள்ளும் வாய்ப்பு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட முதனிலை வணிகர்களுக்கும் நிறுவன ரீதியான முதலீட்டாளர்களுக்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 1997 இல் முதலாந்தர ஏலங்களில் திறைசேரி உண்டியல்களின் மொத்த விற்பனைகள் ரூ.210,887 மில்லியனாக விளங்கின. முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் மிகப்பெரும் தனியொரு வகை வாங்குனர்களாக வர்த்தக வங்கி முதனிலை வணிகர்கள் விளங்கியதுடன் ரூ.123,313 மில்லியனை அல்லது மொத்த விற்பனையில் 58.4 சதவீதத்தினைக் கொள்வனவு செய்தன. இரண்டாவது பெரும்பான்மையாக, வங்கியல்லா முதனிலை வணிகர்கள் விளங்கி மொத்தத்தில் 21.3 சதவீதத்தினைக் கொள்வனவு செய்தனர். 1997 மே வரை தேசிய கூட்டுறவுச்சபை, மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற பல நிறுவனங்கள் முதலாந்தர ஏலங்களில் நேரடியாக விலைகளைக் கோர அனுமதிக்கப்பட்டன. இந் நிறுவன ரீதியான முதலீட்டாளர்களும் இலங்கை மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படும் நிதியங்களும் சேர்ந்து 1997 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக் குறிப்பீடுகளில் 8.3 சதவீதத்திற்குப் பொறுப்பாக இருந்தன. அட்டவணை II.18, 1997இற்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைக் குறிப்பீடுகளின் மூல அடிப்படையிலான பகிர்ந்தளிப்புக்களைக் காட்டுகின்றது.

## அட்டவணை II.18

## திறைசேரி உண்டியல்களின் ஏலங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைக் கோரல்கள் - 1997

(ரூ. மில்லியன்)

| மூலம் | முதிர்ச்சிக்காலம் (மாதங்கள்) 3 | 6 | 12 | ஏனைய | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|
| 1. உள்நாட்டு வர்த்தக வங்கிகள் | 54,942 | 21,489 | 32,437 | 0 | 108,868 | 51.6 |
| 1.1 அரச வங்கிகள் | 41,572 | 16,790 | 23,912 | 0 | 82,274 | 39.0 |
| 1.2 தனியார் வங்கிகள் | 13,370 | 4,699 | 8,525 | 0 | 26,594 | 12.6 |
| 2. வெளிநாட்டு வங்கிகள் | 7,796 | 3,656 | 2,993 | 0 | 14,445 | 6.8 |
| 3. வங்கியல்லாதவை (அ) | 17,697 | 11,836 | 15,197 | 0 | 44,730 | 21.3 |
| 4. நேரடி விலைக் கோரல்கள் (ஆ) | 595 | 1,058 | 417 | 0 | 2,070 | 1.0 |
| 5. நிறுவனரீதியான முதலீட்டாளர்கள் (இ) | 9,494 | 3,692 | 2,290 | 0 | 15,476 | 7.3 |
| 6. மத்திய வங்கிக் கொள்வனவுகள் | 0 | 0 | 0 | 25,298 | 25,298 | 12.0 |
| மொத்தம் | 90,524 | 41,731 | 53,334 | 25,298 | 210,887 | 100.0 |

(அ) தே. சே. வங்கியை உள்ளடக்குகிறது.

(ஆ) தேசிய கூட்டுறவுக் குழுவும், ஊழியர் நம்பிக்கை நிதியமும்

(இ) மத்திய வங்கியினால் முகாமை செய்யப்பட்ட நிதியம்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1997 இல் பெறப்பட்ட ரூ.318,258 மில்லியன் தொகை கொண்ட மொத்த விலைக் குறிப்பீடுகளில் 67.8 சதவீதம் வர்த்தகவங்கி முதனிலை வணிகர்களிடமிருந்தே பெறப்பட்டது. எஞ்சிய 32.2 சதவீதமும் வங்கியல்லா முதனிலை வணிகர்களிடமிருந்தும் (25.9 சதவீதம்.) ஏனையவர்களிடமிருந்தும் (6.3 சதவிதம்) பெறப்பட்டது.

1997 இறுதியில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களில் ரூ. 53,334 மில்லியன் (46 சதவீதம்) 12 மாத முதிர்ச்சியினைக் கொண்டனவாகவும் ரூ.20,111 மில்லியன் (18 சதவீதம்) 6 மாத முதிர்ச்சியைக் கொண்டனவாகவும் இருந்தன. மிகுதி 36 சதவீதம் அல்லது ரூ. 41,551 மில்லியன் 3 மாத முதிர்ச்சியையும் (26 சதவீதம்.) எஞ்சிய முதிர்ச்சியையும் (10 சதவீதம்) கொண்டிருந்தன. ஏனைய முதிர்ச்சிகள் இலங்கை மத்திய வங்கியின் கொள்வனவுகளின் விளைவாக உருவாகும் இருப்புக்களைப் பிரதிபலித்தன. 1997 இல் அனைத்து முதர்ச்சிகளுக்குமாக வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல் சான்றிதழ்களின் மொத்த எண்ணிக்கை 72,866 ஆகும்.

3 மாத, 6 மாத, 12 மாத திறைசேரி உண்டியல்களுக்கான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் முறையே 9.87 - 17.14 சதவீதத்திற்கும் 10.09 - 17.03 சதவீதத்திற்கும், 10.17 - 17.11 சதவீதத்திற்குமிடையில் தளம்பலுற்றன. இவ்வாண்டில் மிக உயர்ந்த வீதத்திற்கும் மிகத் தாழ்ந்த வீதத்திற்குமிடையில் பாரிய இடைவெளி காணப்பட்டமைக்கு ஆண்டின் ஆரம்பத்தில் விளைவு வீதங்களில் காணப்பட்ட மிக உயர்ந்த மடங்களிலிருந்து 1997 இன் இறுதிப்பகுதியில் மிகக் கூடுதலாக வீழ்ச்சியடைந்தைமையே காரணமாகும். முதிர்ச்சியின்படி ஆண்டு நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்களும் அவற்றின் பொதுவான சராசரிகளும் அட்டவணை II.19இல் தரப்பட்டுள்ளன. 1997இல் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பேரிலான மொத்த வட்டிக் கடப்பாடுகள் ரூ. 12,661 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் அத் தொகையுடன் ஒப்பிடுகையில் 31.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது.

## அட்டவணை II.19

## வருடாந்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்

| ஆண்டு | முதிர்ச்சிக் காலம் (மாதங்கள்) 3 | 6 | 12 | பொதுவான சராசரி |
|---|---|---|---|---|
| 1993 | 19.18 | 19.09 | 20.53 | 20.15 |
| 1994 | 14.32 | 14.75 | 15.90 | 14.89 |
| 1995 | 16.31 | 17.43 | 17.63 | 16.84 |
| 1996 | 16.04 | 16.46 | 17.17 | 16.46 |
| 1997 | 11.03 | 11.95 | 12.29 | 11.60 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1996இல் 3 மாத முதிர்ச்சிக்காகப் பெறப்பட்ட விலைக் குறிப்பீடுகளின் ஆகக் குறைந்த மற்றும் ஆகக் கூடிய நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள் மற்றும் ஆகக் கூடிய நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள் 9.67 சதவீதமா கவும் மற்றும் 17.25 சதவீதமாகவும் 6 மாத முதிர்ச்சிக்கானவை 10.04 சதவீதம் மற்றும் 17.17 சதவீதமாகவும் 12 மாத முதிர்ச்சிக்கானவை 10.00 சதவீதமாகவும் 17.18 சதவிதமாகவும் காணப்பட்டன.

## இரண்டாந்தரச் சந்தை

1997இல் திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாந்தரச் சந்தை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது. முதனிலை வணிகர்கள் மற்றும் அவர்களது வாடிக்கையாளர்களிடையே உடனடி மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன. 1997 முதனிலை வணிகர்களின் உடனடி விற்பனைகள் மற்றும் கொள்வனவு களின் மொத்த அளவு முறையே ரூ. 95 பில்லியனாகவும் ரூ.28 பில்லியனாகவும் காணப்பட்டன. மீள் கொள்வனவுகள் மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவுகள் தொடர்பான முதனிலை வணிகர்களின் வர்த்தகப்படுத்தப்பட்ட அளவு முறையே ரூ.582 பில்லியனாகவும் ரூ. 474 பில்லியனாகவும் விளங்கின. 1997 இறுதியில் முதனிலை வணிகர்களின் வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் உடனடிக் கொள்வனவின் மொத்த இருப்புக்கள் ரூ.44 பில்லியன்களாக விளங்கின.

## ரூபாக் கடன்கள்

1997இல் ரூ.48,500 மில்லியன் பெறுமதி கொண்ட மொத்தமாக பதினேழு ரூபாக் கடன்கள் திரட்டப்பட்டன. 1997இல் ஊழியர் சேம நிதியமும் தேசிய சேமிப்பு வங்கியும் ரூபாக்கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கான முக்கிய உதவுநர்களாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் இவ்விரு நிறுவனங்களும் சேர்ந்து ரூ.42,758.8 மில்லியனை உதவியதுடன் 1997இன் மொத்த உதவு தொகையில் 88.2 சதவீதத்திற்கு வகை கூறின.

1997இல் வழங்கப்பட்ட ரூபாக் கடன்கள் 2 தொடக்கம் 6/8 ஆண்டுகள் வரையிலான முதிர்ச்சிகளுடன் ஆண்டிற்கு 11.25 சதவீதத்திலிருந்து 14.50 சதவீதம் வரையான வட்டி வீதங்களைக் கொண்டிருந்தது. இவற்றில் ஏழு கடன்கள் 2 மற்றும் 3/4 ஆண்டு நிலையான முதிர்ச்சிகளில் திரட்டப்பட்ட வேளையில் ஏனைய பத்துக் கடன்களும் 4/8, 5/7, 6/7, 6/8 ஆண்டுகள் விருப்பத்திற்குரிய முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தன. ரூபாக் கடன்களின் திரட்டல் தொடர்பான தகவல்கள் அட்டவணை II.20இல் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II.20**

**ரூபாக் கடன்களை திரட்டல் - 1997**

(ரூ. ப. இ.)

| ஆண்டு வட்டி வீதம் | முதிர்ச்சி ஆண்டுகள் | கடன்களின் எண்ணிக்கை | திரட்டப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 14.50 | 3 | 2 | 10,000 |
| 13.50 | 3 | 1 | 5,000 |
| 13.00 | 4 | 1 | 3,000 |
| 14.00 | 2 | 1 | 3,000 |
| 13.10 | 2 | 1 | 2,500 |
| 12.50 | 4 | 1 | 2,000 |
| 12.25 | 6-7 | 4 | 11,000 |
| 12.00 | 6-7 | 1 | 3,000 |
| 11.75 | 6-7 | 1 | 3,000 |
| 11.75 | 6-8 | 1 | 1,000 |
| 11.80 | 4-8 | 1 | 2,500 |
| 11.50 | 4-8 | 1 | 1,000 |
| 11.25 | 5-7 | 1 | 1,500 |
| மொத்தம் | | 17 | 48,500 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1997இல் ரூ.15,000 மில்லியன் தொகை கொண்ட மொத்தமாக ஏழு ரூபாக் கடன்கள் மீளச் செலுத்தப்பட்டன. இதன்படி ரூபாக் கடன்களுக்கான தேறிய உதவு தொகைகள் ரூ.33,500 மில்லியனாக விளங்கியதன் விளைவாக ரூபாக் கடன்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்புக்கள் 1996 இறுதியின் ரூ.205,975 மில்லியனிலிருந்து 1997 இறுதியில் ரூ.239,475 மில்லியனுக்கு அதிகரித்தன. வெளிநின்ற ரூபாக்கடன்களின் முதிர்ச்சித் தோற்றம் அட்டவணை II.21இல் காட்டப்பட்டுள்ளது.

1997இல் ரூபாக் கடன்கள் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.300,206.6 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் மொத்த வட்டிக் கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் ரூ.6,819.5 மில்லியன் (அல்லது 29.4 சதவீதம்) கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

### அட்டவணை II.21

### ரூபாக் கடன்களின் முதிர்ச்சி அமைப்பு 1997 இறுதியில் உள்ளவாறு

| முதிர்ச்சி ஆண்டுகளில் | தொகை (ரூபா. மி) | சதவீதம் |
|---|---|---|
| 2 | 17,500 | 7.31 |
| 3 | 15,000 | 6.26 |
| 4 | 12,000 | 5.01 |
| 5 | 12,204 | 5.10 |
| 4 - 5 | 16,000 | 6.68 |
| 6 | 5,500 | 2.30 |
| 4 - 6 | 10,317 | 4.31 |
| 5 - 6 | 14,878 | 6.21 |
| 5 - 7 | 53,715 | 22.43 |
| 6 - 7 | 22,000 | 9.19 |
| 4 - 8 | 3,500 | 1.46 |
| 6 - 8 | 1,000 | 0.41 |
| 7 - 8 | 5,400 | 2.25 |
| 10 | 5,980 | 2.50 |
| 1 - 10 | 19,393 | 8.10 |
| 8 - 10 | 1,000 | 0.42 |
| 30 | 24,088 | 10.06 |
| மொத்தம் | 239,475 | 100.00 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## திறைசேரி முறிகள்

திறைசேரி முறிகள் வடிவிலமைந்த நடுத்தர, நீண்டகால நறுக்கினைக் கொண்ட புதிய அரசபடுகடன் கருவியின் வழங்கலானது இலங்கை அரசின் சார்பில் இலங்கை மத்திய வங்கியினால் 1997 மாச்சில் தொடங்கப்பட்டது. 1995ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் திறைசேரி முறிகள் இருவாரங்களுக்கொரு முறை நடத்தப்படும் ஏலங்களில் வழங்கப்பட்டன.

1997இல் ரூ. 10 பில்லியன் கொண்ட திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன. தொடக்கத்தில் இலங்கை மத்திய வங்கி திறைசேரி முறிகளை 2 ஆண்டு முதிர்ச்சியிலும் அதன் பின்னர் 3 ஆண்டு மற்றும் 4 ஆண்டு முதிர்ச்சியிலும் அறிமுகப்படுத்தியது. 1997இல் வழங்கப்பட்ட 18 வழங்கல்களில் 13 ஈராண்டு முதிர்ச்சியையும், 2 மூன்றாண்டு முதிர்ச்சியையும், 3 நான்காண்டு முதிர்ச்சியையும் கொண்டிருந்தன. வழங்கப்பட்ட ரூ. 10 பில்லியன் திறைசேரி முறிகளில் ரூ. 7,500 மில்லியன் ஈராண்டு முதிர்ச்சி தொடர்பானதாகவும் ரூ. 1,000 மில்லியன் 3 ஆண்டுகள் முதிர்ச்சி தொடர்பானதாகவும் ரூ.1,500 மில்லியன் நான்காண்டு முதிர்ச்சி தொடர்பானதாகவும் காணப்பட்டன. ஒவ்வொரு ஏலங்களும் நடத்தப்படுவதற்கு முன்னர் மத்திய வங்கியினால் கூப்பன் வீதங்கள் அறிவிக்கப்படுகின்றன. நாணயச் சந்தை அபிவிருத்திகள் வட்டிவீதங்களின் மீது அழுத்தங்களை ஏற்படுத்துவதனைக் கருத்திற் கொண்டு கூப்பன் வீதம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆண்டிற்கு 14 சதவீதத்திலிருந்து ஆண்டின் இறுதியில் ஆண்டிற்கு 11.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. 1997இல் நடத்தப்பட்ட அனைத்து ஏலங்களும் ஒன்று தவிர மேலதிகமாக உதவப்பட்டதுடன், விலைக் குறிப்பீடுகள் முகப்புப் பெறுமதியிலும் மிகைக் கட்டணத்திலும் காணப்பட்டன. இவ்வாண்டில் பெறப்பட்ட மொத்த விலைக் குறிப்பீடுகளில் ரூ.14,216 மில்லியன் விலைக் குறிப்பீடுகள் மிகைக்கட்டண வீதத்தில் பெறப்பட்டதுடன் ரூ.9,135 மில்லியன் கொண்ட விலைக் குறிப்பீடுகள் முகப்புப் பெறுமதியிலும் ரூ.4,898 மில்லியன் விலைக் குறிப்பீடுகள் கழிவிடல்களில் பெறப்பட்டன. நிறையேற்றப்பட்ட சராசரி விளைவுகளை முதிர்ச்சியில் பெறுவதற்கு அனுமதிக்கப் பட்டிருந்த நிறுவன ரீதியான முதலீட்டாளர் களிடமிருந்து பெற்ற விலைக் குறிப்பீடுகள் முதிர்ச்சியில் ரூ.4,790 மில்லியனாக விளங்கின. அட்டவணை II.22 திறைசேரி முறிகளின் முதலாந்தர வழங்கல்களுடன் தொடர்பான தகவல்களைக் காட்டுகின்றது.

ஈராண்டுக்கொருமுறை முறிகளை வைத்திருப்போர் நறுக்குகளை முதனிலை வணிகர்களூடாக பொதுப்படுகடன் திணைக்களத்துக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் வட்டிக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. 1997இல் திறைசேரி முறிகளின் பேரிலான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.326.9 மில்லியனாக விளங்கின. 1997இல் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் எண்ணிக்கை 2979ஆக இருந்ததுடன் இதில் 2592 ஈராண்டு முதிர்ச்சிகளையும் 93 மூன்றாண்டு முதிர்ச்சிகளையும் 294 நான்காண்டு முதிர்ச்சிகளையும் கொண்டிருந்தன. ஈராண்டுக்கான நறுக்கு கொடுப்பனவு

## அட்டவணை II.22

## திறைசேரி முறிகள் மீதான தெரிந்தெடுக்கப்பட்ட தகவல்கள் - 1997

| தொடர்கள் | | முதிர்ச்சி ஆண்டுகள் | பெறப்பட்ட விலைக் குறிப்பீடுகள் (ரூபா மில்லியன்) | ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக் குறிப்பீடுகள் (ரூ.மில்) | முதிர்ச்சியில் நி.ஆ.ச.வீதம் (ஆண்டிற்கு சதவீதம்) | நறுக்கு வீதம் (ஆண்டிற்கு சதவீதம்) |
|---|---|---|---|---|---|---|
| 14.00% | 1999 (அ) | 2 | 1,139 | 500 | 14.00 | 14.00 |
| 14.00% | 1999 (ஆ) | 2 | 1,325 | 500 | 14.00 | 14.00 |
| 13.75% | 1999 (அ) | 2 | 1,909 | 500 | 13.71 | 13.75 |
| 13.50% | 1999 (அ) | 2 | 1,468 | 500 | 13.44 | 13.50 |
| 13.00% | 1999 (அ) | 2 | 1,335 | 500 | 12.95 | 13.00 |
| 12.25% | 2001 (அ) | 4 | 755 | 500 | 12.25 | 12.25 |
| 12.75% | 1999 (அ) | 2 | 1,880 | 500 | 12.75 | 12.75 |
| 12.75% | 1999 (ஆ) | 2 | 785 | 500 | 12.75 | 12.75 |
| 12.75% | 1999 (இ) | 2 | 1,045 | 500 | 12.75 | 12.75 |
| 12.75% | 1999 (ஈ) | 2 | 1,225 | 500 | 12.78 | 12.75 |
| 12.75% | 1999 (உ) | 2 | 3,365 | 500 | 12.42 | 12.75 |
| 12.50% | 1999 (அ) | 2 | 2,910 | 500 | 11.87 | 12.50 |
| 12.00% | 1999 (அ) | 2 | 1,795 | 500 | 11.69 | 12.00 |
| 12.00% | 1999 (ஆ) | 2 | 2,238 | 500 | 11.56 | 12.00 |
| 12.00% | 2000 (அ) | 3 | 2,084 | 500 | 11.74 | 12.00 |
| 11.75% | 2001 (அ) | 3 | 3,475 | 500 | 11.10 | 11.75 |
| 11.50% | 2001 (அ) | 4 | 2,112 | 500 | 11.36 | 11.50 |
| 11.50% | 2001 (அ) | 4 | 2,194 | 500 | 11.39 | 11.50 |
| மொத்தம் | | | 33,039 | 10,000 | | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

க்காக பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பெறப்பட்ட திணைக்களத்தினால் பெறப்பட்ட நறுக்குகளின் எண்ணிக்கை 2,035 ஆக விளங்கியது.

1997இல் பொதுப்படுகடன் திறைசேரி முறிகளுக்கான இரண்டாந்தரச் சந்தையை நிறுவுவதற்கும் பல நடவடிக்கைகளை எடுத்தது திறைசேரி முறிகளின் வாங்கும் விற்கும் விலைகள் தொடர்பான கோரல்களை குறிப்பிடுவதற்கு முதனிலை வணிகர்கள் ஊக்குவிக்கப்பட்டதுடன் அத்தகைய விலைக் கோரல்களை பொதுமக்களின் தகவல்களுக்காக வெளியிடுவதற்கும் பொதுப்படுகடன் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டது. முதனிலை வணிகர்களால் செய்யப்பட்ட இரு- வழி விலைக் கோரல்களை பொதுப்படுகடன் திணைக்களம் சேகரித்துக் கொண்டதுடன், வெளியீட்டு நோக்கங்களுக்காக திறைசேரி முறிகளின் ஒவ்வொரு தொடர்களுக்குமான நாளாந்த அடிப்படையில் நிறையேற்றப்பட்ட சராசரி வீதங்கள் கணிக்கப்பட்டன.

இவ்வாண்டில், இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்கள் திறைசேரி முறிகளின் வர்த்தகத்தில முக்கியமாக உடனடிக் கொள்வனவு மற்றும் விற்பனைகளினூடா ஈடுபட்டிருந்ததுடன் மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் கணிசமான அளவு காணப்பட்டன. 1997 இறுதியில் முதனிலை வணிகர்களின் சொத்துப் பட்டியிலிருந்த மொத்தத் திறைசேரி முறிகள் ரூ.4,023.1 மில்லியனாக விளங்கின.

### திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள்

1997இல் திறைசேரி வைப்புச் `சான்றிதழ்களின் மொத்த விற்பனைகளின் முகப்புப் பெறுமதி ரூ.68.9 மில்லியனாக இருந்தது. திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் முழு விற்பனையையும் தேசிய சேமிப்பு வங்கியே மேற்கொண்டது. 1997இல் வெளியிடப்பட்ட திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் முதிர்ச்சிக் காலமும் ஆண்டு விளைவு வீதமும் முறையே 12 மாதங்களாகவும் 18.06 சதவீதமாகவும் காணப்பட்டன. 1997இல் திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் மொத்த

மீள் கொடுப்பனவுகள் ரூ.198.6 மில்லியனாக விளங்கியதுடன் இதில் ரூ.168.1 மில்லியன் மூலதன மீள் கொடுப்பனவுகள் தொடர்பானதாகவும் ரூ.30.5 மில்லியன் வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கியும் இருந்தன. 1997 இறுதியில் வெளிநின்ற திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் தொகை ரூ.82.6 மில்லியனாகும்.

## ஏனைய உள்நாட்டுப் படுகடன் கருவிகள்

அரசஈட்டு முதலீட்டு வங்கியின் 5-6 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்துடன் கூடிய மாறுபடும் வீதங்களைக் கொண்ட ரூ.500 மில்லியன் தொகைகொண்ட தொகுதிக்கடன்கள் பொது மக்களுக்கு உதவுதொகைக்காக 1997 திசெம்பரில் விடப்பட்டன. மாறுபடும் வீதம் ஒப்பிடத்தக்க முதிர்ச்சிகளைக் கொண்ட ரூபாக் கடன்களின் வட்டி வீதங்களுடன் ஒத்துச் செல்வதாக இருந்தது. எனினும் இவ்விடயம் மிகக் குறைவான ஆதரவையே பெற்றிருந்ததுடன் வெளிநாட்டுச் சந்தையில் ஏற்பட்ட அபிவிருத்தி கள் மற்றும் சந்தையில் இதையொத்த கருவிகள் தொடர்பாக முதலீட்டாளர்களின் பழக்கமின்மை என்பனவற்றின் விளைவாகத் தோன்றிய வட்டி வீதங்களில் நிச்சயமற்ற தன்மைகளைப் பிரதிபலித்தது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை என்பனவற்றின் தொகுதிக்கடன் தொடர்பாக வழங்கல்களோ மீள்கொடுப்பனவுகளோ காணப்படவில்லை. 1997இன் இறுதியில் அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றின் தொகுதிக் கடன்களின் வெளிநின்ற தொகை முன்னைய ஆண்டின் மட்டங்களான ரூ.500 மில்லியன், ரூ.141 மில்லியன் மற்றும் ரூ.83 மில்லியனில் மாற்றமின்றியிருந்தன.

இவ்வாண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் வரி ஒதுக்குச் சான்றிதழ்களில் ரூ.50,899 இனை மீளச் செலுத்தியது. 1997 இறுதியில் வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் வெளிநின்ற தொகை ரூ.7 மில்லியனாக இருந்தது.

## வெளிநாட்டுப் படுகடன்

1997 இறுதியில் மொத்த வெளிநின்ற அரச படுகடன் ரூ.375,851 மில்லியனாக விளங்கி 1996 இறுதியில் இருந்த வெளிநாட்டுப்படுகடனுடன் ஒப்பிடுகைளில் ரூ.16,337 மில்லியன் (4.5 சதவீதம்) கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 1997 இறுதியில் வெளிநின்ற மொத்தப்படுகடனில் இருட்டைக் கடன்கள் ரூ.188,264 மில்லியன்களாக (50 சதவீதம்) விளங்கிய வேளையில் பல்புடை மற்றும் வர்த்தகக் கடன்கள் முறையே ரூ.173,265 மில்லியனாகவும்(46 சதவீதம்) ரூ.14,322 மில்லியனாகவும் (4 சதவீதம்) விளங்கின. இருபுடை வகையில் முக்கிய கடன் வழங்குநராக யப்பான், அ.ஐ. நாடுகள், சேர்மனி என்பன விளங்கின. இம் மூலங்கள் மொத்த இருபுடைக் கடன்களில் ரூ.172,308 மில்லியனுக்கு அல்லது 92 சதவீதத்திற்கு வகை கூறின. பல்புடை வகை யில் மிகப் பெரும் வழங்குநரான பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு ரூ.92,085 மில்லியனுக்கு அல்லது மொத்த பல்புடைப் படுகடனில் 53 சதவீதத்திற்கு வகைகூறியது.

நிதியங்களின் பயன்பாட்டின்படி வகைப் படுத்துகையில் மொத்த அரச வெளிநாட்டுப் படுகடனில்செயற்றிட்ட, நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பண்டக் கடன்கள் முறையே ரூ.277,258 மில்லியனாகவும் (74 சதவீதம்) ரூ. 39,814 மில்லியனாகவும் (11 சதவீதம்) ரூ.27,489 மில்லியனாகவும் (7 சதவீதம்) விளங்கின. அட்டவணை II.23 அரச வெளிநாட்டுப் படுகடனின் உள்ளமைப்பினை கொடை வழங்குனர் மற்றும் நிதியின் பயன்பாடு என்பனவற்றின்படி காட்டுகின்றது.

### அட்டவணை II.23

### வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப்படுகடன் 1997 இல் இறுதி

| வகை | (ரூ. மி.) | % |
|---|---|---|
| 1. கொடை வகைப்படி | 375,851 | 100 |
| இருபுடை | 188,264 | 50 |
| பல்புடை | 173,265 | 46 |
| வர்த்தக | 14,322 | 4 |
| 2. நிதிகளின் பயன்பாட்டுப்படி | 375,851 | 100 |
| காசு | 4,708 | 1 |
| பண்டம் | 27,489 | 7 |
| உணவு | 26,421 | 7 |
| நிகழ்ச்சித்திட்டம் | 39,814 | 11 |
| செயற்றிட்டம் | 277,258 | 74 |
| தொழில்நுட்ப உதவி ஏனைய | 161 | ... |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1997இல் மொத்த முதல் தொகையின் வட்டியையும் சேர்த்த மீள் கொடுப்பனவு மற்றும் வெளிநாட்டு அரசபடுகடன் மீதான ஏனைய கட்டணங்கள் என்பன முறையே ரூ.10,027 மில்லியனாகவும், ரூ.6,732 மில்லியனாகவும் விளங்கின. 1997இல் மொத்தப் பகிர்ந்தளிப்பு ரூ.24,406 மில்லியனாக விளங்கின.

1997இல் 22 புதிய வெளிநாட்டுக் கடன்களுக்கு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஆண்டின் இறுதியில் தொழிற்பட்ட கடன்களின் எண்ணிக்கை 461இற்கு அதிகரித்தது. இக்கடன்கள் 3 தொடக்கம் 7 ஆண்டுகள் வரையான சலுகைக் காலத்தையும் 5இலிருந்து 42 ஆண்டுகள் வரையான மீள் கொடுப்பனவுக் காலத்தையும் கொண்டிருந்தன. வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 0 இலிருந்து 10.85 வரையான வீச்சில் காணப்பட்டன. கடன்களில் நன்கொடைக் கூறு 4 சதவீதத்திலிருந்து 91 சதவீதம்வரை வேறுபட்டது. அட்டவணை II.24 1997 இறுதியிலுள்ளவாறு வெளிநாட்டு அரச படுகடனின் சலுகைக்காலம், முதிர்ச்சிக்காலம், வட்டிவீதம், கொடை மூலம் என்பனவற்றின் வீச்சுக்களை கொடை வகைகளின்படி காட்டுகின்றது.

**அட்டவணை II..24**

**வெளிநாட்டுப் படுகடனின் சுருக்க புள்ளி விபரங்கள் - 1997 இறுதி**

| கொடை வகை | முதிர்ச்சிக் காலம் ஆண்டுகள் | | வட்டிவீதம்/ பணிக் கட்டணம் ஆண்டிற்கு | கொடை மூலம் % |
|---|---|---|---|---|
| | சலுகைக் காலம் | மீள்கொடுப் பனவுகாலம் | | |
| இருபுடை | 3 - 17 | 5 - 42 | 0.00 - 7.39 | 4 - 91 |
| பல்புடை | 5 - 11 | 6 - 40 | 0.75 - 8.25 | 5 - 87 |
| வர்த்தக | 1 - 10 | 0 - 20 | 5.95 - 10.85 | 3 - 56 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

### ஏனைய நடவடிக்கைகள்

அரசபடுகடனின் வழங்கல் மற்றும் கடன் தீர்ப்பனவு என்பனவற்றிற்குப் புறம்பாக, பொதுப் படுகடன் திணைக்களம் மத்திய வங்கிப் பிணையங்களின் வழங்கல்கள் மற்றும் தீர்ப்பனவுகளுடன் தொடர்பான நடவடிக்கைகளையும் கையாண்டது. 1997 செத்தெம்பர் 1ஆம் நாள் தொடங்கிய மத்திய வங்கிப் பிணையங்களின் வழங்கல் 1997 திசெம்பர் இறுதிவரை கிடைக்கத்தக்கனவாக இருந்தன. நாளாந்த அடிப்படையில் முதனிலை வணிகர்களாலும், வர்த்தக வங்கிகளாலும் உதவுதொகை வழங்கப்படுவதற்காக திறந்து வைக்கப்பட்டிருந்த தொகை முடப்படாதிருந்தது.

ஒன்று தவிர்ந்த இவ் வழங்கல்கள் 7 நாள் முதிர்ச்சியைக் கொண்டிருந்தன. ஒன்று 28 நாள் முதிர்ச்சியைக் கொண்டிருந்தது. மத்திய வங்கியின் பிணையங்கள் கொண்டிருந்த வட்டி வீதங்கள், மத்திய வங்கி ஒப்பிடத்தக்க முதிர்ச்சியைக் கொண்ட மீள் கொள்வனவிற்கு வழங்கிய வட்டி வீதங்களுக்குச் சமமானவையாக இருந்தன. மத்திய வங்கி பிணையங்களுக்குப் பொருந்தத்தக்க வட்டிவீதங்கள், இலங்கை மத்திய வங்கியின் மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தப்பட்ட ஆண்டு நாளாந்த வட்டிவீதங்களுக்கு சமமானதாக இருந்தன. இதன்படி 7 நாள் மத்திய வங்கிப் பிணையங்களுக்கும் பொருந்திய வட்டி வீதங்கள் ஆண்டொன்றிற்கு 8.35 - 10.91 சதவீத வீச்சிற்கிடையில் காணப்பட்ட வேளையில் 28 நாள் முதிர்ச்சி கொண்ட வழங்கல்களுக்கான வட்டி வீதம் ஆண்டிற்கு 9.21 சதவீதமாக இருந்தது. இவ்வாண்டில் மத்திய வங்கிப் பிணையங்களின் மொத்த வழங்கல்கள் ரூ.7,835 மில்லியனாக விளங்கியது.1997 திசெம்பர் இறுதியில் மத்திய வங்கிப் பிணையங்களின் வெளிநின்ற தொகை ரூ.10 மில்லியனாக இருந்தது. 1997 இல் மத்திய வங்கிப் பிணையங்களின் மீதான மொத்த வட்டிச்செலவு ரூ.13.4 மில்லியன்களாக விளங்கின.

## செயலகம்

1997இல் மத்திய வங்கியானது நிருவாக வரவு செலவுத் திட்டமொன்றினையும் அனைத்தையும் உள்ளடக்கிய கூட்டுத் திட்டத்தின் வரைச்சட்டத்தினுள் செலவினத்தின் மீது கடுமையான நிதிக் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப் படுத்தியது. கடந்த காலத்தில் செலவினக் கட்டுப்பாடு குறிப்பிட்டுக் காட்டுகின்ற வரவு செலவுத் திட்டங்கள் வாயிலாக நடைமுறைப் படுத்தப்பட்டது. செலவினக் கண்காணிப்பானது செயல் திறனையும் வரவு செலவுத்திட்ட செய்முறையின் செலவுப் பயனுறும் தன்மையையும் அதிகரிப்பதற்கென திட்டமிடப்பட்டது.

இந்நோக்கத்திற்கென ஒவ்வொரு திணைக்களத்தினதும் நடைமுறை மற்றும் மூலதனச்

செலவினம் பற்றிய விபரமான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் வங்கிக்கென நிருவாக மற்றும் மூலதனச் செலவின வரவு செலவுத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டது. வரவு செலவுத் திட்டத்திற்கு வெளியே செலவுக்கான எந்தத் தேவைப்பாடும் மீளாய்வு செய்யப்பட்டு குறைநிரப்பு ஒப்புதல் பெறப்பட்டது.

மொத்த நிருவாகச் செலவு 1997இல் ரூ.2,264 மில்லியனாகக் காணப்பட்டது. இதில் தாள் மற்றும் குத்தி நாணய வழங்கல் செலவு தவிர்ந்த செலவினம் ரூ.1,535 மில்லியனாக விளங்கியது. இத் தொகையில் சம்பளங்கள், படிகள், மேலதிக வேலைக் கொடுப்பனவு, வரிகள், நலன்புரிக் கொடுப்பனவுகள் ஆகிய ஆளணி மீதான செலவினம் ரூ.1,150 மில்லியனாக அல்லது 75 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில் நிருவாகச் செலவுகள் மற்றும் நிறுவகச் செலவுகள் ஒவ்வொன்றும் 13 சதவீதமாக விளங்கின.

1997இன் இறுதியில் வங்கியின் மொத்த அலுவலர் தொகை 2152 ஆக விளங்கி 518 அலுவலர்தர ஊழியர்களை உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டு காலப்பகுதியில் 85 பேர் ஓய்வு பெற்றனர்.

நிருவாகச் செலவின் பல விடயங்களில் 1997இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்பட்டிருந்தது. வங்கியின் ஒன்பது திணைக்களங்கள் கொழும்பு 1இல் எக்சலன் சதுக்கத்திலுள்ள உலக வர்த்தக நிலையக் கட்டத்தின் 10 தளங்களில் மீள நிறுவப்பட்டன. 1997 காலப்பகுதியில் வங்கியின் ஏனைய திணைக்களங்களில் பெரும்பாலானவை சனாதிபதி மாவத்தையிலுள்ள ரேணுகா மற்றும் ஈகுவிற்றி ஆகிய இரண்டு கட்டடங்களில் மீள நிறுவப் பட்டன. இதன் விளைவாக வாடகை வீதங்கள் மற்றும் மின்வலு, நீர் போன்ற ஏனைய கட்டணங்கள் ஆகிய செலவுகள் குறிப்பிடத் தக்களவில் அதிகரித்தன.

மூலதனச் செலவு 1996 இன் ரூ. 508 மில்லியனுடனொப்பிடின் ரூ.938 மில்லியனாக விளங்கியது. இச் செலவினத்தின் பெரும் பகுதியான ரூ.924 மில்லியன் கொண்ட தொகை புதிய மத்திய வங்கிக் கட்டட அமைப்பிற்கும், சனாதிபதி மாவத்தையிலுள்ள பழைய கட்டடப் புனரமைப்புக்குமாகும். பெருந் தொகையான தளபாடம் மற்றும் கருவி ஆகியன 1996 சனவரியின் குண்டு வெடிப்பில் அழிக்கப் பட்டதுடன் அவற்றை மீளப் பெறவேண்டியேற் பட்டது. தளபாடம் மற்றும் கருவிகளின் கொள்வனவுகள் 1996 இல் அவசர அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டாலும் அனைத்துத் திணைக்களங்களினதும் தேவைகள் முற்றாக நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. நிழற்படப் பிரதிப் பொறிகளும், மின்னியல் கணக்கிடும் கருவிகளும் பெறப்பட்டதெனினும் வங்கியின் சொந்தக் கட்டடங்களின் வேலை முடிவுபெற்ற பின் மீண்டும் அலுவலகங்களை மீள அமைக்க வேண்டிய தேவையிருப்பதனால் தளபாடக் கொள்வனவு பிற்போடப்பட்டுள்ளது. ஜேர்மனியின் உதவியின் கீழான கணனிக் கொள்வனவு முடிவு செய்யப்படாமலிருக்கையில் கணனி மற்றும் அச்சிடல் பொறிகளை வாடகைக்குப் பெறுவதன் மூலம் உடனடித் தேவைகளைப் பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. எனவே செயலகத் திணைக்களமானது வங்கியின் திணைக்களங்களுக்கு போதிய தளபாடங்களையும் கருவிகளையும் தேவையான நேரத்தில் வழங்குவதன் மூலம் அத் திணைக்களங்கள் சீராகத் தொழிற்படுவதனைத் உறுதிப்படுத்துவதற்காக மிகச் சுறு சுறுப்பாகச் செயற்பட வேண்டியிருந்தது.

மீண்டும் 1997 ஒத்தோபரில் வங்கியின் சீரான தொழிற்பாடு, கலதாரி கோட்டல் வாகனத் தரிப்பிடத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக் காரணமாக தடைப்பட்டது. இக் குண்டு வெடிப்பு உலக வர்த்தக நிலைய கட்டடத்துக்குப் பாரிய சேதத்தை ஏற்படுத்தியதெனிலும் வங்கிக்குச் சொந்தமான தளபாடம் மற்றும் கருவிகளுக்கான சேதம் மிகக் குறைவாகும். இதனால் வங்கி இடையீடின்றித் தனது தொழிற் பாடுகளைத் மேற்கொள்ளக் கூடியதாயிருந்தது. அக் குண்டு வெடிப்பின் உடனடி விளைவாக விடுப்பு மற்றும் தாமதித்த வருகை என்பன தொடர்பான ஒழுங்குவிதிகளில் சில தளர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

1996 சனவரி குண்டு வெடிப்பில் பாதிக்கப் பட்டவர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் 1997இல் நிறைவு செய்யப்பட்டன. இழப்பீடாகச் செலுத்தப்பட்ட தொகை ரூ. 98 மில்லியனாகும். இத்தொகையில் ரூ.51 மில்லியன் இறந்த ஊழியர்களில் தங்கியிருப்போருக்கும், ரூ.47 மில்லியன் ஓரளவு மற்றும் நிரந்தர ஊனமுற்ற ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டன.

சட்டப்பிரிவானது சட்ட விடயங்களில் வங்கியின் திணைக்களங்களுக்கு ஆலோசனை வழங்கியதுடன் உயர் நீதி மன்றங்களிலும் மற்றும் வங்கிகளோடு தொடர்புடைய பல வழக்குகளில் தொழிலாளர் நீதி மன்றங்களிலும் வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

1997இன் எண் 6 இனைக் கொண்ட பிரதேச அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் வரைவினையும், நாணய விதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி இயற்றுவதனையும் சட்டப்பிரிவு மேற்கொண்டது.

சட்டப்பிரிவு, முன்மொழியப்பட்ட பின்வரும் சட்டவாக்கம் மற்றும் துணைச் சட்டவாக்கம் ஆகியவற்றைத் தயாரிப்பதில் உதவியது.

1. நிதிக் குத்தகையை ஒழுங்குபடுத்தல் தொடர்பான சட்டவாக்கம்.
2. நாணய விதிச் சட்டத்துக்கான திருத்தங்கள்.
3. கறுப்புப்பண முதலீட்டைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டவாக்கம்.
4. உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள்.

## தகவல்

1997இல் தகவல் திணைக்களம் உலக வர்த்தக நிலையத்தியலமைந்துள்ள நூல்நிலையம் தவிர்ந்த அதன் தொழிற்பாடுகளை இராசகிரிய விலுள்ள கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் கட்டடங்களிலிருந்தே மேற்கொண்டது. நடைமுறையாண்டிலும் திணைக்களம் தகவல்களைச் சேகரிப்பவர், களஞ்சியப்படுத்துபவர் மற்றும் வங்கி ஆளணியிலிருக்கும் பல்லூடகங்களூடாக பொதுமக்களுக்கும் தகவல்களைப் பரப்புவர் என்ற அதன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் கட்டியெழுப்பி வலுப்படுத்தியது.

1977இல் நூலகம் நூல்களையும் சஞ்சிகைகளையும் தொடர்ந்தும் சேகரித்து தரவுத் தளத்தினை அதிகரித்த வேளையில் நூலகத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியாகவும் அதனைப் பயன்படுத்துபவர்களுக்குத் திறமையாகப் பணிபுரியவும் 193 சஞ்சிகைகளுக்கு சந்தாக்களைச் செலுத்தியுள்ளது. தொழில்சார் தகைமைகளுடனும் அனுபவத்துடனும் ஒரு உயர் பதவி அலுவலரும் நான்கு உயர்பதவியல்லா அலுவலர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். ப.நா.நிதியம்/உலக வங்கி மற்றும் ஆசிய மன்றம் என்பனவற்றை உள்ளடக்கிய அமைப்புக்கள் நூல்கள்/பருவ வெளியீடுகளை நன்கொடையாக வழங்கியதன்மூலம் தொடர்ந்தும் நூலகத்திற்கு உதவின. இவ்வாண்டில் பெறப்பட்ட நூல்கள் மற்றும் அறிக்கைகள்/துண்டுப் பிரசுரங்கள் என்பனவற்றின் மொத்த எண்ணிக்கை முறையே 4,171ஆகவும் 2,753ஆகவும் காணப்பட்டன.

தகவல்களைப் பரப்புவதில் நாளாந்த செலாவணி வீதங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், உணவு மற்றும் காய்கறி விலைகள், கொ.நு.வி.சுட்டெண்கள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் ரூபாக் கடன்கள் பற்றிய தகவல்களையும் மற்றும் விளம்பரங்களையும் கிரமமான அடிப்படையில் செய்தித் தாள்களுக்கும் மின்னியல் தொடர்புச் சாதனங்களுக்கும் வழங்கியது.

இராசகிரியவிலும் பிரதேச அலுவலகங்களிலுமுள்ள அதன் விற்பனைக் கருமபீடங்களுக்குப் புறம்பாக, திணைக்களம் அதன் விற்பனை கருமபீட வலையமைப்பினை மக்கள் வங்கி தலைமை அலுவலக கட்டடத்திற்கும் அரச வெளியீட்டு பணியகத்திற்கும் விரிவாக்கியது. ஆண்டறிக்கை, பொருளாதார நிலை, மாதாந்த செய்தித் திரட்டு, பொருளாதார சமூக புள்ளி விபரங்கள் பற்றிய நூல்களுடன் திணைக்களத்தின் சொந்த மாதாந்த மற்றும் இரு மாதத்திற்கொருமுறையான வெளியீடுகளான சட்டகனவும், செய்தி அளவீடும் (ஆங்கிலம்) இவற்றின் விற்பனை நிலையங்களூடாக வெளியிடப்பட்டன. இவ் வெளியீடுகளுக்கான குறிப்பாக சட்டகன விற்கான கேள்வி அதிகரித்து வருவதுடன் மாதாந்தம் சராசரியாக ஏறத்தாழ இதன் 10,000 பிரதிகள் விற்பனையாகின்றன. எனினும், செய்தி அளவீடு (ஆங்கிலம்) இந்தளவிற்கு வெற்றி பெறாமைக்கான தடையாக ஆங்கில மொழிமூல வாசகர்களின் அளவு வரையறுக்கப்பட்டிருப்பதே காரணமாகும். மக்கள் வங்கியின் 36ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் விதத்தில் 1997 யூலை 1அம் நாள் தொடக்கம் 5ஆம் நாள்வரை நடத்தப்பட்ட கைத்தொழில், வர்த்தகக் கண்காட்சியான ஜனநிபயுமவில் விற்பனைப் பீடம் வெற்றிகரமாக நடைபெற்ற வேளையில் திணைக்களத்தினால் பரந்தளவிலான வாசகர்களை அடையக் கூடியதாக இருந்தது.

வங்கியின் வெளியீடுகளை அச்சிடும் வேலைகளையும் மற்றைய தேவைப்பாடுகளையும் அச்சகம் பொறுப்பேற்றுள்ளது. 1997இல் அச்சகம் 340 அச்சிடல் பணிகளை நிறைவுசெய்தது. அச்சகம் தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக 1998இற்கான சிறிய நாட்குறிப்பேட்டினை அச்சிடுவதற்குப் பொறுப்பாக இருந்தது. புத்தாண்டு வாழ்த்து மடல்களையும் அச்சகம் தொடர்ந்து அச்சிட்டது. இவ்வாண்டில் அச்சகம் திறைசேரியின் சார்பில் வரவு செலவுத் திட்ட உரை, பொது முதலீட்டுத் திட்டம் "வரவு செலவுத் திட்டம் ஒரு கண்ணோட்டம்" என்ற வெளியீடு என்பனவற்றின் அச்சிடல் வேலைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டது. ஒரு குறிப்பிட்டளவான சமுர்த்தி சேமிப்பு புத்தகங்களும்கூட அச்சகத்தில் அச்சிடப்பட்டன.

சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் 1948–1998 என்ற நூலின் வெளிப்புற அட்டையை வடிவமைத்து வரையும் பணியினையும், ஐ.நாடுகள் பன்னாட்டு சிறுவர் அவசரகால நிதியத்தின் 50ஆவது ஞாபகார்த்த நினைவுக் குத்திகள் மற்றும் இலங்கையின் சுதந்திர பொன்விழா ஞாபகார்த்த நினைவுக் குத்திகளின் கட்புல கலை வேலைப்பாடுகளையும் பல்வேறு விளம்பரங்களை வடிவமைக்கும் வேலையும் திணைக்களம் பொறுப்பேற்றது.

ஆய்வரங்குகள் மற்றும் செய்தியாளர் மாநாடுகள் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கான புகைப்படமெடுக்கும் பணிகளைத் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது.

இசுற கடன் திட்டத்தின் வெற்றியை மதிப்பிடுவதற்காக கிராமியக் கொடுகடன் திணைக்களத்தின் சார்பில் விவரண/வீடியோ படத்தொடரொன்று தயாரிக்கப்பட்டது. இப் படங்களின் பிரதிகள் ஆசிய நாடுகள் பலவற்றிற்கும் வழங்கப்பட்டன.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது கொள்கை உருவாக்கத்தில் ஆளுநருக்கும் நாணயச் சபைக்கும் வழிகாட்டுவதற்காகவும் பொது மக்களுக்குத் தகவல் வழங்குவதற்காகவுமென தொடர்ந்தும் பொருளாதார மற்றும் நிதியியல் புள்ளி விபரங்களைச் சேகரித்தல் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்வதுடன் பொருளாதார ஆராய்ச்சி யினையும் மேற்கொள்கிறது. இத் திணைக்களம் ஆண்டறிக்கையுடன் மாதாந்தச் செய்தித் திரட்டினையும் 1997இன் முதலரைப் பகுதிக்கான பொருளாதார அளவீட்டையும், 1997 மற்றும் 1998இற்காக எறிவுகளை வழங்கும் பொருளாதாரத்தின் நிலை என்ற வெளியீட்டினதும் வெளியீட்டுக்குப் பொறுப்பாக இருந்தது. அச்சிட்ட தொடர்புச் சாதனங்கள் வாயிலாக பொது மக்களுக்கான வாராந்த நிதியியல் புள்ளிவிபரங்கள் தொடர்ந்தும் வழங்கப்பட்டதுடன் கொள்கைத் தயாரிப்பாளர்களுக்கு தகவல் வழங்குவதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட மாதாந்தப் பொருளாதாரக் குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டன. இத் திணைக்களம் வரவு செலவுத் திட்டத் தயாரிப்பில் பயன்படுத்த வேண்டிய நியதிச் சட்ட தேவைப்பாடொன்றான "செத்தெம்பர் 15 அறிக்கையையும் தயாரித்து நிதியமைச்சருக்குச் சமர்ப்பித்தது. இலங்கையின் சுதந்திரத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூருவதற்காக 1998இல் வெளியிடப்பட வேண்டியிருந்த "சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம்" என்ற வெளியீட்டினைத் தயாரிப்பதில் இத் திணைக்களம் கடுமையாக ஈடுபட்டிருந்தது. அத்துடன், பன்னாட்டுப் பண்ட விலைகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தக மாதாந்தப் புள்ளி விபரங்கள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், பன்னாட்டுச் சந்தைகளில் தேயிலை மற்றும் இறப்பர் ஏலங்கள் பற்றிய வாராந்த மற்றும் மாதாந்த அறிக்கைகளையும் நாணயச் சபைக்கு தகவல் வழங்குவதற்காகவும் அமைச்சர்களினதும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களினதும் வேண்டுதலின் படியும் பல்வேறு பொருளாதார விடயங்கள் தொடர்பிலான அவதானிப்புக்களையும் வழங்கும் அறிக்கைகளின் தயாரிப்பு என்பனவற்றையும் இத்திணைக்களம் மேற்கொண்டது. கைத்தொழில் உற்பத்தி (அரையாண்டு மற்றும் ஆண்டுக்குரிய) சிறிய அளவுக் கைத்தொழில், தனியார் வைத்திய சாலைகள் வேளாண்மை உற்பத்திக்கான முன் ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான சாத்தியம் ஆகியவை தொடர்பிலான அளவீடுகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன.

பன்னாட்டு நாணய நிதியத்துக்கு இத் திணைக்களம் ஒழுங்கான அடிப்படையில் தொடர்ந்தும் தகவல்களை வழங்கியதுடன் 1997 மேயிலும் நவெம்பரிலும் பன்னாட்டு நாணய

நிதியத்திற்கான அரசின் கலந்துரையாடல்களின் இணைப்பினையும் மேற்கொண்டது. பன்னாட்டு அமைப்புக்களுக்குத் தரவுகளை வழங்குதலும் அத்தகைய நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு வேலைகளும் வழமைபோல தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டன.

இத்திணைக்களம் "பொருளாதாரத்தின் தற்போதைய நிலையும் எதிர்கால வாய்ப்புக் களும்" பற்றிய பொதுவான ஆய்வரங்கொன்றை 1997 மாச்சில் நடத்தியதுடன் பட்டப்பின்படிப்பை முடித்துக் கொண்ட அலுவலர்களைக் கொண்டு ஆய்வரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டன. பிரதம பேச்சாளர்களினால் விரிவுரைகளும் இத் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தன.

திணைக்களத்தின் அலுவலர்கள் நாணயத் தொழிற்பாடுகள் பிரிவு, திறைசேரி உண்டியல்கள் விலைக் கோரல் குழு, சென்மதி நிலுவை மற்றும் நிதித்துறைக் கண்காணிப்புப் பிரிவு போன்ற கொள்கை விடயங்கள் தொடர்பிலான உள்ளகக் குழுக்களில் பணியாற்றினர். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நடைபெற்ற ஆய்வரங்குகளிலும் இவ்வலுவலர்கள் பொருளாதார விடயங்கள் சம்பந்தமான ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தி ருந்தனர். அத்துடன் இரு புதிய சுட்டெண்களின் அறிமுகமும் கணிப்பீடும் மாதாந்த வர்த்தகச் சுட்டெண்கள் மற்றும் தனியார் துறைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் ஆகியன 1997இல் இத்திணைக்களத்தினால் பொறுப் பேற்கப்பட்டன.

## புள்ளி விபரங்களும் கள அளவீடுகளும்

திணைக்களம் தேசிய கணக்குகள், விலை களும் கூலிகளும், தொழில் நிலை என்பனவற்றை உள்ளடக்கிய (அ) பேரண்ட மட்டங்களிலான சமூகப் பொருளாதார தரவுகளையும் குடும்ப அலகுகள் மற்றும் கூட்டுறவுத் துறைகளின் மீதான (ஆ) நுண்பாக மட்டங்களிலான தரவு களையும் திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல், பரப்புதல் ஆகிய அதன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. நாட்டின் முக்கிய சந்தைகளில் முக்கிய உணவுப் பண்டங்களின் மொத்த, சில்லறை விலைகளின் தரவுகளை சேகரிப்பதும் அவற்றை நாளாந்த அடிப்படை யில் செய்தித் தாள்கள் மற்றும் மின்னியல் ஊடகங்களினூடாக வெளியிடுவதிலும் தொடர்ந் தும் ஈடுபட்டிருந்தது. திணைக்களத்தினால் நிறைவு செய்யப்பட்ட மிக முக்கிய பணியாதெ னில் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளா தார அளவீடு 1996/97இனை பூர்த்தி செய்தமையேயாகும்.

## நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 1996/ 97

1996 ஒத்தோபரில் திணைக்களத்தினால் தொடக்கப்பட்ட நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 1996/97இன் கள வேலைகள் 1997 திசெம்பரில் பூர்த்தி செய்யப் பட்டன. நான்கு சுற்றுக்களை உள்ளடக்கிய இவ்வளவீடு நகர, கிராமிய மற்றும் பெருந் தோட்டத் துறைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 8,880 மாதிரிக் குடும்ப அலகுகளை உள்ளடக்கு கின்றது. இவ்வளவீடு வடமாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகள் நீங்கலாக அனைத்துப் பகுதிகளிலும் நடத்தப்பட்டது.

1953இலிருந்து மத்திய வங்கியினால் ஒழுங்கான கால இடைவெளியில் நடத்தப்படும் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டுத் தொடரில் இது ஏழாவது தொடரா கும். இத் தொடர்களில் கடைசி அளவீடு 1986/ 87இல் நடத்தப்பட்டது. இவ்வளவீட்டின் முதன்மைக் குறிக்கோள் குடித்தொகைப் பரம்பல், வருமானம், செலவினம், நுகர்வு, தொழில்நிலை மற்றும் குடும்ப அலகுகளின் சேமிப்பு மற்றும் முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய சமூக, பொருளாதார நிலைமைகள் மீதான அனைத்தை யும் உள்ளடக்கிய் தரவுகளைச் சேகரிப்பதாகும். அத்தகைய தரவுகள் குடித்தொகையின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பிடுவதற்கு மிகப் பயனுள்ளனவாயுள்ளன. இவ்வளவீட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட மாகாணத் தரவுகள் முதற் தடவையாக மாகாண மட்டங்க ளிலமைந்த சமூகப் பொருளாதார தரவுத் தளத்தினை வலுவாக்கப்பயன்படுத்தப்படும்.

தற்போதைய அளவீட்டின் புதியதொரு பண்பு யாதெனில் தரவுகள் சுற்றுக்களின் அடிப்படையில் செய்முறைப்படுத்தப்படுவதனால் பெருமளவு காலதாமதமில்லாமல் அளவீடுகளில்

கண்டறியப்பட்டவற்றை பரப்ப முடிவதாகும். தரவு செய்முறைப்படுத்தல் தொடர்பான முழு வேலைகளும் முதற் தடவையாக புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. சுற்று 1இல் 2,147 மாதிரி குடும்ப அலகுகள் தொடர்பான அளவீடுகளின் தரவு செய்முறைப்படுத்தலும் சுற்று 2இல் 2,186 குடியிருப்பாளர் அலகுகள் தொடர்பான அளவீடுகளின் தரவு செய்முறைப்படுத்தலும் 1997இல் பூர்த்தியடைந்தன. இச் சுற்றுக்களின் ஆரம்பப் பெறுபேறுகள் மிகவிரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நாடளாவிய தரவு சேகரிப்பு முறை

1978இல் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் தொடங்கப்பட்ட நாடளாவிய தரவு சேகரிப்புத் திட்டம் அதன் தொழிற்பாட்டில் பத்தொன்பதாவது ஆண்டினை நிறைவு செய்துள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள் மீதான தகவல்கள் வேளாண்மைப் பண்டங்களின் உற்பத்தியாளர் விலைகள் மற்றும் முறைசாராத் துறைகளுடன் தொடர்பான கூலி வீதங்கள் என்பன தொடர்ந்தும் கிரமமாகச் சேகரிக்கப்படுகின்றன. முக்கிய வேளாண்மைப் பிரதேசங்களின் வேளாண்மை நிலைமையினைக் கண்காணிப்பதற்காக இத் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டது. தரவுச் சேகரிப்பானது புள்ளி விபரப் பரிசோதகர்களாகத் தொழிற்படும் பள்ளிக் கூட ஆசிரியர்களைக் கொண்ட தீவு முழுவதற்குமான வலையமைப்பினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் நெல், தேயிலை, இறப்பர், தெங்கு துணைத் துறைகளையும் சிறிய அளவான கட்டடவாக்கத் துறையையும் உள்ளடக்கியிருந்தது. சேகரிக்கப்பட்ட தரவுகள் அச்சு மற்றும் மின்னியல் ஊடகங்களூடாக வெளியிடப்படுகின்றன. நுண்பாக மட்ட தரவுச் சேகரிப்புக்களை மேம்படுத்தும் பொருட்டு 1997இல் மாத்தறையிலும் கொழும்பில் இரு ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன.

(அ) வேளாண்மையாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோருக்கு தகவல்களைப் பரப்புவதையும் (ஆ) மொத்த விற்பனை சில்லறை விற்பனை விலைகளின் வேறுபாடுகளைக் கண்காணித்தலையும் கருத்திற்கொண்டு நாளாந்த அடிப்படையில் புறக்கோட்டைச் சந்தையிலிருந்தும் ஏனைய முக்கிய உற்பத்தி நிலையங்களிலிருந்தும் முக்கிய உணவுப் பொருட்களின் மொத்த விற்பனை விலைகளைச் சேகரிக்கின்ற அதன் திட்டத்தினை தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்கள் வெளியிடப் பட்டதுடன் தேசிய கணக்குகள், விலைகள் மற்றும் உள்ளகக் கூலிச் சுட்டெண்களைத் திரட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டன. பாதுகாப்புக் காரணங்களினால் சில காலம் சாத்தியப்படாதிருந்த யாழ்ப்பாணச் சந்தையிலிருந்தான விலை தொடர்பான தகவல் களைச் சேகரிப்பதும் 1997 செத்தெம்பரிலிருந்து மீளத் தொடங்கியது.

## தேசிய கணக்குகள்

தேசிய கணக்குகளை மதிப்பிடுவதுடன் தொடர்பான நடவடிக்கைகளை திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. இவை முதலாந்தர, இரண்டாந்தர தரவுகளின் சேகரிப்புக்களையும் திரட்டல்களையும் உள்ளடக்கியிருந்தது. மிகக் குறைந்தகால இடைவெளிகளில் தேறிய கணக்குகளைத் திரட்டும் செயல் முறையிலும் திணைக்களம் ஈடுபட்டிருந்தது. தரவுத்தளம் மேம்பாடடைந்தமையின் காரணமாக 1997இற்கான மொ.உ.உ எறிவுகளை உரிய காலத்திற்கு முன்பே "பொருளாதார நிலை – 1997" என்ற வெளியீட்டில் வெளியிடுவது சாத்தியமாயிற்று.

## தொழில் நிலைப் புள்ளி விபரங்கள்

அரச திணைக்களங்கள், அமைப்புக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்துறைகள் என்பனவற்றிலுள்ள தொழில் நிலையின் போக்குகளை உறுதியாக அறிந்து கொள்ளும் பொருட்டு அரசதுறைத் தொழில் நிலையின் ஆண்டு அளவீடு 1997இல் மேற்கொள்ளப்பட்டது. ஊழியர் சேமநிதியின் தரவுத் தளத்திலிருந்து தொழில் நிலைப் புள்ளி விபரங்களைப் பெறுவதுடன் தொடர்பான ஆரம்ப வேலைகள் இவ்வாண்டில் பூர்த்தியடைந்தன.

## வெளியீடுகள்

திணைக்களம் "இலங்கை சமூகப் பொருளாதார தரவு" மற்றும் "இலங்கைப் பொருளாதார

சமூகப் புள்ளி விபரங்கள்" என்ற பெயர்களில் ஆண்டு வெளியீடுகள் இரண்டினை வெளியிட்டது. இவை குடித்தொகை பரம்பல், தொழிற்படையும் தொழிலும், தேசிய வருமானமும் செலவும், வேளாண்மை, கைத்தொழில், வெளிநாட்டு வர்த்தகமும் நிதியும் விலைகள் மற்றும் கூலிகள், பணமும், வங்கித் தொழிலும், மூலதனச் சந்தை, அரச நிதி மற்றும் சமூகப் பொருளாதாரப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய சமூகப் பொருளாதார மாறிலிகள் மீதான அனைத்தையும் உள்ளடக்கிய காலத் தொடர் மற்றும் குறுக்குப் பிரிவுத் தரவுகளையும் தருகின்றன. இவ் வெளியீடுகளிலுள்ள தரவுகள் பிராந்தியப் பொருளாதார தொகுதிகளுக்கான ஒப்பீட்டுப் புள்ளி விபரங்களையும் உள்ளடக்கியுள்ளன. அத்துடன் திணைக்களம் மத்திய வங்கியின் ஏனைய பல வெளியீடுகளுக்கும் உதவியது.

## தரவு செய்முறைப்படுத்தல்

தரவு செய்முறைப்படுத்தல் திணைக்களம் 1996 நவெம்பரில் உலக வர்த்தக நிலையக் கட்டடத்துக்கு நகர்ந்ததுடன் 2 ஐபீஎம் ஏஎஸ் 400 கணனி முறைகளையும் நிறுவியது. பழைய பிரயோகங்கள் சில நவீன திருத்தங்களுடன் 1997இல் புதிய முறைக்கு மாற்றப்பட்டன. புதிய பிரயோகங்களின் முன்னேற்றத்துடன் பல திணைக்களங்களுக்கான வேலைகள் ஆரம்பித்தன.

ஏஎஸ் 400 கணனி முறையொன்று ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தினால் நிறுவப்பட்டதுடன் தரவு செய்முறைத் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழான தேர்வாய்வுச் செயல்முறையாளர்களைக் கொண்ட குழுவொன்று, ஊழியர் சேமநிதியத் திணைக்களத் தரவுகளை செய்முறைப் படுத்துவதற்காக புதிய முறையொன்றை ஏற்படுத்தி தொழிற்படுத்தியது. அத்திட்டம் ஊழியர் சேம நிதியத் தரவுகளை ஒழுங்கு முறைப்படுத்தவும் விரைவுபடுத்தவுமென தற்போது விரிவாக்கப்பட்டுள்ளது.

தரவுச் செய்முறைத் திணைக்களத்தில் ஏஎஸ் 400 முறையில் மனித மூலவள முகாமைத்துவப் பொறியொன்று நிறுவப்பட்ட துடன் அதனது பல அலகுகளும் தொழிற் படுத்தப்பட்டன. அனைத்து ஊழியர்களினதும் தனிப்பட்ட தரவுத் தளங்களின் முன்னேற்றத்தையும், சம்பளக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய ஏனைய அலகுகளை நடைமுறைப் படுத்துவதை நிறைவு செய்வதற்கான வேலைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன.

தனிப்பட்ட கணனி முறையைப் பயன்படுத்தி புள்ளி விபரத் திணைக்களத்தின் நாடளாவிய சந்தைத் தகவல்களைச் செய்முறைப் படுத்துவதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட தொகுதியொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அனைத்துத் திணைக்களங்களினதும் விடுப்பு மற்றும் அலுவலர் வரவுகளைப் பேணுவதற்கான முறையொன்று ஏற்படுத்தப்பட்டதுடன் 1998இன் முற்பகுதியில் எல்லாத் திணைக்களங்களிலும் இது நிறுவப்படவுள்ளது.

தரவு செய்முறைத் திணைக்களத்திலுள்ள ஏஎஸ் 400 கணனி முறையானது வர்த்தக வங்கிகளின் திரவ நிலைமையைக் கண்காணிப்பதற்காக அனைத்து வர்த்தக வங்கிகளும் தொடர்பான தகவல்களை ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணிக்கு அனுப்பிவைக்கின்றன.

மத்திய வங்கியின் கணனிச் சூழலை நவீனமயப்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்று மேற் கொள்ளப்பட்டதுடன் திணைக்களங்களில் உள்வட்டாரப் பிரதேச வலையமைப்புக்களை ஆரம்பத்தில் நிறுவுவதற்காக தனிப்பட்ட கணனிகள் மற்றும் ஏனைய கருவிகளின் வழங்கலுக்கென விலைக் கோரலொன்று மேற் கொள்ளப்பட்டது. இவ்வலையமைப்பு பின்பு புதிய கட்டடத்துக்கும் திருத்தப்பட்ட பழைய கட்டடத்துக்கும் மாற்றப்பட்டு ஒரேயொரு வலையமைப்பை உருவாக்குவதற்காக இணைக்கப்படும். இம்முறையானது மத்திய வங்கியில் மிக நவீனமான தொழில்நுட்பமயப் படுத்தப்பட்ட சூழலை உருவாக்கும்.

உண்மை நேர மொத்தத் தீர்ப்பனவுக் கொடுப்பனவு முறை, மற்றும் பத்திரங்களற்ற அரச பிணைகளின் வர்த்தகம் ஆகியவற்றை நிறுவுதல் உள்ளடங்க வங்கித் தொழில் நடவடிக்கையின் தன்னியக்கம் பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட செயற்றிட்டங்களை திறமையுடன் மேற் கொள்வதற்காக பத்து மூத்த தேர்வாய்வுச் செயல்முறையாளர்களும், இரண்டு கணனி முறைப் பொறியியலாளர்களும் திணைக்களத்தில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

## இலங்கைத் தன்னியக்கத் தீர்வகம்

ஆய்விற்குரிய ஆண்டில், காசோலைகளின் தொகை 1,553,811 எண்ணிக்கையினால் அதிகரித்தன் மூலம் செய்முறைப்படுத்தப்பட்ட காசோலைகளின் மொத்த தொகை 29,261,633இற்கு உயர்வடைந்தது.

1997 ஒத்தோபர் 15ஆம் நாள் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் காரணமாக ஏற்பட்ட சில தடங்கல்கள் நீங்கலாக, இலங்கைத் தன்னியக்கத் தீர்வகம் அதன் வழமையான தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. கட்டிடத்திற்குப் பெருமளவு சேதம் ஏற்பட்ட போதும் கருவிகள் சேதமடையாததுடன் தன்னியக்கத் தீர்வகம் குண்டு வெடித்த இரண்டாம் நாள் அதன் தொழிற்பாடுகளை ஆரம்பித்து விட்டது. இலங்கைத் தன்னியக்கத் தீர்ப்பனவு அகத்திற்காக கணனி துணை ஆதார முறையொன்றினை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. இச் செயற்றிட்டம், தன்னியக்க காசோலை தீர்ப்பனவுத் தொழிற்பாட்டினை விரைவுபடுத்தி, நவீனப் படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டுவரும் ஒரு தொழில் நுட்பமான எதிர்ப்படிவ உருமாதிரி முறையினைப் பயன் படுத்தக்கூடிய சாத்தியங்களையும் கண்டறியும்.

இலங்கை மத்திய வங்கியின் குண்டு வெடிப்பு வங்கியின் பிராதான கணனித் தொகுதி அமைப்பினை அழித்துவிட்டமையின் காரணமாக வெளிப்புற வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை பாதிக்கப்பட்டு பின்னடைவினைக் கொண்டிருந்தது. எனினும், 1997இல் இக் கொடுக்கல் வாங்கல்கள் மீண்டும் தொழிற்படத் தொடங்கியதுடன் மத்தியவங்கியின் முறைகள் தற்காலிகமாக தொழிற்படுத்தப்பட்ட வரையறுக் கப்பட்ட செல்லுபடித் திகதியிலிரு ந்தும் எதிர்காலச் செல்லுபடித் திகதிகளை உள்ளடக்கத் தக்க விதத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டன. வெளிப்புற வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையினூடாக மென்மேலும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்று வருகின்றன. நேரடிப் பற்றுக்களின் கொடுப்பனவிற்கான செயற்றிட்டத்தின் கட்டம் IIIஇன் நடைமுறைப்படுத்தலை மேற்கொள்ளு வதற்காகப் பெருமளவு வேலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இச் செயற்றிட்டம் 1998இல் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என நம்பப்படுகிறது.

## பயிற்சி

ஆய்விற்குரிய ஆண்டில் கல்வி சார்ந்த, அதே போன்று கல்வி சாராத துறைகளில் அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கின்ற அதன் கொள்கையை மத்திய வங்கி தொடர்ந்தது. கல்வி சார்ந்த பயிற்சியானது வெளிநாட்டிலுள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்களில் பொருளாதாரம் மற்றும் அதனுடன் இணைந்த விடயங்களில் பட்டப்பின்படிப்புடன் தொடர்புடையதாகக் காணப்பட்டது. இவ்வாண்டில் பொருளாதாரத்தில் முதுமானிப் பட்ட நெறிகளுக்காக 6 அலுவலர்கள் வெளிநாடு பயணமாகினர். மேலும் ஒரு அலுவலர் இந்தியாவில் உள்ள சர்வதேசப் புள்ளி விபரவியல் கல்வி நிலையத்தில் புள்ளி விபரவியல் டிப்ளோமா கற்கை நெறியை பயின்றார்.

குறுங்கால கற்கை நெறிகள் ஆய்வரங்குகள், செயலமர்வுகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு கற்கை சுற்றுலாக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய கல்விசாரா பயிற்சியானது வங்கியுடன் தொடர்புபட்ட குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பானதாக இருந்தது. 1997இல் குறுகிய காலப்பயிற்சிக்காக மொத்தமாக 53 அலுவலர்கள் 41 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுவதற்காக வெளிநாடு சென்றனர். மொத்தமாக 127 அலுவலர்கள் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்பட்ட 20 பயிற்சி நெறிகளில் பங்குபற்றிய வேளையில் 62 அலுவலர்கள் ஏனைய உள்நாட்டு நிறுவனங்களில் நடாத்தப்பட்ட 22 கற்கை நெறிகளிலும் மற்றும் ஆய்வரங்குகளிலும் பங்கு கொண்டனர்.

பட்டப்பின்படிப்பு கற்கைகளுக்காக வெளிநாடு பயணமாக எண்ணியுள்ள அலுவலர்களுக்காக பொருளாதாரம் மற்றும் கணித வகுப்புக்களைத் திணைக்களம் நடாத்தியது. சில குறிப்பிட்ட வகையான ஊழியர்களின் பதவி

உயர்விற்கான பரீட்சைகளையும் உயர் பதவி அலவலர்களுக்கான பட்டப்பின்படிப்பு புலமைப் பரிசில் தகைமைப் பரீட்சைகளையும் நடத்தும் அதன் வழமையான தொழிற்பாடுகளை திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது.

## முகாமைத்துவக் கணக்காய்வு

மத்திய வங்கியின் செயற்றிறனையும் பயனுறும் தன்மையினையும் அதிகரிக்கின்ற குறிக்கோளுடன் வங்கியின் விதிகள், ஒழுங்கு விதிகள், விளக்கங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் என்பன பின்பற்றப் படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு 1997இல் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் அதன் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்கொண்டது. கணக்காய்வின்போது குறைபாடுகள் மற்றும் வேறுபடும் தன்மைகள் அவதானிக்கப்பட்டவிடத்து அவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன.

1996 நவெம்பரில் மத்திய வங்கியின் தலைமை அலுவலகம் உலக வர்த்தக நிலையத்தில் மீண்டும் நிறுவப்பட்டதன் பின்னர் 1997இல் செயலகம், நலன்புரி மற்றும் வங்கித் தொழில் திணைக்களங்களில் கணக்காய்வுப் பிரிவுகள், இத் திணைக்களங்கள் கூடுதலான வினைத்திறனுடன் தொழிற்படுவதற்கான கணக்காய்வுப் பணிகளை வழங்குவதற்காக மீள அமைக்கப்பட்டன.

திணைக்களத்தின் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின்படி அநுராதபுரத்திலுள்ள மத்திய வங்கி பிரதேச அலுவலகத்தின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட வேளையில் பணிமனைத் திணைக்களத்தினால் பேணப்பட்ட வங்கி ஊர்திகளினதும் நாணயத் திணைக்களத்தின் காப்பறைகளிலிருந்த நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளினதும் எண்ணிக்கை தொடர்பான விபரங்களையும் சரிபார்த்தது. காலத்திற்குக் காலம் காசுப் பீடங்களில் திடீர் பரிசோதனைகளும் மேற் கொள்ளப்பட்டன. மேலும் வங்கி ஊழியர்களின் சம்பள அளவுகளின் மீளாய்வு, குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள், வங்கியின் புதிய கட்டட நிருமானம் தொடர்பான கொடுக்கல் வாங்கல் கொடுப்பனவுகள் என்பன தொடர்பாக இவ்வாண்டில் முன் கணக்காய்வுகள் செய்யப்பட்டன.

மேற் குறிப்பிட்ட வேலைகளுக்குப் புறம்பாக, வங்கி முகாமையினால் கேட்டுக் கொண்டதற்கிணங்க மத்திய வங்கியின் உயர்பதவி உதவியாளர் தேவைப்பாடுகள் மற்றும் மத்திய வங்கியின் மருந்துச்சாலையின் அலுவலர் தேவைப்பாடுகள் என்பன மீதான ஆய்வுகளையும் இவ்வாண்டில் மேற்கொண்டது.

## பணி மனை

1997இல் பணிமனைத் திணைக்களம் வங்கியின் முன்னாள் தலைமை அலுவலகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள பல்வேறு வாடகைக் கட்டடங்களிலும் அமைந்துள்ள வங்கி ஊழியர்களுக்கான சுமுகமான சூழல் ஒன்றினை உருவாக்குவதற்காக அடிப்படைத் தேவைகளைக் கொண்டுநடாத்துவதற்கான அதனது பேணல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

மேலே கூறப்பட்ட தொழிற்பாடுகளுடன் 1997 திசெம்பரில் நாணயத் திணைக்களத்தை திறைசேரிக் கட்டடத்திற்கு இடமாற்ற வேண்டியிருந்தமையினால் மிக விரைவாக திருத்த வேலையை முடித்துக் கொடுக்க வேண்டியிருந்தமையும் பணிமனைத் திணைக்களத்தின் முக்கியமானதொரு தொழிற்பாடாக இருந்தது.

நாணயச் சபையினால் பொறுப்பேற்கப் பட்ட மத்திய வங்கியின் கட்டட விரிவாக்கச் செயற்றிட்டம் மற்றும் பழைய கட்டடத் திருத்த வேலை சம்பந்தப்பட்ட தொழிற்பாடுகள் 1997 நவெம்பரிலிருந்து புதிய திணைக்களமொன்றுக்குப் பேரளிக்கப்பட்டுள்ளது.

## புதிய கட்டடங்கள்

புதிய கட்டடங்கள் திணைக்களம் 1997 நவெம்பர் 18ஆம் நாள் நிறுவப்பட்டு கட்டட விரிவாக்கம் சம்பந்தமான வேலைகளையும் தலைமை அலுவலகத்தின் புனரமைப்புச் செயற்றிட்டத்தையும் செயற்படுத்துவதற்கான முக்கிய பொறுப்பு அதனிடம் ஒப்படைக்கப் பட்டது. இந்த இரு கட்டடங்கள் சம்பந்தமான திட்டங்களின் வேலைகள் பணியகத் திணைக்கள

த்திலிருந்து விடுவிக்கப்பட்ட அலுவலர்கள் அடங்கிய தனியான பிரிவு ஒன்றினால் செயற்படு த்தப்படும். இந்த இரு கட்டடங்களுக்கான திட்டங்களும் மிக விரைவில் முற்றுப்பெறச் செய்யப்படவேண்டியிருப்பதனால் வேலைகளைச் சிறப்பாகக் கவனிப்பதற்காக தனியான ஒரு திணைக்களத்தை நிறுவி திட்டங்களை எந்தத் தாமதமும் இடையூறுமின்றி செயற்படுத்துவதற்குப் போதிய அதிகாரங்கள் திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டன.

### மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்துக்கான கட்டட விரிவாக்கம்

இத்திட்டம் சம்பந்தமான கட்டட வேலைகள் 1994 ஓகத்தில் தொடங்கப்பட்டு 1997ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. எதிர்பாராத விதமாக அடி மண்ணின் சாதகமற்ற நிலைமைகள், பாதுகாப்பு காரணமாக வேலைகள் நிறுத்தம், கோட்டைப் பிரதேசத்துக்குள் பாரமான வாகனங்களின் பிரவேசத்தடை, 1996 சனவரி 31ஆம் நாள் ஏற்பட்ட குண்டுவெடிப்பினால் வேலைகளின் தொடர்ச்சியான இடைநிறுத்தப்பட்டமை என்பனவற்றினால் கட்டுமான வேலைகளின் முன்னேற்றம் முக்கியமாய்ப் பாதிக்கப்பட்டது. 1997ஆம் ஆண்டிறுதியில் 75 சதவீதமான பொதுக் கட்டட வேலைகளும், மொத்த வேலைகளில் 43 சதவீதமும் முற்றுப் பெற்றிருந்தது. மின்சார/இயந்திர வேலைகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன.

இக் கட்டடத் திட்டம் 1998 ஓகத்தில் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த கட்டட வேலைகள் முற்றுப்பெற்றவுடன் தற்போது வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ள இடத்தில் அமைந்துள்ள பல வங்கித் திணைக்களங்களுக்கு இடவசதியளிக்கக்கூடியதாக இருக்கும்.

### சேதமடைந்த தலைமை அலுவலகக் கட்டடம்

குண்டுவெடிப்பின் காரணமாக சேதமடைந்த தலைமை அலுவலகத்தின் திருத்த வேலைகள் மிகவும் சிக்கலான தன்மையக் கொண்டிருந்தமையின் காரணமாக இத் திருத்த வேலைகளின் உண்மையான அளவு பற்றி ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு பல பொறியியலாளர்களுடன் ஆலோசித்துப் பெறப்பட்ட விலைக் குறிப்பீடுகளினையும் கொண்டு ஒப்பந்தகாரருடன் கலந்துரையாடப்பட்டது. சுப்லின் ஏஜி ஸ்டட்காட் என்ற சேர்மன் கம்பனிக்கு புனரமைப்பு வேலைகள் வழங்கப்பட்டதோடு திட்ட முகாமைத்துவம் சம்பந்தமான ஆலோசனைப் பணிகள் வடிவமைப்புக்கு ஒப்புதலளித்தல், கட்டட மேற்பார்வை, கட்டடக் கலை வடிவமைப்பு என்பன மத்திய பொறியியலாளர் ஆலோசனைப் பணியகத்தினால் மேற்கொள்ளப்படும். 1997 திசெம்பரில் நாணயத் திணைக்களம் திறைசேரிக் கட்டடத்தில் மீண்டும் அமைந்த பின்னர் திருத்த வேலைகள் தொடங்குவதற்கான கட்டடளை ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டது. 1997 திசெம்பரில் சேதமடைந்த பொறிகள், உபகரணங்கள், யன்னல்கள், குளியலறை பொருத்திகள் மற்றும் மின்னியல், குளிரூட்டி பொருத்திகள் என்பனவற்றை முற்றாக அகற்றுதல் சேதமடைந்த சுவர்களை இடித்துத் தகர்த்தல் போன்ற வேலைகளையும் மற்றும் சிற்ப வேலை ஆக்கக் கூறுகளை கட்டடத்திலிருந்து நீக்குவதற்கான வேலைகளையும் ஒப்பந்தக்காரர் தொடங்கினர்.

இக் கட்டடத்தின் புனரமைப்பு வேலைகள் 1999 ஏப்பிறலில் முற்றுப்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## நலன்புரி

நலன்புரித் திணைக்கம் வழக்கமான நலன்புரி வசதிகளை வழங்கிக்கொண்டிருந்த வேளையில் 1996இல் குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்ட வங்கி ஊழியர்களுக்கு 1997இலிலும் தொடர்ந்தும் அதிகரித்த வசதிகளை வழங்கியது. திணைக்களம் வீடமைப்பு, ஊர்தி மற்றும் ஏனைய தேவைகளுக்கு சலுகைக் கடன்களை வழங்கியதோடு மருத்துவ நன்மைத் திட்டத்தின்கீழ் ஊழியர்களினதும் அவர்களில் தங்கியிருப்பவர்களினதும் தேவைப்பாட்டுக்கு ஏற்றதாக முற்பணத்தையும் அவர்களது மருத்துவச் செலவையும் வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட அனுமதிப் பங்கிற்கு உட்பட்டதாகச் செலவீடு செய்தது. குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு 1996இல் அவர்களது மருத்துவத் தேவைப்பாட்டுக்கு ஏற்றதாக வழங்கப்பட்ட சிறப்பு வசதிகளை பூர்த்தியாக்கும் தொழிற்பாடுகள் இவ்வாண்டிலும் தொடர்ந்தன.

டுகைவண்டி மற்றும் பேருந்து பருவகாலச் சீட்டுகளுக்கான உதவிக் கொடுப்பனவுத் திட்டம் மற்றும் டுகைவண்டிப் பயண ஆணைச்சீட்டு வழங்கும் திட்டமும் முந்திய ஆண்டினைப் போலவே இவ்வாண்டும் தொடர்ந்தது. மத்திய வங்கியின் திணைக்களங்கள் வெவ்வேறு இடங்களில் அமைந்திருப்பதினால் தகுதியான சிற்றுண்டிச்சாலை வசதிகள் 1997ஆம் ஆண்டிலும் மாற்றமின்றி மட்டுப்படுத்தப்பட்டே இருந்தது. ஊழியர்கள் நேரத்திற்கு நேரம் வேலைக்காக எங்கு அமர்த்தப்பட்டார்களோ அங்குள்ள தேவைக்கு ஏற்றதாகவே திணைக்களம் வசதிகளை வழங்கியது.

மத்திய வங்கியின் மருத்துவப் பரிசோதனை நிலையம் மீள நிறுவப்பட்டு அதனால் வழங்கப்பட்ட வசதிகள் குறிப்பிடத்தக்களவில் சிறந்ததாகவும் முன்னேற்றமடைந்துமிருந்தபோது குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட தீயினால் பெரும்பாலான கருவிகள் அழிந்து விட்டன. எனினும், காயமடைந்த ஊழியர்களின் மருத்துவச் செலவீடு நெகிழ்ச்சியுடைய அணுகுமுறையைக் கொண்டிருந்தது. குண்டுவெடிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்நாட்டு மருத்துவச் சிகிச்சைக்காக ரூ.250,000/= வரையிலும் வெளிநாட்டு மருத்துவச் சிகிச்சைக்காக ரூ.250,000/=வரையிலும் மருத்துவச் செலவைச் செய்யும் வசதிகள் தொடர்ந்தன. குறிப்பிட்ட எல்லைக்கு மேலாக மருத்துவத் தேவைகளை வேண்டிநிற்கும் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு சிறப்பு நிதியமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், குண்டுவெடிப்பினால் தமது வாகனங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்ட வாகனச் சொந்தக்காரர்களுக்கு நிவாரணமளிக்கும் பொருட்டு 1996இல் அறிவிக்கப்பட்ட நிவாரணம் இவ்வாண்டிலும் தொடர்ந்தது.

ஊழியர்களினது கையில் கிடைக்கும் சம்பள அளவினை கூட்டும் பொருட்டு அவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நலன்புரிக் கடன்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு மீண்டும் பட்டியலிடப்பட்டு ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. இத்துடன் வீடமைப்புக்காக வழங்கப்படும் கடன் மீது வசூலிக்கப்பட்ட வட்டிவீதம் சிறிதளவால் குறைக்கப்பட்டது.

நலன்புரித் திணைக்களத்தின் கணக்கிடல் முறை மற்றெல்லா வகையான பதிவேடுகள் என்பனவற்றுடன் தொடர்பான தரவுத் தளம் என்பன 1996 சனவரியில் தீயினால் சேதமடைந்திருந்தன. எனினும் திணைக்களம் நலன்புரிக் கடன்கள் மற்றும் நலன்புரித் திட்டங்கள் சம்பந்தமான கணக்கிடல் முறையை மீள அமைக்கக் கூடியதாக இருந்தது. மேலும் திணைக்களத்தின் திறமையை மேம்படுத்தும் பொருட்டும் நலன்புரி முகாமைத்துவச் செலவுகளைக் குறைக்கும் நோக்கமாகவும் கணனி முறைப்படுத்த கணக்கிடல் முறையும் கொடுப்பனவுத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## பாதுகாப்புப் பணிகள்

1997இல் பின்வரும் பணிமனைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக பாதுகாப்பு அலுவலர்கள் அமர்த்தப்பட்டனர்.

1. கொழும்பு 1 சனாதிபதி மாவத்தை யிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் பழைய கட்டடம்.
2. கொழும்பு 2 இலுள்ள ஊேறமச்சந்திரா கட்டடம்.
3. இராசகிரியாவிலுள்ள கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி.
4. கொழும்பு 1 எக்சலன் சதுக்கத்திலுள்ள உலக வர்த்தக நிலையக் கட்டடம்.
5. கொழும்பு 1 ரேணுகா கட்டடம்.
6. கொழும்பு 1 ஈகுவிட்டி 2 கட்டடம்.
7. கொழும்பு 1 சோனக இஸ்லாமிய கலாச்சார அக கட்டடம் கொழும்பு 1.
8. ஏரிக்கரை மக்கள் வங்கி கட்டடத்திலுள்ள நாணயத் திணைக்களம்.
9. கொழும்பு 1 பழைய செயலகக் கட்டடம்.
10. கொழும்பு 7 வங்கி இல்லம்.
11. நுகேகொடையிலுள்ள ஆளுநரின் வதிவிடம்.
12. அநுராதபுரத்திலும், மாத்தளையிலும் மாத்தறையிலுமுள்ள பிரதேச அலுவலகங்கள்.

திணைக்களம் நாணயம் மற்றும் தங்கம் என்பனவற்றைக் கொண்டு செல்கையில் பொலிசின்

உதவியுடன் பாதுகாப்பினை வழங்கியது. திணைக்களம் ஆளுநருக்கும் இலங்கை மத்திய வங்கிக்கு வருகைதரும் வெளிநாட்டுப் பேராளர்களுக்கும் பாது காப்பினை வழங்கியது.

நுவரெலியாவிலும் கதிர்காமத்திலுள்ள விடுமுறை இல்லங்களுக்கு பாதுகாப்பு வழங்கிய வங்கிப் பாதுகாப்பு அலுவலர்களுக்குப் பதிலாக 1997 யூலை 1ஆம் நாள் தொடக்கம் தனிப்பட்ட பாதுகாப்பு நிறுவனமொன்று அமர்த்தப்பட்டது.

## ஆளணி

நிறுவனத் திணைக்களம் ஆட்சேர்ப்பு, நியமனங்கள், பதவி உயர்வுகள், ஓய்வு வழங்குதல் மற்றும் ஆளணியினர் சம்பந்தமான ஏனைய விடயங்களில் 1997இல் தனது தொழிற்பாட்டைத் தொடர்ந்து ஆற்றியது.

1997இல் வங்கிக்கு வைத்தியர் ஒருவர் (ஒப்பந்தம்), ஐந்து உயர் பதவி அலுவலர்கள், பத்து தேர்வாய்வு செய்முறையாளர்கள், இரண்டு கணனிமுறை பொறியியலாளர்கள் (ஒப்பந்தம்), உதவி பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர் ஒருவர், நூலகப் பொறுப்பாளர் ஒருவர், ஐந்து நூலக உதவியாளர்கள் ஆகியோர் வங்கிப் பணிக்காக நியமிக்கப்பட்டனர்.

விசாரணைகள் மற்றும் புலனாய்வுகள் தொடர்பான குறித்துரைக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளுவதற்காகவேண்டி வங்கியினால் சட்ட, கணக்கியல் மற்றும் வங்கித் தொழிலும் நிதியியல் பணிகள் மதியுரையாளர் குழுவொன் றினை நிறுவியது. இவ்வாண்டில் இக்குழுவில் நான்கு மதியுரையாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாண்டில் இரு புதிய திணைக்களங்கள் நிறுவப்பட்டன. மூலதனச் சந்தையின் அபிவிருத் திக்கான சிறப்பு வலியுறுத்தலுடன் இலங்கையின் நிதியியல் சந்தைகளில் அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்கான அதிகூடிய பங்கினை வகிப்பதற்காக 1997 யூலை 29ஆம் நாள் நிதியியல் சந்தைகள் திணைக்களம் நிறுவப்பட்டது. புதிய கட்டடத்தின் நிருமாணம் மற்றும் பழைய கட்டடத்தின் புனரமைப்பு என்பன தொடர்பான வேலைகளை மேற்பார்வை செய்து ஒருங்கிணைப் பதற்காக 1997 நவெம்பர் 18ஆம் நாளிலிருந்து புதிய கட்டடங்கள் திணைக்களம் நிறுவப்பட்டது.

1997இல் ஆளுநர் திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன பின்வரும் மாநாடுகளிலும் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்.

(அ) தாய்லாந்து பாங்கொக்கில் 1996 பெப்புருவரி 13ஆம் நாளிலிருந்து 16ஆம் நாள்வரை நடைபெற்ற 32ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களின் மாநாடு.

(ஆ) ஐ.அ.டொலர் 50 மில்லியன்கொண்ட கடன்களைத் திரட்டுவதற்காக 1997 பெப்புருவரி 26ஆம் நாள் தொடக்கம் மாச்சு 6ஆம் நாள்வரை கொங்கொங் (பெப்புருவரி 27) கொறியா (பெப்புருவரி 28) பாரெயின் (மாச்சு 2) ஐக்கிய இராச்சியம், இலண்டன் (மாச்சு 4) ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்கள்.

(இ) ஐக்கிய அமெரிக்காவின் வாசிங்டன் நகரில் 1997 ஏப்பிறில் 26ஆம் நாள் தொடக்கம் 29ஆம் நாள்வரை நடை பெற்ற பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் ஜி 24 நாடுகளின் வசந்தகாலக் கூட்டங்கள்.

(ஈ) கொங்கொங்கில் 1997 செதெம்பர் 18ஆம் நாளிலிருந்து 26ஆம் நாள்வரை நடைபெற்ற உலக வங்கி / ப.நா.நிதிய ஆண்டுக் கூட்டங்கள்.

(உ) ஐக்கிய இராச்சியம் இலண்டனில் 1997 ஒற்றோபர் 19ஆம் நாளிலிருந்து 28ஆம் நாள்வரை நடைபெற்ற பொது நலவாய அரசுகளின் தலைவர்களது கூட்டம் மற்றும் வியாபார மன்றக் கூட்டம்.

### நியமனங்கள்

1 திரு. ரீ.எச்.டீ. பீரிஸ் சிறப்பு அலுவலர் தமது கடமைகளுக்கு மேலதிகமாக 1997 சனவரி 13ஆம் நாளிலிருந்து பயிற்சித் திணைக்கள த்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

2 திரு. வை.ஏ. பியதிஸ்ஸ, பணிப்பாளர், பாதுகாப்பு பணிகள், 1997 பெப்புருவரி 7ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு பணிப்பாளராகவும், அக் கடமைகளுக்கு மேலதிகமாக மூலதனம் மற்றும் நிதியியல் சந்தை அபிவிருத்திக்கு சிறப்பு அலுவலராகவும் நியமிக்கப்பட்டார்.

3 பிறிகேடியர். எச்.எஸ்.ஏ. பெரேரா கட்டுப்பாட்டாளர், பாதுகாப்பு சேவைகள் (ஒப்பந்தம்) 1997 பெப்புருவரி 7ஆம் நாளிலிருந்து பாதுகாப்புச் சேவைகளுக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

4 திரு. டி. போயகொட, பணிப்பாளர் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி, 1997 யூன் 2ஆம் நாளிலிருந்து நிறுவனத் திணைக்களத்துக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

5 திரு. எச்.ஏ. ஜீ. எட்டியாராச்சி, பணிப்பாளர், நிறுவனத் திணைக்களம். 1997 யூன் 2ஆம் நாளிலிருந்து வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரிக்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

6 திரு. ரி.எச்.டி பீரிஸ் சிறப்பு அலுவலர் மற்றும் பதில் பணிப்பாளர், பயிற்சித் திணைக்களம் 1997 யூலை 1ஆம் நாளிலிருந்து பயிற்சித் திணைக்களத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

7 திரு. பி.ரி. சிறிசேன பதவிநிலை அலுவலர் வகுப்பு தரம் 4 1997 யூலை 8ஆம் நாளிலிருந்து மூலதன சந்தை அபிவிருத்திக்கு சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார்.

8 முனைவர். டி.எஸ். விஜேசிங்க மேலதிகப் பணிப்பாளர், புள்ளி விபரத் திணைக்களம், 1997 ஓகத்து 15ஆம் நாளிலிருந்து கிராமிய வங்கி அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

9 திரு. பி.ரி. சிறிசேன சிறப்பு அலுவலர் மூலதன சந்தை அபிவிருத்தி, 1997 செத்தெம்பர் 19ஆம் நாளிலிருந்து நிதியியல் சந்தைகளின் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

10 திரு. ரி.எச்.டி பீரிஸ் பணிப்பாளர் பயிற்சித் திணைக்களம், தமது கடமைகளுக்கு மேலதிகமாக 1997 நவெம்பர் 19ஆம் நாளிலிருந்து பணிமனைத் திணைக்களத் திற்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

11 திரு. எம்.எஸ். சிறிபால மேலதிகப் பணிப்பாளர் நலன்புரி 1997 நவெம்பர் 19ஆம் நாளிலிருந்து ஊழியர் சேமலாப நிதித் திணைக்களத்திற்கு மேலதிக கண்காணி ப்பாளராக நியமிக்கப்பட்டார்.

12 திரு. எம்.ஐ.எப். கமீட் பணிப்பாளர் பணிமனைத் திணைக்களம், 1997 நவெம்பர் 19ஆம் நாளிலிருந்து புதிய கட்டடங்கள் திணைக்களத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கபப்ட்டார்.

## ஓய்வுபெறல்/பதவி விலகல்

1 திணைக்களத் தலைவர் திரு.ஜி.ஏ. பெரேரா 1997 மாச்சு 14ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றர்.

2 நிறைவேற்றுப் பணிப்பாளர் முனைவர் எம்.யு.ஏ. தென்னக்கோன் 1997 மாச்சு 17ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

3 திணைக்களத் தலைவர் முனைவர் எல்.எல். குணரத்தின 1997 யூலை 1ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

## விடுவிப்பிலுள்ள/விடுமுறையிலுள்ள அலுவலர்கள்

1. முனைவர் டி.ஜே.ஜி. பர்னாந்து மக்கள் வங்கியின் தலைவராகவும், பணிப்பாள ராகவும் கடமையாற்றுவதற்கு திட்டமிடல் அமைச்சுக்கு

2 முனைவர் பி.பீ. ஜயசுந்தர திறைசேரியின் துணைச் செலாளராக கடமையாற்றுவதற்கு நிதி திட்டமிடல் அமைச்சுக்கு.

3 திரு. சி.த.எஸ். ஜயவர்த்தன பணிப்பாளராக பணியாற்றுவதற்கு அம்பாறை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக்கு.

4 திரு. எ. அபேரத்தின நிதி திட்டமிடல் அமைச்சுக்கு.

5 முனைவர் (திருமதி) ராணி ஜெயமகா இலண்டனில் பொதுநலவாய நாடுகளின் செயலகத்தில் பணிபுரிவதற்காக விடுமுறையில் உள்ளார்.